
# தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்



தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்

பொதுவெளி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்

(தினக்குரல் பத்திரிகையில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு)

தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

பொதுவெளி

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்
(தினக்குரல் பத்திரிகையில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு)
தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் ©
பதிப்பு: 2016

வெளியீடு
பொதுவெளி
607, பார் வீதி, மட்டக்களப்பு, இலங்கை
தொ.பே: 0771900614
மின்னஞ்சல்: senkathirgopal@gmail.com

ISBN: 978-955-7264-00-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

*தனது அரசியல் ஒழுக்கத்தினால் என்னை*

*எனது பதினெட்டாவது வயதில் ஆகர்சித்து*

*எனது அரசியல் குருவாக என் மனதில் மானசீகமாக அமர்ந்து கொண்ட*

*இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர்*

*அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் - தந்தை செல்வா*

*(31.03.1894 - 27.03.1977) அவர்களுக்கு*

*இந்நூல் சமர்ப்பணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னீடு

இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் வரலாற்றில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் சேர்.பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது மேட்டுக்குடி அரசியல் செயற்பாடுகளும் பின் ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மேற்கொண்ட தமிழர் நலன்களுக்கான அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகளுக்கூடான செயற்பாடுகளும் அதற்குப்பின் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 1949 இல் ஸ்தாபித்த தமிழரசுக் கட்சி மேற்கொண்ட மக்கள் மயப்படுத்தப் பெற்ற ஜனநாயக ரீதியிலான அகிம்சைப் போராட்டமும் - 1972 இல் தமிழ்க் காங்கிரஸும் தமிழரசுக் கட்சியும் இணைந்து 'தமிழர் கூட்டணி' யாகிப் பின் 1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியாகி மேற்கொண்ட வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானமான தனிநாட்டுக் கோரிக்கையும் - அக்கோரிக்கை பிரசவித்த கடந்த முப்பது வருடகால ஆயுதப் போராட்டமும் - 2009 மே யில் முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் தற்போதைய தமிழர் அரசியல் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்னெடுக்கப் பட்டுவரும் இராஜ தந்திரப் போராட்டமும் (இவ்வாறுதான் அழைக்கப் படுகின்றது. இது உண்மையில் இராஜதந்திரமா என்பது வேறு விடயம்) எனத் தொடரும் கடந்த எழுபத்தைந்து வருடகால தமிழர்தம் அரசியல் தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தந்துள்ள சமூக பொருளாதார அடைவுகள் எவை என்று யார் சரி? யார் பிழை? எது சரி? எது பிழை என்கின்ற வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால் காய்தல் உவத்தல் இன்றி ஓர் 'ஐந்தொகைக்கணக்கு'ப் பார்த்தால் விளைவு பூச்சியம் அல்லது மறைப் பெறுமானமே. சேர் பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது அரசியல் முயற்சிகளும் - 1940களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் இலங்கைக்கான சோல்பரி அரசியல் அமைப்பு உருவாக்கச் செயற்பாட்டின்போது முன்வைத்த 'ஐம்பதுக்கு ஐம்பது' கோரிக்கையும் - பின் இலங்கைத் தமிழரசுக்கட்சி எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் முன் வைத்த 'சமஸ்டி'த் தீர்வுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையும் - அதற்குப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி முன் வைத்த 'தமிழீழத்' தனி நாட்டுக் கோரிக்கையும் - தனிநாட்டிற்கான ஆயுதப் போராட்டமும் என்று இவை எல்லாமே தோல்வியுற்று தமிழர் அரசியலின் இன்றைய யதார்த்தம் என்னவெனில் பட்டு வேட்டிக்குக் கனவு கண்டு இறுதியில் இடுப்பிலே கட்டியிருந்த கோவணத் துண்டையும் இழந்த நிலையில் - பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்கைப் பிடித்த கதையாக - 'பிச்சை வேண்டாம். நாயைப் பிடி' எனும் படியாகத் தாழ்ந்து போயுள்ளது.

ஜி.ஜி.பொன்னம்பலம் காலத்துத் தமிழ்க் காங்கிரஸும் இன்றில்லை. தந்தை செல்வா காலத்துத் தமிழரசுக் கட்சியும் இன்றில்லை. இருவரும் இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் இன்றில்லை. இன்றிருக்கும் தமிழர்களின் அரசியல் தலைமையென்பது 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' எனும் பெயர்ப் பலகையை மட்டும் மாட்டிக் கொண்டு மக்களை மையப்படுத்தாது தேர்தலை மட்டுமே மையப்படுத்தி மக்களைக் குறிப்பிட்ட கட்சியொன்றின் சின்னத்திற்குப் புள்ளடி போடும் இயந்திரங்களாக மூளைச்சலவை செய்து 'வாக்குப் பெட்டி' அரசியல் நடாத்தும் முகவர் ஆக மாறி விட்டது. தமிழ்த் தேசியத்தை முன்வைத்து அரசியல் பிழைப்புத்தான் இன்று இலங்கைத் தமிழர் அரசியலில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இத்தகைய துர்ப்பாக்கிய நிலையில் தமிழர்கள் உணர்ச்சியூட்டும் மரபுவழி அரசியலிலிருந்து விடுபட்டு பூகோள அரசியல், பிராந்திய அரசியல் மற்றும் தென்னிலங்கை அரசியல் ஆகியவற்றின் தட்ப வெப்பங்களைக் கணக்கிலெடுத்து அதற்கேற்ப அரசியல் தந்திரோபாயங்களை வகுத்து எப்போதுமே மக்கள் நலன் சார்ந்த அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய வினைத்திறன் மிக்க மாற்று அரசியல் சக்தியொன்றினை அடையாளம் காணும் தேவை எழுந்துள்ளது. இந்தப் பின்புலத்தில் தமிழர்களின் அரசியலில் மாற்றம் தேவை என்ற ஆதங்கமும் அவ்வாதங்கம் அளித்த ஆவேசமுமே இந்நூலிலுள்ள கட்டுரைகளை எழுத என்னை உந்தின. இந்நூலின் வரவு இலங்கைத் தமிழர் அரசியலில் மாற்றத்தை நோக்கிய ஐக்கியத்திற்கான ஆரம்பப் புள்ளியை இடும் என்பது எனது எதிர் பார்ப்பும் நம்பிக்கையுமாகும். அந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக நிகழாது போனாலும் எனது காலத்தில் எனக்குரிய சமூகப் பொறுப்பினையுணர்ந்து மாற்றத்திற்கான விதையைத் தூவியுள்ளேன். உரிய நேரத்தில் அது முளைவிடும் என்ற ஆத்ம திருப்தியுடனாவது எனது மூச்சு அடங்கட்டும் என்ற சிந்தனைத் தெளிவுடனும் பற்றுறுதி யுடனும் இந்நூலை எனது வாஞ்சைக்குரிய இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழர்களுடைய கரங்களில் ஒப்படைக்கின்றேன். இந்நூலின் சமூகப் பயன்பாடு இவர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

இந்நூலிலுள்ள கட்டுரைகள் 'தினக்குரல்' பத்திரிகையில் வெளிவர உதவியும் ஊக்கமும் அளித்த எனது ஊடக நண்பர்கள் தனபாலசிங்கம், ஜெயேந்திரன், ஹரன், பாரதி இராஜநாயகம் ஆகியோருக்கும் இக்கட்டுரைகள் வெளிவந்த காலத்தில் தொலைபேசியிலும் நேரிலும் என்னைத் தட்டிக் கொடுத்த வாசக அன்பர்களுக்கும் இக்கட்டுரைகளை அழகாக அச்சு வாகனமேற்றி நூலுருவாக்கிய நண்பர் க.குமரன் அவர் களுக்கும் என் உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னீடு vii

1. தமிழ் மக்களுக்கு ஐக்கியப்பட்ட
மாற்று அரசியல் சக்தியொன்றின் அவசியம் 1

2. தமிழ் மக்களின் இன்றைய அரசியல் தேவை என்ன? 9

3. தமிழர் அரசியலைப் பலப்படுத்துவது எப்படி? 17

4. தமிழ்மக்களுக்குச் 'சிலுசிலுப்புத்' தேவையில்லை 21

5. உத்தேச (புதிய) அரசியல் யாப்பும் தமிழ் மக்களும் 27

6. இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழர்களும் முஸ்லீம்களும் 32

7. தமிழர் அரசியல் யதார்த்தத்தை நோக்கிச் செல்ல வேண்டும் 39

8. தெளிவான நிகழ்ச்சி நிரல் இல்லாத
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 45

9. தீர்வுப் பயணத்தில் சிங்கள மக்களின்
மனங்களை வெல்வது அவசியம் 51

10. தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவதைவிட
தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்குவதே முக்கியம் 59

11. தமிழர் அரசியலில் மாற்றம் தேவை 66

12. தமிழ் மக்களின் கேள்விகளுக்குக் கூட்டமைப்பிடம்
பதில் உண்டா? 77

13. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
அடுத்துச் செய்ய வேண்டியது என்ன? 84

14. தமிழ்த் தேசிய அரசியலின்
தேக்க நிலை களையப்பட வேண்டும்! 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## தமிழ் மக்களுக்கு ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றின் அவசியம்

யார் சரி? யார் பிழை? அல்லது எதுசரி? எது பிழை என்ற வாதப்பிரதி வாதங்களை விடுத்து வடகிழக்குத் தமிழர்களுடைய கடந்த எழுபது வருடகால உரிமைப் போராட்ட அரசியலும் அந்த அரசியல் பிரசவித்த கடந்த முப்பது வருடகால தமிழீழத் தனிநாட்டிற்கான ஆயுதப் போராட்டமும் இலங்கையின் வடக்குகிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சி னைகளைச் சர்வதேச மயப்படுத்தியதைத் தவிர - அதற்காகத் தமிழர்கள் கொடுத்த விலை மிக மிக அதிகமானது - உள்நாட்டில் தமிழ் மக்க ளுக்கு வேறு எந்தவிதமான சமூக பொருளாதார நன்மைகளையும் பெற்றுத்தரவில்லை. ஒரு சமூகத்தின் அரசியல் தலைமையின் அரசியல் செயற்பாடுகள் அது பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தைச் சமூக பொருளாதார ரீதியாக மேம்பாடடையச் செய்வதாக அமைதல் வேண்டும். ஆனால் துரதிர்ஸ்டவசமாகத் தமிழர் அரசியலில் அது நிழவில்லை. காரணம் தமிழ் மக்கள் மேலெழுந்தவாரியாக ஓர் உணர்ச்சிமயமான அரசியலை நோக்கி உந்தப்பட்டார்களே தவிர அறிவுபூர்வமான அரசியலை நோக்கி ஆற்றுப்படுத்தப்படவில்லை. ஆரம்ப காலத்தில் மக்களை அரசியல் மயப்படுத்தவும் அணிதிரட்டவும் உணர்வுபூர்வமான அரசியல் செயற்பாடுகள் தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் காலவரையில் அவ்வாறு அணி திரட்டப்பட்ட மக்களை அடுத்தடுத்த கட்டங்களில் அறிவுபூர்வமான அரசியலின்பால் ஆற்றுப் படுத்தக் கடந்த காலங்களின் தமிழ் அரசியல் தலைமைகள் தவறி விட்டன. இந்தப் பின்புலத்தில் கடந்த எழுபது வருடகால அரசியலில் தமிழர்கள் எய்திய 'அடைவுகள்' குறித்த 'ஐந்தொகைக் கணக்கு' ஒன்றினைக் காலம் கடந்தாயினும் பார்ப்பது தமிழ் மக்கள் எதிர்காலத்தில் செல்ல வேண்டிய அரசியற் திசையைத் தீர்மானிக்க உதவும். இவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐந்தொகைக் கணக்கு' ஒன்றின் 'நிகரஇலாபம்' என்னவெனில் இலங்கையின் வடக்குகிழக்குத் தமிழர்கள் பட்டுவேட்டிக் கனவுடன் பாடுபட்டு இறுதியிலே இன்று இடுப்பிலே கட்டியுள்ள கோவணத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 'பிச்சை வேணாம் நாயைப்பிடி' எனும்படியாக அரசியலில் பலவீனப்பட்டுள்ளனர். கோவணம் பறிபோன பின்பு பட்டு வேட்டி கிடைக்கப் பெற்றாலும் அதனால் பலனில்லை. கண்கெட்ட பின் சூரியநமஸ்காரம் பண்ண முடியாது. கடந்த முப்பது வருட கால யுத்தம் காரணமாக எழுந்த பக்க விளைவுகளான காணாமல் போனவர்கள் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, உயர்பாதுகாப்பு வலய விடுவிப்பு, மீள்குடியேற்றம், வடக்குகிழக்கில் இராணுவப் பிரசன்னக் குறைப்பு, மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றம் குறித்த சர்வதேச விசாரணை, யுத்த காலத்தில் கணவன்மாரையும் பிள்ளைகளையும் இழந்து இன்று பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரப் பிரச்சினை போன்ற விடயங்கள் மேலெழுந்து 'இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு' என்ற பிரதான எண்ணக்கரு பின் தள்ளப்பட்டுள்ளமையே இன்றைய களநிலையாகும். தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் மற்றும் கலை கலாசார இருப்பு எதிர்காலத்தில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வைக்கண்டு வடக்கு கிழக்கில் கிராம மட்டத்தில் - உள்ளூராட்சி அலகு மட்டத்தில் தமிழ்ச் சமூகத்தைச் சமூக பொருளாதார ரீதியாக வலுப்படுத்திப் பேணிப் பாதுகாத்துத் தக்கவைக்கின்ற செயற்பாடுகளை மிக நுட்பமாக முன்னெடுக்கின்ற சமகாலத்தில் இனப்பிரச்சினைக்கான நடைமுறைச் சாத்தியமான தீர்வை நோக்கிய துரிதமான அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளக்கூடிய 'செயற்பாட்டுத்திறன்' மிக்க மாற்று அரசியல் சக்தியொன்று தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்படுதல் இன்றைய சூழலில் தமிழ் மக்களின் உடனடி அவசியத் தேவையாகும். அரசியலை மூன்று வகையாகப் பார்க்கலாம். ஒன்று தனிநபர் அரசியல் - Politics for an individual. தனிநபர் ஒருவர் 'வாக்கு வங்கி எந்தக் கட்சிக்கு உண்டு; எந்தக் கட்சியில் தனக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்கும்; எந்தக் கட்சியில் நின்றால் தேர்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் வென்று பதவி நாற்காலியில் அமரலாம்.' எனத் தன்னை மட்டுமே மையப்படுத்தியும் தன் அரசியல் எதிர்காலத்தை மட்டுமே சிந்தித்தும் அதற்கேற்றவாறு அரசியலில் ஈடுபடுவது. இத்தகைய 'தனிநபர் அரசியல்' ஒரு பிழைப்பேயன்றி வேறல்ல. எந்தவிதமான விடுதலைப் போராட்ட அரசியல் பின்னணியோ - ஆயுதப் போராட்டப் பின்னணியோ, சமூகச் செயற்பாட்டுப் பின்னணியோ இல்லாது தேர்தலில் போட்டியிடுவதற்கென்றே இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் அதாவது 1987 இன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து கொண்டவர்களையும், மேற்கூறப்பட்ட எந்தப் பின்னணி களும் இல்லாது தேர்தலில் போட்டியிடுவதற்கென்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கட்சியான தமிழரசுக்கட்சியில் யுத்தம் முடிந்த பின்னர் வலிந்து வந்து இணைந்து கொண்டவர்களையும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (தமிழரசுக் கட்சியின்) வேட்பாளர் நியமனங்களைப் பெறுவதற்காக வேறு வழியின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் 'கோட்டா'க்களுக் கூடாக நுழைந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டி யிட்டவர்களையும் இந்த 'தனிநபர் அரசியல்' வகைக்குள் சேர்க்கலாம். இவர்களால் மக்களுக்கு எந்த நன்மைகளும் இல்லை. இத்தகையோரை வைத்துக் கொண்டு மக்களுக்கான அரசியலை முன்னெடுக்க முடியாது.

அடுத்தது கட்சி அரசியல் - Politics for the party. இது தனிநபர் ஒருவர் தன்னை வளர்த்துக் கொள்வதற்காக தான் சார்ந்த கட்சியை மட்டுமே தூக்கிப் பிடித்து மற்றக் கட்சிகளுடன் எப்போதும் பகை முரண்பாடுகளுடனேயே பழகி மக்கள் நலனைவிடக் கட்சி நலனுக்கே முன்னுரிமை கொடுத்துச் செயல்படுவது. இன்று ஏதோ ஒருவகையில் அதிகாரம் படைத்த தமிழ்க் கட்சிகள் யாவும் இந்தக் கட்சி அரசியலைத் தான் செய்து கொண்டிருக்கின்றன. இதுவும் மக்களுக்கு உதவப்போவ தில்லை. கட்சி அரசியலுக்குள் மட்டுமே மூழ்கும் போது மக்கள் நலன்கள் புறக்கணிப்புள்ளாகின்றன.

மற்றது மக்களுக்கான அரசியல் - Politics for the people. இதனை இன்று அதிகாரத்திலுள்ள எந்தத் தமிழ்க் கட்சியும் முன்னெடுக்கவில்லை யென்பதே தமிழர்களின் தலைவிதி. இந்தத் தலைவிதியை மாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்காகவே இன்று தமிழ் மக்களுக்கு மக்கள் நலனை மட்டுமே சார்ந்து செயற்படக்கூடிய ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றின் தேவை எழுகின்றது.

## இதனை எவ்வாறு சாத்தியப்படுத்தலாம்?

கடந்த கால அரசியல் அனுபவங்களையும் மக்களின் மனப்போக்கையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது நடைமுறைச் சாத்தியமான ஒரேயொரு வழிதான் உண்டு. அது என்னவெனில், இன்று வடக்குகிழக்கின் அரசியல் களத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சகல பதிவு செய்யப் பட்ட அரசியற் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினூடாக உள்வாங்கப்பட்டு அல்லது இணைக்கப்பட்டு உடனடியாக இவ்வாறு விரிவுபடுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் திணைக்களத்தில் தனியான ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இத்தகையதோர் ஐக்கியப் பட்ட அரசியல் தலைமையைத்தான் அப்பாவித்தமிழ் மக்கள் இன்று அவாவி நிற்கின்றார்கள். இதனால் பல நன்மைகள் விளையும்.

சகல தமிழ் அரசியல் கட்சிகளிலும் அங்கம் வகிக்கின்ற அரசியல் அனுபவம், ஆளுமை, ஆற்றல் மிக்கவர்கள் ஒன்றிணைவர். தனிநபர் மற்றும் கட்சி அரசியல் போட்டா போட்டிகள் காரணமாக தமிழ் அரசியலில் விரக்தியும் சலிப்பும் உற்று அரசியற் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டாது ஒதுங்கி நிற்கும் கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களையும் இவ்வாறான ஐக்கியப்பட்ட தோர் பொறிமுறைக்குள் உள்ளீர்க்க முடியும். மக்களுக்கான அரசியல் எனில் இவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு இணைந்து கொள்வர். இதனால் கட்டுக்கோப்பான நிர்வாகக் கட்டமைப்பும், தெளிவான அரசியல் நிகழ்ச்சி நிரலும், அந்நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்கான செயற்பாட்டு உபாயங்களும் தானாகவே உருவாக வாய்ப்பு ஏற்படும். தீர்மானங்கள் விவாதித்து எடுக்கப்படக்கூடிய பொதுவெளி உருவாகும். தமிழ் மக்கள் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் ஒற்றுமையாகவும் அரசியல் செயற்பாடுகளில் ஆர்வமுடன் ஈடுபட முன்வருவர். தமிழ்ச் சமூகம் பலம் பெறும். எதிர்கால நம்பிக்கை ஓங்கும். தேர்தல் வெற்றி களை மட்டுமே மையப்படுத்திய தற்போதைய சுயநல அரசியலிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபட்டு தமிழர் அரசியல் மக்கள் நலன்களை மட்டுமே மையப்படுத்திய 'மக்களுக்கான அரசியல்' ஆகப் பரிணாமம் பெறும். இது தமிழர்களைச் சிறந்ததொரு சமூக பொருளாதார அரசியல் எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும். சிறந்ததொரு அரசியல் செல்நெறி தமிழர்களிடையே அறிமுகமாகும்.

## இதனைச் செய்வது யார்? அதாவது பூனைக்கு மணி கட்டுவது யார்?

இன்றைய தமிழ் அரசியல் சூழலில், தற்போதுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செல்நெறி குறித்து பலதரப்பட்ட விமர்சனங்கள் எழுந்தபோதிலும்- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையேயும் மற்றும் சில கட்சிகளின் உள்ளேயும் முரண்பாடுகள் நிலவுகின்ற போதிலும் ஜனநாயக ரீதியாகத் தேர்தலில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற பெரும்பான்மைத் தமிழர்களின் வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழர்களின் அரசியல் தலைமையாகக் கருதப்படுகின்ற தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுக்கே இவ்வாறான ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றை தமிழ் மக்களுக்கு உருவாக்குவதற்கான முயற்சியை முன்னின்று எடுப்பதற்கான கடமைப்பாடும் பொருத்தப்பாடும் உண்டு.

சில கொள்கை மற்றும் உள்ளக முரண்பாடுகளால் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து வந்து 1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்த அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்கள் 'சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது' என்று சொல்லிக்கொண்டு தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடனான பகைமை அரசியலைத்தான் 1972 வரை முன்னெடுத்தார். தமிழர்களுடைய விடுதலைப் போராட்ட அரசியல் என்பது வடக்கில் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையிலான தேர்தல் போட்டியாகத்தான் பெரும்பாலும் இருந்தது. சிங்கள முற்போக்கு சக்திகளுடன் குறைந்த பட்சம் வடக்கிலிருந்த இடதுசாரித் தலைவர்களுடனாவது இணைந்து செயல்பட முடியாதபடியே தமிழ்க்காங்கிரஸ் - தமிழரசுக் கட்சிகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையிலான கட்சி அரசியல் போட்டி தமிழ் மக்களின் உழைப்பையும் நேரத்தையும் வளங்களையும் உறிஞ்சியது. ஆனால், 1972 இல் பிரதமர் அமரர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசு தமிழர்களின் அடிமைச்சாசனம் என வர்ணிக்கப்பட்ட குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்றியதைத் தொடர்ந்து 'தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறித் தனது அரசியல் தோல்வியினை நேர்மையுடன் ஒப்புக்கொண்ட தந்தைசெல்வா அவர்கள் தமிழ் மக்களின் ஐக்கியம் கருதி தனது அரசியல் எதிரியான ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் வீட்டுப்படியேறிச் சென்று பேசி தமிழரசுக் கட்சியையும் தமிழ்க்காங்கிரசையும் இணைத்துத் தமிழர் கூட்டணியை 1974 இல் உருவாக்கினார். இதுவே பின்னர் 1976 இல் வட்டுக் கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியது என்பது இரா.சம்பந்தன் அவர்களும் அறிந்த விடயம்தான். எனவே தந்தை செல்வாவுக்கு அன்றிருந்த மனப்பக்குவமும் மனத்திடமும் விசாலித்த மனப்போக்கும் தற்றுணிவும் இன்று இரா.சம்பந்தன் அவர்களுக்கு வரவேண்டும்.

இவ்வாறான ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்று தமிழ் மக்களிடையே கட்டியெழுப்பப்படுவதை விரும்பாத சில தன்னலம் கொண்ட நபர்களும் அமைப்புக்களும் உள்நாட்டிலும் புலம்பெயர்நாடு களிலும் பல்வேறு காரணங்களுக்காக இயங்கிக் கொண்டிருப்பதையும் மறுக்க முடியாது. இவர்கள் இத்தகைய நல்ல முயற்சியினை எதிர்க்கக் கூடும். அதற்கேற்றவாறான அழுத்தங்களை இரா.சம்பந்தன் அவர்களின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரயோகிக்கக்கூடும். இரா. சம்பந்தன் அவர்கள் இவற்றிற்கெல்லாம் எடுபடாது தற்றுணிவுடன் மேற்கூறியவாறு ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றினைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் முன்வர வேண்டும். மக்களுக்காகத் தான் கட்சியே தவிர கட்சிக்காக மக்கள் அல்ல என்பது எல்லோராலும் மனம் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இத்தகைய ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றிற்கு எதிர்காலத்தில் இரா.சம்பந்தன் அவர்களே தலைமையேற்பதற்குத் தடங்கல்கள் ஏதும் இல்லை. தமிழ் மக்களுக்கான இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றி வைப்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய செயற்பாட்டினைத் தாமதமின்றி அவர் ஆரம்பிக்க வேண்டும். வடக்குகிழக்கில் செயற்படுகின்ற சகல பதிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் உள்வாங்கிய உத்தேச ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியாகிய 'புதிய' தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தேர்தல்கள் ஆணையாளரினால் அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கோரப் படுவதற்கு முன்பே முடிந்தவரை அடுத்த வருடம் மார்ச் மாதத்திற்கு முன்பே அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படும் வகையில் ஐக்கியத்திற்கான செயற் பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படல் அவசியம். காரணம் உள்ளூ ராட்சித் தேர்தல்களுக்கு நியமனம் கோரப்பட்டுவிட்டால் அத் தேர்தல் முடியும்வரை புதிதாக ஒரு அரசியல் கட்சியைத் தேர்தல் சட்ட விதிகளின்படி பதிவு செய்ய முடியாது போய்விடும். சகல தமிழ் அரசியல் கட்சிகளிலும் அங்கம் வகிக்கும் பொதுநலவிரும்பிகள் தத்தம் கட்சிகளில் இவ்வாறானதொரு ஐக்கியத்திற்காகக் குரல் கொடுத்துச் செயற்பட வேண்டும். மட்டுமல்ல, அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்காத உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலுமுள்ள பொதுவான நலன்விரும்பிகளும் இத்தகைய ஐக்கியம் ஏற்பட தங்களால் முடிந்த செல்வாக்கினைச் செலுத்த வேண்டும். சகல தமிழ் அரசியல்கட்சி களும் தத்தம் கடந்த காலப் பகை முரண்பாடுகளைக் களைந்து கருத்து முரண்பாடுகள் இருப்பின் அவற்றை நட்பு முரண்பாடுகளாகக் கருதிப் பேசித் தீர்த்து இத்தகைய ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றின் கீழ் மக்கள் நலனுக்காக ஒரு குடையின் கீழ் ஒன்றிணைய முன்வர வேண்டும். இதற்கான சாதகமானதொரு பொதுவெளியை தமிழ்ச் சூழலில் உருவாக்குவதற்காகச் சில மாதங்களுக்காவது உள்முரண் பாடுகளையும் ஒருத்தர் மீதான ஒருத்தரின் விமர்சனங்களையும் தவிர்த்துக் கொள்ளும் வகையில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் நல்லெண்ண நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். கட்சிகளும் அக்கட்சியின் முக்கியஸ்தர்களும் பரஸ்பரம் நல்லெண்ணச் சமிக்ஞை களை வெளிப்படுத்த வேண்டும். தமிழ் ஊடகங்களும் இதற்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். காரணம் இவ்வாறானதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றின் தேவை தனிநபர் களுக்கோ அல்லது தனிப்பட்ட கட்சிக்கோ தேவையானதல்ல; இது முழுக்க முழுக்க மக்களுக்குத் தேவையானதொன்றாகும்.

எனவே, முதலில் செய்ய வேண்டியது என்னவெனில், இவ்வாறான ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியொன்றினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் வடக்குகிழக்கில் செயற்படுகின்ற சகல தமிழ்க் கட்சி களுக்கும் ஒரு கூட்டுச் சந்திப்புக்கான அழைப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் இவ்வருட இறு திக்குள் இச்சந்திப்பு நிகழும் வண்ணம் விடுக்க வேண்டும். இதனை அகவை எண்பத்திநான்கைக் கடந்த மூத்த அரசியல் வாதியான அவர் ஒரு தந்தையின் ஸ்தானத்திலிருந்து செய்வார் என்பது அப்பாவித் தமிழ்மக்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்.

*12.12.2015*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# தமிழ் மக்களின் இன்றைய அரசியல் தேவை என்ன?

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்துவந்து 1949 இல் அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம்(தந்தை செல்வா) அவர்கள் உருவாக்கிய இலங்கைத் தமிழரசுக்கட்சியினதோ அல்லது 1972 குடியரசு அரசியலமைப்பைத் தொடர்ந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸூம் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் இணைந்து 1974 இல் தமிழர் கூட்டணியாகிப் பின் 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் பெயர்மாற்றம் பெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியினதோ அல்லது 2001ல் தமிழர்விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ், ரெலோ, ஈ.பி. ஆர். எல். எப் ஆகிய நான்கு கட்சிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினதோ (இன்று அகில இலங்கைத் தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் என்ப வையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள்) அடிப் படைக் கொள்கைகளுக்குத் தமிழ் மக்கள் எதிராக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

எனவே பிரச்சினை இதுவல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அர்ப்பணிப்புடனும் அரசியல் கண்ணியத்துடனும் இராஜதந்திரத்துடன் கூடிய செயற்பாட்டுத்திறனுடனும் செயற்படுகின்றதா? என்பதுதான் பிரச்சினை.

தமிழர்கள் எதிர்நோக்குகின்ற போர்க்குற்றவிசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனவர்களைக் கண்டறிதல், இராணுவப் பிரசன்னக்குறைப்பு, காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் விதவைகள் மறுவாழ்வு உள்ளிட்ட வாழ்வாதாரப் பிரச்சனைகள் அத்துடன் பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில் அதாவது அடி மட்டங்களில் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் இருப்பைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக் குறியாக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு மார்க்கங்கள்- இவைகள் அனைத்துக்கும் மேலாக இனப்பிரச்சினைக் கான நிரந்தர அரசியல் தீர்வு - இவற்றிற்கான தீர்வுகளை நோக்கிய வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முதலில் தேவைப்படுவது தமிழ் மக்களுக்கோர் 'ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறை' ஆகும். அத்தகைய அரசியல் பொறிமுறையொன்று இலங்கையின் வடக்குகிழக்குத் தமிழ்மக்களுக்குத் திருப்தியான வகையிலே இன்று உள்ளதா எனும் வினாவுக்குரிய விடை, இல்லை என்பதே.

ஜனநாயகரீதியாக நடைபெறுகின்ற தேர்தல்களிலே வேறுவழி யின்றி பாரம்பரியத் தமிழ்க்கட்சி என்ற கோதாவில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கே பெரும்பான்மைத் தமிழர்கள் வாக்களித்துத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களையே பெரும்பான்மை யாக வெல்லவைக்கின்றார்கள் என்பதால் மட்டுமே தமிழரசுக்கட்சி மேலாண்மை செலுத்தும் இன்றுள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தமிழர்களுக்கான ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறையாகிவிடப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகிப் பதினான்குவருடங்கள் கழிந்தும் - ஸ்ரீ லங்கா ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான யுத்தம் முடிவுக்கு வந்து ஆறுவருடங்கள் கழிந்தும் உள்ள இன்றைய நிலைமையிலாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கென கட்டுக்கோப்பான நிர்வாகக் கட்டமைப்போ வலைப்பின்னலோ இல்லை. குறைந்தபட்சம் அதன் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலேதானும் முறையான ஒருங்கிணைப்பு இல்லை. அரசியல் கட்சியாக இதுவரை பதிவு செய்யப்படவும் இல்லை. 'தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு' என்கின்ற பெயர்ப்பலகையை மட்டும் மாட்டிக் கொண்டு தமிழரசுக்கட்சி தன்னிச்சையாக ஆதிக்கம் செலுத்துகின்றது. தனக்குள்ள வாக்குவங்கிப் பலத்தை வைத்துக் கொண்டு பங்காளிக்கட்சிகளை ஓரங்கட்டுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மீது ஆரோக்கியமான விமர்சனங்களை முன்வைப்பவர்களைத் தீண்டத்தகாதவர்கள் ஆக்கித் தமிழ்த் தேசியத் துரோகிகள் என இலகுவாக முத்திரை குத்தியும் விடுகிறது. தமிழர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியத்தை இன்றுள்ள தமிழரசுக் கட்சிதான் குலைத்துக் கொண்டிருக்கிறது.

தந்தை செல்வா காலத்துத் தமிழரசுக்கட்சி இன்றில்லை. தந்தை செல்வா தன் வாழ்நாளில் தனது அரசியல் இலக்கினை அடையா விட்டாலும் கூட அவரிடம் உண்மையும் நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் அர்ப்பணிப்பும் அரசியல் கண்ணியமும் இருந்தன. ஆனால் இன்றுள்ள தமிழரசுக் கட்சித் தலைவர்களிடம் தனி நபர்களின் தேர்தல் வெற்றிகளை மட்டுமே மையப்படுத்திய சிந்தனைகளையும் அத்தனிநபர்களின் பேர், புகழ், பட்டம், பதவி, பணம், விளம்பரம், வாழ்க்கை வசதிகளை நோக்கிய சிந்தனைகளையுமே காண முடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற போர்வைக்குள்ளே தமிழரசுக் கட்சியின் குறுகிய கட்சி அரசியல்தான் நடைபெறுகிறதே தவிர மக்களுக்கான அரசியல் முன்னெடுக்கப்படவில்லை. மக்களுக்கான அரசியலுக்கு முதலில் தேவைப்படுவது ஐக்கியம் ஆகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயும் அது இப்போது இல்லை. தமிழரசுக் கட்சியென்பது இன்று தனிநபர்கள் சிலரின் 'கூட்டுவியாபார முகவர்' போலாகி விட்டது. மக்களுக்காகக் கட்சி என்ற நிலைமாறி கட்சிக் காகவே மக்கள் எனும்படியாக மக்கள் மூளைச்சலவை செய்யப் பட்டுள்ளனர். 'குறுந்தமிழ்த் தேசியவாத' உரைகளும், ஊடக அறிக்கை களும் உணர்ச்சியூட்டும் செயற்பாடுகளும் தமிழ்மக்களை அறிவு பூர்வமாகச் சிந்திக்கவிடாமல் அவர்களைப் போதையூட்டி மூளைச் சலவை செய்து உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவர்களைக் கொதிநிலையில் வைத்துக் கொண்டு தேர்தல் காலங்களில் வாக்குகளை வேட்டையாடு வதற்குத் தமிழரசுக் கட்சிக்குக் கைகொடுக்கின்றன. இந்த நிலைமை மாறும் வரை ஐக்கியம் என்பது பெயரளவில்தான்.

முதலில் தமிழரசுக் கட்சி சுத்திகரிக்கப்படல் வேண்டும். அதற்கான அழுத்தம் மக்களிடமிருந்து தலைவர்கள் எனச் சொல்லப்படுபவர்களை நோக்கி வரவேண்டும்.

இன்றைய தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியலின் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்காதவர்களையும் - அறவழிப் போராட்டமாயினும் சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப் போராட்டமாயினும் சரி கடந்த காலங்களில் அவற்றில் எந்தப் பங்கும் வகியாது பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்சிகளில் அங்கம் வகித்து தேவையேற்பட்ட போது காட்டியும் கொடுத்து 'இலாபம்' அடைந்தவர்களையும் (அவர்களில் சிலர் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்துள்ளனர்: இருக்கின்றனர்) - சமூகத்தின் விமோசனத்திற்காக எந்த ஒறுப்பிற்கும் இழப்புக்கும் உட்படாதவர் களையும் - போராட்ட வலியை உணராதவர்களையும் - மக்களின் அவலங்களை வர்த்தக மூலதனமாக்கித் தங்களைப் பொருளாதார ரீதியாக வளர்த்துக் கொண்டவர்களையும் - தாங்களும் தங்கள் குடும்பமும் என வாழ்ந்து அரசாங்கத்திற்கு 'விசுவாசமான' ஊழியர் களாகப் பணியாற்றி தங்கள் அரச சேவைக் காலத்தில் கூட சமூகத்திற்கு எந்த நன்மையும் புரியாது 'பணி' புரிந்து அதி உச்ச ஓய்வூதியப் பணத்தையும் பெற்றுக் கொண்டு ஓய்வுபெற்றபின் முகவரி தேடி 'பொழுது போக்கு' அரசியலுக்கு வருபவர்களையும் - பாரம்பரியத் தமிழ்க்கட்சி என்ற வகையில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத் திற்குத் தமிழ் மக்களிடையேயுள்ள 'வாக்குவங்கி' யைப் புத்தி சாலித்தனமாகப் புரிந்து வைத்துக் கொண்டு தேர்தல்களில் போட்டி யிடுவதற்காக மட்டுமே கட்சியில் சேரவரும் கொள்கையற்றவர்களையும் - சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைந்ததால் கூலிக்கு மாரடிக்க வந்தவர் களையும் கட்சிக்குள் பெருமளவில் உள்வாங்கிச் சுயநலமிகளின் கூடாரமாகிவிட்டது.

தந்தை செல்வா காலத்திலிருந்தே தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியலில் ஈடுபட்டுப் பலவிதமான இழப்புக்குள்ளானவர்கள் - அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டு அரச படைகளிடம் அடியுதை வாங்கியவர்கள் - உரிமைப்போராட்ட அரசியல் ஈடுபாடு காரணமாகச் சிறைவாசம் அனுபவித்தவர்கள் - உரிமைப் போராட்ட அரசியலுக் காகவே தங்கள் வாழ்க்கை முழுவதையுமே அர்ப்பணித்தவர்கள் - உரிமைப் போராட்ட அரசியலில் ஈடுபட்டு தங்கள் அரசாங்க வேலைகளையும் ஓய்வூதியங்களையும் இழந்தவர்கள் மற்றும் மக்கள் நலன் சார்ந்து சிந்தித்துச் செயற்படுகின்ற கலை, இலக்கிய, ஊடக மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் - சமூகத்திற்குப் பயன்படக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக உணர்வுள்ள கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள், அரசியல் அனுபவமும் ஆளுமையும் ஆற்றலும் படைத்தவர்கள் - புரட்சிகர மற்றும் போராட்ட உணர்வுள்ளவர்கள் என்று சமூகத்திலுள்ள பயன் பாடுமிக்கவர்களைத் தேடி கட்சியில் உள்வாங்காது தமிழரசுக் கட்சி வேண்டுமென்றே தவிர்த்து வருகிறது. இப்படிப்பட்டவர்களை உள் வாங்கினால் சுயநலநோக்குடன் கட்சிக்குள் புகுந்துள்ள தங்கள் இடம் மற்றும் பதவி எல்லாம் பறி போய்விடுமோ என்ற பயம் பலருக்கு. இப்படிப்பட்டவர்களையெல்லாம் உள்வாங்கினால் தலைமைப்பீடத் திடம் ஏன்? எதற்கு? இப்படிச்செய்தால் என்ன? என்று கேள்விகள் கேட்பார்கள்; விவாதிப்பார்கள். இவர்களை வைத்துக்கொண்டு தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்க முடியாது என்ற பயம் தலைமைப்பீடத்திலுள்ளவர்களுக்கு. தலைமைப்பீடத்திற்கு இன்று தலையாட்டிப் பொம்மைகளே தேவை. இப்படியான மக்கள் நலன் பேணாத கட்சிக்கட்டமைப்பொன்றைக் கொண்டு விளங்கும் இன்றைய தமிழரசுக்கட்சி எவ்வாறு மக்கள் நலன் பேணும் அரசியலை முன்னெடுக்கும்.

தமிழரசுக்கட்சியைச் சுத்திகரிக்கும் நோக்கிலான மனப்பக்குவம், விசாலித்த சிந்தனை, அர்ப்பணிப்பு என்பன தற்போதைய அதன் தலைமைப்பீடத்திடமோ அல்லது அக்கட்சியின் இரண்டாம் வரிசை மற்றும் மூன்றாம் வரிசைத் தலைவர்களிடமோ இல்லை. இவர்கள் அனைவரும் எமக்கு ஏன் இந்த வீண்வம்பு என்று - 'வேளாண்மை வெட்ட வந்த நமக்கு எல்லைப் பிரச்சனை எதற்கு' என்று - தற்போது தங்களுக்குக் கிடைத்துள்ள பதவிகளைத் தக்க வைத்துக்கொண்டு பாராளுமன்றக் கதிரைகளின் அல்லது மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர் அல்லது மாகாணசபை உறுப்பினர் அல்லது குறைந்த பட்சம் உள்ளூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர் கனவில் காலத்தை ஓட்டிக்கொண்டிருப்பவர்களே. 'தமிழ்த்தேசியம்' என்ற துரும்பு கையில் இருக்கும்வரை தேர்தல் சீட்டாட்டத்தில் இவர்கள்தானே மீண்டும் மீண்டும் வெல்லப்போகிறார்கள். எனவே கட்சியைத் தூய்மைப் படுத்தும் தேவை இவர்களுக்கு இல்லை. இவர்கள் மாலை மரியாதை, பொன்னாடை, மேடை மற்றும் நாடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டித் திறப்பதற்கு ஏதும் புதிய கட்டிடங்கள்; அதிதிகளாகக் கலந்து கொள்வதற்குப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் போன்ற பொதுவைபவங்கள்; தலையைக் காட்டிக் கொள்வதற்கு ஏதாவது ஆர்ப்பாட்டப் பேரணிகள்; பத்திரிகைகளில் படம் வருவதற்கு ஏதாவது ஊடக சந்திப்பு என்பன கிடைக்காதா என்று தங்களையும் தங்கள் அரசியல் இருப்பையும் விளம்பரப்படுத்திக் கொள்வதற்கென அங்க லாய்த்துத் திரிபவர்கள். தமிழ் ஊடகங்களும் மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்தாமல் மாற்றுச் சிந்தனைகளுக்கும் கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் இடம் கொடுக்காமல் இத்தகைய 'பச்சோந்தி' களுக்கு இரு புறமும் நின்று சாமரம் வீசுகின்றன.

தமிழ் பத்திரிகைகளின் தினசரி மற்றும் வாரவெளியீடுகளின் அரசியல் பக்கங்களை நிரப்பும் அரசியல் 'ஆய்வாளர்கள்' தமிழ் அரசியலில் கடந்த அறுபத்தியேழு ஆண்டுகளாக அரைக்கப்பட்ட அதே மாவையே மீண்டும் மீண்டும் அரைத்து ஏமாற்று அரசியல் செய்யும் இத்தகையோரையே போற்றித் துதி பாடி மக்களை மீண்டும் மீண்டும் குறுந்தமிழ்த் தேசியவாத மூளைச்சலவை செய்து மக்களை மந்தைக் கூட்டங்களாக வைத்து மேய்க்கவே தங்கள் பேனா மையைப் பயன்படுத்துகிறார்கள். மக்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தாமல் ஒரு 'கும்பல் கலாசாரத்தை' நோக்கியே மக்களைத் தமிழ் ஊடகங்கள் அழைத்துச் செல்கின்றன. சில அரசியல் கட்டுரையாளர்கள் தங்கள் ஆக்கங்களில் முழுப் பூசணிக்காயையும் சோற்றுக்குள் மறைக்க முடியாமல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தவறுகளைப் பட்டும் படாமல் சொல்லித் தங்கள் எஜமானர்களைப் பாதிக்காத வகையில் செல்லமாகத் தட்டுகிறார்கள். மாற்றுச் சிந்தனையாளர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பைப் பற்றிக் காத்திரமான விமர்சனங்களை முன்வைக்கும் ஆக்கங்களுக்கு அல்லது அவர்களைப்பற்றிய உண்மைகளை வெளிப் படுத்தும் ஆக்கங்களுக்குத் தேசிய மட்டத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் களம் கொடுப்பதில்லை. ஒரு சில ஆக்கங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை விமர்சிக்கும் அல்லது அவர்களைப் பற்றிய உண்மை களை வெளிப்படுத்தும் காட்டமான வாக்கியங்கள் இடம்பெற்றிருந்தால் அவற்றை நுணுக்கமாகத் தேடிப்பிடித்து பத்திரிகையாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைத் தணிக்கை செய்தும் விடுகிறார்கள். தமிழ்ப்பத்திரிகைகள் பத்திரிகா தர்மத்தைக் கைவிட்டு நடுநிலை தவறி பக்கச்சார்பாகவே நடந்து கொள்கின்றன. இது ஒரு சமூகத்தைப் பொறுத்தவரை ஆரோக்கியமானதல்ல. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும். கடந்த காலங்களில் மாற்றுச் சிந்தனைகளுக்கும் கருத்துக்களுக்கும் இடமளிக்க மறுத்த இறுக்கமான தமிழ்ச்சூழல் தமிழினத்தை இறுதியில் எங்கே கொண்டுபோய் விட்டது என்பதைத் தமிழ்ச்சமூகம் அனுபவ ரீதியாகப் பாடம் படித்தும்கூட மாற்றத்தை நோக்கிச் சிந்திப்பதாயில்லை. மாற்றத்தை நோக்கிச் சிந்திப்பதற்கு மக்களை தற்போதைய தமிழ் அரசியல் தலைமை விடுவதாயில்லை. மாற்றம் தங்கள் அரசியல் பிழைப்புக்கு ஆப்பு வைத்து விடுமோ என்று தற்போதைய அரசியல் தலைமை அச்சம் கொள்கிறது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார அரசியல் பிரச்சனைகள் பற்றிக் கலந்துரையாடி விவாதித்து அவற்றின் தீர்வுக்கான தீர்மானங்களைக் காய்தல் உவத்தல் இன்றி மேற்கொள்வதற்கான ஒரு 'பொது வெளி' இன்றைய தமிழ்ச் சூழலில் இல்லை. இதனை ஏற்படுத்த வேண்டுமாயின் ஒரு கட்டுக் கோப்பான - உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அரசியல் கண்ணியத்துடனும் அர்ப்பணிப்புடனும் வினைத்திறனுடனும் செயற்படக்கூடிய ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறையொன்றினை இனியும் காலம் தாழ்த்தாமல் தமிழ் மக்கள் ஏற்படுத்த வேண்டும். தேர்தல்களில் வீட்டுச்சின்னத்துக்கு வாக்களிப்ப தால் கந்தனோ கணபதியோ பாராளுமன்றத்திற்கோ அல்லது மாகாணச பைகளுக்கோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களுக்கோ செல்வார்கள். அதனால் பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை. எனவே தனி நபரை மையப்படுத்திய அல்லது கட்சியொன்றை மையப்படுத்திய அரசியலைக் கைவிட்டு மக்களை மையப்படுத்திய அரசியலை முன் னெடுப்பதற்கும் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் செல்லவேண்டிய அரசியல் செல்நெறியைத் திசை காட்டுவதற்கும் ஐக்கியப்பட்ட அரசியல் பொறி முறையொன்று இன்று அவசியம். இதனை எவ்வாறு ஏற் படுத்துவது?

இன்றைய தமிழ்ச்சூழலில் இதனை ஏற்படுத்துவதற்கு நடை முறைச் சாத்தியமான வழி யாதெனில், வடக்கு கிழக்கு மாகாணங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் மற்றும் வெகுஜன அமைப்புக்களையும் மற்றும் தனி நபர்களாக நின்று செயற்படும் சமூக, அரசியல் மற்றும் கலை இலக்கிய ஊடக செயற் பாட்டாளர்களையும் உள்வாங்கி தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு 'புது வடிவம்' பெற வேண்டும். இப் புது வடிவம் பெறும் புதிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு காலம் தாழ்த்தாது தேர்தல் திணைக்களத்தில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படவும் வேண்டும். தற்போதைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக விளங்கும் தமிழரசுக்கட்சி இதனைச் செய்ய மாட்டாது. தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தானாகத் திருந்தப் போவ தில்லை. மக்கள்தான் தலைவர்களைத் திருத்த வேண்டும். இதற்கான அழுத்தம் தமிழ் மக்களின் பல தரப்பட்ட தரப்புகளிலிருந்தும் தமிழரசுக் கட்சித் தலைமைக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களிடம் ஓர் விநயமான வேண்டுகோள்.

உங்கள் அரசியல் செயற்பாடுகள் குறித்துப் பலவிதமான விமர் சனங்கள் எழுந்தாலும் கூட இன்று தமிழ் மக்கள் ஓரளவு நம்பிக்கை வைத்துள்ள மூத்த அரசியல் தலைவராக தாங்கள்தான் உள்ளீர்கள். உங்களுக்கும் அகவை எண்பத்திநான்காகி விட்டது. தங்கள் நடையிலும் சற்றுத் தளர்வை அவதானிக்க முடிகிறது. வயோதிபம் இயற்கையானது. அது யாரைத்தான் விட்டு வைத்தது. எனவே தங்கள் காலத்திற்குள்ளாவது மேற்கூறப்பட்டவாறு 'ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறை' ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுங்கள். அப்படிப்பட்ட 'புதிய' தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்குத் தலைமை ஏற்கும் தகுதியும் தங்களுக்குத்தான் உண்டு. அதனை எவரும் தடுக்கப்போவதில்லை. இப் 'புதிய' தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வடிவமைக்கும் கடமைப்பாட்டையும் பொருத்தப்பாட்டையும் வரலாறு தங்கள் மீது சுமத்தி இருக்கிறது. இதனை நீங்கள் முன்வந்து செய்யவில்லையானால் தமிழ் மக்களைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாமல் போய்விடும். தமிழர்களுடைய அரசியல் வரலாற்றில் தங்களால் வடு ஏற்பட அனுமதியாதீர்கள்.

*09.01.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## தமிழர் அரசியலைப் பலப்படுத்துவது எப்படி?

சரியோ? பிழையோ? ஜனநாயக ரீதியாகத் தேர்தல்களில் பெரும்பான்மையான தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைமையாகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பு விளங்குவதால் தமிழர் அரசியலைப் பலப்படுத்துவது சமன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துதல் எனும் எடுகோளுக்கமையவே இக் கட்டுரை எழுத்தப் படுகின்றது.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவது எப்படி?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் குறித்த விமர்சனங்கள் முன்வைக்கப்படும் போதும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போதும் - தமிழ் அரசியல் அரங்கில் ஆரோக்கியமான மாற்றுச் சிந்தனைகள், மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்படும் போதும் அவற்றைச் சீரணித்துக் கொள்ள முடியாத கட்சி அரசியலுக்குள் மூழ்கிப் போன சுயநலமிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தக் கூடாது என்ற வாய்ப்பாட்டையே மீண்டும் மீண்டும் ஒப்புவிக்கின்றனர். ஆம்! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தக் கூடாது என்பது உண்மைதான். அதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் தமிழர்களிடையே இல்லை. அப்படியானால் தமிழ்தேசியக் கூட்டமைப்பை எப்படிப் பலப்படுத்துவது என்று சிந்திப்பதே பயன்மிக்கதாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது மற்றவர்களால் அல்ல, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் போக்குகளாலேயே பலவீனப்பட்டுப் போயுள்ளது. 2001 இல் உருவான தமிழ்தேசியக் கூட்டமைப்பு பதினான்கு ஆண்டுகளைக் கடந்த பின்னருங்கூட அது அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாமல் இருப்பது அதன் மிகப் பெரிய பலவீனம். இதற்குக் காரணம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக விளங்கும் தமிழரசுக் கட்சியின் எதிர் மறையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்போக்கே ஆகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையேதானும் பலமான ஒருங்கிணைப்பு இல்லாதது அடுத்த பலவீனம். 2001இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவான போது தமிழர் விடுதலைக் கூட்டணி (அப்போது அதன் தலைவராக வீ. ஆனந்தசங்கரியும் செயலாளர் நாயகமாக இரா. சம்பந்தன் அவர்களும் இருந்தனர்) அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய நான்கு கட்சிகளுமே இணைந்தன. புளொட் உள்வாங்கப்படவில்லை. 2002 ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதய சூரியன் சின்னத்தின் கீழ் இந்நான்கு கட்சிகளும் கூட்டாகக் களமிறங்கின. பின்னர் 2004 பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி விலக்கப்பட்டு அதாவது ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக செயற்பட்ட ஆனந்தசங்கரி நீக்கப்பட்டு பதிலாக அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி இணைத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வெளி யேற்றப்பட்டது. 2010ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது அகில இலங்கைத் தமிழரசுக்கட்சி, ரெலோ, ஈ,பி,ஆர்,எல்,எப் ஆகியன மட்டுமே இணைந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டன. அடுத்த கட்டமாக வடமாகாணசபைத் தேர்தலின்போது புளொட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் (மீண்டும்) உள்ளீர்க்கப் பட்டன. 2015ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது தமிழர்விடுதலைக் கூட்டணி மீண்டும் கழற்றி விடப்பட்டது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தற்போதைய இறுதி வடிவம் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ,பி,ஆர்.எல்.எப், புளொட் என்பன இணைந்த கூட்டாகும். உண்மையில் இதுவரை கடந்த பதினான்கு ஆண்டுகளாக என்ன நடந்திருக்கிறது என்றால் பங்காளிக் கட்சிகளையெல்லாம் முறையாக அரவணைத்து கட்டுக்கோப்பான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக தேர்தல்களை மையப்படுத்திய வெட்டி ஒட்டும் வேடிக்கைதான் நடைபெற்று வந்துள்ளது. தமிழரசுக் கட்சி தனது வீட்டுச் சின்னத்துக் குரிய 'வாக்குவங்கி' மேலாண்மையைப் பாவித்து பங்காளிக் கட்சி களைக் காலத்துக்குக் காலம் ஓரங்கட்டும் குறுகிய நோக்கம் கொண்ட கடைந்தெடுத்த கட்சி அரசியலைத்தான் முன்னெடுத்து வந்துள்ளது. தமிழ் மக்களின் பலம் வாய்ந்த ஐக்கியப்பட்ட அரசியல் சக்தியாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையெடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித் தனமான நடவடிக்கைகள் காரணமாக ஒட்டுமொத்த தமிழினத்தின் ஐக்கியத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. கட்சி மக்களுக்கானது என்ற நிலைமை மாறி கட்சிக்காக மக்கள் என்ற கருத்தியல் வளர்த் தெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயர்ப் பலகையை மட்டும் மாட்டிக் கொண்டு பங்காளிக்கட்சிகளுடன் கலந்தாலோசியாது தமிழரசுக் கட்சி தன்னிச்சையாகச் செயற்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு மக்கள் இயக்கம் எனும் பரி மாணத்தை உடையதாயின் அவ்வியக்கத்தின் ஒரு அங்கமாக - ஒரு கூறாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு விளங்க வேண்டுமே தவிர பாராளுமன்றக் குழுவே மக்கள் இயக்கமாக மாறிவிடக்கூடாது. ஆனால் இன்று தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் தனி நபர்களாக இரா.சம்பந்தன் அவர்களும் சுமந்திரனும் ஆக்கப்பட்டுள்ளனர். ஏனைய தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையாட்டிப் பொம்மைகளாகவே உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சி தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கிறது. தீர்மானங்கள் விவாதித்து எடுக்கப்படுவ தாயில்லை. இந்நிலைமை ஆரோக்கியமானதல்ல. இதனை 2010 இலே தமிழரசுக் கட்சிக்குள் இழுத்துவரப்பட்ட சுமந்திரன் உணரா விட்டாலும் 1975 இல் தமிழரசுக் கட்சியில் இணைந்த இரா.சம்பந்தன் அவர்கள் உணர வேண்டும். வேறு மாற்று வழியின்றி தமிழ் மக்களின் ஐக்கியம் கருதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வாக்குறுதிகளை நம்பியும் பாரம்பரியத் தமிழ்க் கட்சி என்ற கோதாவிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாகத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்கிறார்கள் என்பதற்காக அதனைத் தமிழ் மக்களின் பலவீனமாகக் கருதி தமிழரசுக் கட்சி அதனில் குளிர்காய முனையக் கூடாது. ''குட்டக் குட்டக் குனிபவனும் மடையன்; குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்'' என்ற நிலைமை தமிழர்களின் அரசியலில் ஏற்பட்டுவிடக்கூடாது. இதுவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதாவது அதன் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சி தமிழர்களின் தலையிலே குட்டிக் கொண்டேயிருக்கிறது. தமிழர்களும் குனிந்து கொண்டே உள்ளனர். இந்த நிலைமை தொடரக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தமிழ் மக்கள் அவாவி நிற்பது தனிநபர்களுக்கான அரசியல் அல்ல; ஒரு குறிப்பிட்ட கட்சிக்கான அரசியலுமல்ல; மக்களுக்கான அரசியலையே. மக்களுக்கான அரசியலுக்கு முதலில் தேவைப்படுவது ''ஐக்கியம்'' ஆகும்.

எனவே இனியும் காலந்தாழ்த்தாது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் ''உப்பரிகை'' அரசியலை விட்டுக் கீழிறங்கி வடக்குகிழக்கில் செயற்படுகின்ற தமிழ் அரசியல்கட்சிகள் அனைத்தையும் மற்றும் தேர்தல் அரசியலுக்கு அப்பால் மக்கள் நலன் சார்ந்து செயற்படுகின்ற அனைத்து வெகுஜன அமைப்புக்களையும் அத்துடன் தன்னலம் கருதாது தனிநபர்களாகச் செயற்படுகின்ற கலை, இலக்கிய, ஊடக, சமூக மற்றும் அரசியற் செயற்பாட்டாளர்களையும், துறைசார் விற்பன்னர்களையும்; தொழிலாளர்கள், மீனவர்கள், விவசாயிகள், தொழில் அதிபர்கள், சிறுவர்த்தக முயற்சியாளர்களின் பிரதிநிதிகளையும்; தொழில்சார் தகைமையாளர்களையும் என அனைத்துத் தரப்பினரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்வாங்கியதோர் 'ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறை' யொன்றை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறானதோர் 'புதிய' தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைய விரும்பாமல் வெளியே நிற்பவர்களையிட்டு அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அத்தகையோரை மக்கள் நிராகரிப்பார்கள். எனவே இன்றைய தமிழ்ச் சூழலில் மேற்கூறப்பட்டவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'புதிய வடிவம்' எடுப்பதே தமிழர் அரசியலைப் பலப்படுத்தும் நடைமுறைச் சாத்தியமான ஒரே வழியாகும். மக்கள் ஐக்கியமாகவே உள்ளனர். தலைவர்கள்தான் இனி ஐக்கியப்பட வேண்டும். இத்தகைய ஐக்கியத்தை ஏற்படுத்தும் பாரிய வரலாற்றுப் பொறுப்பைத் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் - தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் மீது காலம் சுமத்தியிருக்கிறது. இக் கடமையை இரா.சம்பந்தன் அவர்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையோடும் அரசியல் கண்ணியத்துடனும் அர்ப்பணிப்புடனும் செவ்வனே நிறைவேற்றி வைப்பார் எனத் தமிழினம் நம்பியிருக்கிறது.

*16.01.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# தமிழ் மக்களுக்குச் 'சிலுசிலுப்புத்' தேவையில்லை

இலங்கைக்குப் புதிய அரசியமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான முஸ்தீபுகள் முடுக்கிவிடப்பட்டுள்ள இன்றைய நிலையில் தமிழ்ச் சூழலில் ஒற்றையாட்சியா? சமஸ்டியா? தமிழ்மக்களின் பிரச்சினைக் குத் தீர்வு என்ற சர்ச்சைக்குள் தமிழர்களுடைய அரசியல் அரங்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் கடந்தகால அரசியலிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

1940 களில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலம் அவர்கள் இலங்கைக்கான சோல்பரி அரசியமைப்பு உருவாக்கத்தின் போது 'ஐம்பதுக்கு ஐம்பது' கோரிக்கையை முன் வைத்தார். இது நிறைவேறவில்லை. இக்கோரிக்கை தோல்வியிலேயே முடிந்தது.

அதன் பின்னர் ஜி.ஜி பொன்னம்பலம் அவர்களுடனான அரசியல் முரண்பாடு காரணமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி செல்வநாயகம்(தந்தை செல்வா) அவர்கள் 1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் ஸ்தாபித்துத் தமிழர்களின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாகச் 'சமஸ்டி' க் கோரிக்கையை முன்வைத்தார்.

தனது அரசியல் இலக்காகச் 'சமஸ்டி' யை வரித்துக் கொண்டிருந்த சமகாலத்திலேயே தந்தை செல்வா அவர்கள் பிராந்திய சபைகளை ஏற்று 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், மாவட்ட சபை களை ஏற்று 1965 இல் டட்லி - செல்வா ஒப்பந்தத்தையும் மேற் கொண்டார்.

பின் 1970 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆட்சியமைத்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவரையில் அமுலிலிருந்த சோல்பரி அரசியலமைப்பை நீக்கி 1972 இல் குடியரசு அரசியலமைப்பை அறிமுகம் செய்தார்.

1947 இலிருந்து 1972 வரை அமுலிலிருந்த சோல்பரி அரசியமைப்பில் ஒற்றையாட்சி - Unitary - என்ற பதம் இருக்கவில்லை. ஆனால் அது ஒற்றையாட்சிக் குணாம்சத்தைக் கொண்டிருந்தது.

அமரர் ஜி.ஜி பொன்னம்பலம் அவர்களின் 'ஐம்பதுக்கு ஐம்பது' கோரிக்கையோ அல்லது 'பண்டா செல்வா' ஒப்பந்தமோ அல்லது 'டட்லி - செல்வா' ஒப்பந்தமோ சட்டமாக்கப்பட்டு அமுல் செய்யப் பட்டிருக்குமேயானால் அவை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்தான் நிகழ்ந்திருக்கும்.

1972 குடியரசு அரசியலமைப்பிலும் ஒற்றையாட்சி என்ற சொற் பதம் இல்லை. ஆனால் அதுவும் சோல்பரி அரசியலமைப்பைப் போல் ஒற்றையாட்சிக் குணாம்சத்தையே கொண்டதாகும்.

1972 குடியரசு அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது தமிழரசுக் கட்சியினால் தமிழர் தரப்பிலிருந்து அரசாங்கத்திடம் ஆறு அம்சக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது அரசாங்கத்தினால் கவனிக்கப் படாத நிலையில் அப்போதைய அரசியலமைப்பு நிர்ணயசபை விவாதங்களின் போது தமிழரசுக் கட்சியினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையிலேயே அரசிய லமைப்பு நிர்ணயசபையிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியது.

1972 இல் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திடம் சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கையும் அப்போதைய அரசியல் அரசியலமைப்பு நிர்ணய சபையில் முன்மொழிந்த திருத்தங்களும் ஏற்றுக் கொள்ளப் பட்டுச் சட்டமாக்கப்பட்டிருக்குமேயானால் அவையும் ஒற்றை யாட்சிக் கட்டமைப்புக்குள்தான் நிகழ்ந்திருக்கும்.

1972 குடியரசு அரசியலமைப்பைத் தொடர்ந்து அவ்வரசிய லமைப்பின் நகலை யாழ் முற்றவெளியில் தீயிட்டுக் கொளுத்தித் தமிழர்களின் எதிர்ப்பை வெளியிட்ட தந்தை செல்வா அவர்கள் தமிழரசுக் கட்சியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் இணைந்த தமிழர் கூட்டணியை உருவாக்கி அதுவே பின்னர் 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகித் தமிழர் தரப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1977 பாராளுமன்றப் பொதுத்தேர்தலைச் சர்வஜன வாக்கெடுப்பாக எதிர்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத் தனிநாடு அமைப்பதற்கான ஆணையைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்ளடக்கி தமிழ்மக்களிடமிருந்து ஆணை பெற்றது. தேர்தலில் வென்ற பின்னர் அனைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து தமிழ்த் தேசிய மன்றத்தை நிறுவித் தமிழீழத் தனிநாட்டிற்கான அரசியலமைப்பை வரைவோம் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்த தமிழர் விடுதலைக் கூட்டணி அதனைச் செய்யவில்லை. தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னர் 1977 பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போது தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் பொறுப்பினை மு.சிவசிதம்பரம் அவர்களும் செயலாளர் நாயகம் பொறுப்பினை அ.அமிர்தலிங்கம் அவர்களும் ஏற்றிருந்தனர்.

1977 தேர்தலில் வெற்றிபெற்று ஐ.தே.கட்சியின் தலைமையில் பிரதமராகி ஆட்சியமைத்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் 1978 இல் குடியரசு அரசியலைமைப்பை நீக்கித் தற்போதுள்ள நிறைவேற்று ஜனாதிபதிமுறை அரசியலமைப்பை ஏற்படுத்தி அவரே இலங்கையின் முதல் நிறைவேற்று ஜனாதிபதியாகவும் பதவியேற்றார். இவ்வரசிய லமைப்பு ஆக்கத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணி பங்கேற்காமல் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறியிருந்தது. 1978 நிறைவேற்று ஜனாதிபதி முறை அரசியலமைப்பில்தான் முதல்முறையாக ஒற்றை யாட்சி - Unitary - என்ற பதம் எடுத்தாளப்பட்டது.

1987 யூலை 29 இல் கைச்சாத்திடப்பெற்ற இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 13 வது அரசியல் சட்டத்திருத்தமும் அதன்கீழ் நிறுவப்பட்ட தற்காலிகமாக இணைக்கப் பட்ட வடக்குகிழக்கு மாகாண சபையும் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக் குள்தான் நிறைவேற்றப்பட்டன.

ஆனால், இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட முன்னாள் ஜனாபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினாலோ அல்லது அவருக்குப் பின்னர் நிறைவேற்று ஜனாதிபதிகளாகப் பதவிவகித்த ஆர்.பிரேமதாச, டி.பி.விஜயதுங்க, திருமதி.சந்திரிக்கா விஜயகுமாரதுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரநாயக்கா, மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோரினாலோ அல்லது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினாலோ 13 வது அரசியல் சட்டத்திருத்தம் அர்த்தமுள்ள விதத்தில் இதுவரை முழுமையாக அமுல் செய்யப்படவில்லை. இவ் ஒப்பந்தம் முழுமையாக அமுல்செய்யப்படாமைக்குச் சிங்கள அரசாங்கங்களை மட்டும் குறை சொல்ல முடியாது. தமிழர் தரப்பின் அரசியல் தந்திரோபாயம் அற்ற - விவேகமற்ற செயற்பாடுகளும் தமிழர் அரசியல் தலைமையினது (தமிழர்விடுதலைக் கூட்டணி) சமூகப் பொறுப்பற்ற அசமந்தங்களும் பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படாமைக்குரிய காரணங்கள் என்பதைத் தமிழர்கள் நேர்மையாக ஒப்புக் கொள்ள வேண்டும். தமிழர்களுக்குச் சாதகமாகத் தென்னிலங்கை அரசியல் சூழலும் கடந்த காலங்களில் அவ்வப்போது இருக்கவில்லை. இது வேறு விடயம். ஆனால் தமிழர் தரப்பிலும் தவறிருந்தது. திருமதி.சந்திரிக்கா விஜயகுமாரதுங்க பண்டாரநாயக்கா ஜனாதிபதியாகப் பதவிவகித்த கால கட்டத்தில் (1994 - 2004) தமிழர்களுக்குச் சாதகமாக இருந்த தென்னிலங்கைச் சூழலைக் கெடுத்துக் கொண்டது தமிழர் தரப்புத்தான். திருமதி.சந்திரிகா முன்வைத்த சமஷ்டிக் குணாம்சம் கொண்ட அரசியல் தீர்வுப் பொதியைக் கூட ஆதரிப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) தவறியது. ஆனால் இன்று எல்லோரும் கூறுகின்ற 'நல்லாட்சி' அரசியல் சூழலில் இப்போது அரசியல் அரங்கில் பேசு பொருளாக இருக்கின்ற உத்தேச புதிய அரசியலமைப்பு பற்றிக் கவனம் செலுத்துகின்ற சமகாலத்தில் உத்தேச புதிய அரசியலமைப்புவரை காத்திராமல் பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை முழுமையாக அமுல் செய்வதற்கான அரசியல் மற்றும் இராஜதந்திர அழுத்தங்களைத் தற்போதைய தமிழர் அரசியல் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும்.

ஏனெனில், இலங்கை அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளாகப் பேசப்பட்ட ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையோ அல்லது பண்டா - செல்வா ஒப்பந்தமோ அல்லது டட்லி - செல்வா ஒப்பந்தமோ அல்லது 2000களில் சந்திரிகா விஜயகுமாரதுங்க பண்டாரநாயக்காவினால் முன்மொழியப்பட்ட அரசியல் தீர்வுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதியோ, இவையெல்லாம் வெறும் ஏட்டுச்சுரைக்காயாக அமைந் தனவே தவிர அவை சட்டவடிவமாக்கப்பட்டு அமுல்செய்யப்பட வில்லை. இதுவரை சட்டவடிவமாக்கப்பட்ட ஒரேயொரு ஒப்பந்தம் இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம்தான் என்பதையும் தமிழர்கள் நேர்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டும். துரதிஸ்டவசமான விடயம் என்னவெனில் தமிழர்தம் அரசியல் தலைமையாக அங்கீகரிக்க பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்த அமுலாக்கல் குறித்து எப்போதும் அடக்கியே வாசிக்கிறது, அல்லது அதுபற்றிப் பேசுவதேயில்லை.

நாம் விரும்புவது வேறு: யதார்த்தம் வேறு. நாளை வரும் பலாக்காயிலும் இன்று கையிலுள்ள கிளாக்காய் நன்று. பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தை முற்றாகப் புறந்தள்ளிவிட்டு வேறொரு அரசியல் தீர்வுத் திட்டத்தினை அடைவது நடைமுறைச் சாத்திய மில்லை. இறைச்சி சாப்பிட்டதைக் காட்டுவதற்காக எலும்புகளைக் கோர்த்து மாலையாக அணிய வேண்டுமென்பதில்லை. தேசம், தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகளைக் கோஷங்களாக முன் வைப்பதை விடவும் அவற்றை அடைவதற்கான அறிவுபூர்வமான அரசியல் நகர்வுளை மேற்கொள்வதே அவசியமானது.

இந்திய அரசியலமைப்பில் சமஸ்டி - Federal - என்ற வார்த்தைப் பிரயோகம் இல்லை. ஆனால் அது சமஸ்டிக் குணாம்சத்தைக் கொண்டது. எனவே ஒற்றையாட்சியா? சமஸ்டியா? என்பதை விட வடகிழக்குத் தமிழர்களின் தாயகம் பிரிக்கப்படாத ஒரு அதிகாரப் பகிர்வு அலகும் அதாவது ஒரு மொழிவாரி மாகாணமும் அவ்வலகுக்குப் பகிர்ந்தளிக்கப் படும் அதிகாரங்களுமே முக்கியமானவை. அண்மையில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கலையே வலியுறுத்துகிறது. தற்போது நடைமுறையில் உள்ள பதின்மூன்றாவது சட்டத் திருத்தத்தி லுள்ள குறைபாடுகள் உத்தேச புதிய அரசியல் அமைப்பில் நிவர்த்தி செய்யப்படுதல் வேண்டும். எனவே பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பகிர்வின் அடுத்த கட்டத்திற்குச் செல்வதே இன்றுள்ள தென்னிலங்கை - இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரப் பிராந்திய மற்றும் பூகோள அரசியல் சூழ் நிலையில் அறிவுபூர்வமானது. கோவணம் உருவப்பட்டுக் கொண்டிருக்கும் போது பட்டு வேட்டிக்குக் கனவு காண்பது அறிவுபூர்வமானதல்ல. உத்தேச புதிய அரசியலமைப்பு மூலம் தமிழர்களுக்கு மீட்சி கிடைக்கும் என்று அதீத நம்பிக்கை கொள்வதை விட தற்போது கையிலிருக்கின்ற பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தினை முழுமையாக அமுல் செய்வதற்கான அரசியலே தமிழர்களின் உடனடித் தேவை யாகும். இதனுடைய அர்த்தம் உத்தேச புதிய அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்கத்தில் தமிழர்கள் பங்கேற்கக் கூடாது என்பதல்ல. ஆனால் அந்தப் பங்கேற்பு இருப்பதையும் இழந்து விடுகின்ற துர்ப்பாக்கிய சூழலொன்றினைத் தோற்றுவிக்காதபடி தமிழர் தரப்பு கவனமாக அரசியலைக் கையாள வேண்டும். ''சமஸ்டி என்றால் சிங்களவர்கள் வெறுப்புக் கொள்கிறார்கள்: ஒற்றையாட்சி என்றால் தமிழர்களுக்குக் கசக்கிறது'' என்ற ஜனாதிபதி அவர்களின் அண்மைய கூற்றின் யதார்த்தம் புரிந்து கொள்ளப்பட வேண்டும். கடந்த காலங் களைப் போன்று தமிழர் அரசியலில் 'சிலுசிலுப்பு' வேண்டாம். இனிமேல் எமக்குப் 'பலகாரம்' தான் வேண்டும். இதற்கு உடனடியாகத் தமிழர் அரசியலில் தேவைப்படுவது தமிழர்களுக்கானதோர் ஐக்கியப் பட்ட அரசியல் பொறிமுறையாகும் என்பதையும் இப்பத்தி வலியுறுத்த விரும்புகின்றது. உத்தேச புதிய அரசியலமைப்பு உருவாகி அது நிறைவேற்றப்படும்வரை காத்திருக்காமல் உடனடியாக பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை அர்த்தமுள்ள விதத்தில் முழுமையாக அமுல் செய்வதற்கான அரசியல் அழுத்தங்களை இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கைசாத்திகளான இலங்கை அர சாங்கத்தின் மீதும் இந்திய அரசாங்கத்தின் மீதும் செலுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறை தமிழர்களுக்கு அவசியமாகும்.

*23.01.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# உத்தேச [புதிய] அரசியல் யாப்பும் தமிழ் மக்களும்

இலங்கையின் தற்போது அமுலிலுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தை நீக்கிப் புதிய அரசியலமைப்புச் சட்டமொன்றினை உருவாக்குவதற்கான ஆரம்பவேலைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

பொதுமக்களிடமிருந்து எழுத்துமூலமான மற்றும் வாய்மூலப் பிரேரணைகளைப் பெறுவதற்காக அதற்கென்று நியமிக்கப்பெற்ற 'அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் குழு' தனது பணியை 18.01.2016 அன்று கொழும்புமாவட்டத்தில் ஆரம்பித் துள்ளது. இக்குழு ஏனைய மாவட்டங்களுக்குச் செல்லும் திகதிகளும் ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளன.

உத்தேச புதிய அரசியல் யாப்பு மூன்று முக்கியமான நோக்கங் களுக்காகக் கொண்டுவரப்படுகின்றது எனப் பேசப்படுகிறது. அவை யாவன : ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்குதல், தற்போதுள்ள பாராளுமன்றத் தேர்தல் முறையில் மாற்றம் மற்றும் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அதிகாரப் பகிர்வு.

இவற்றில் இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் கூடுதலான அக்கறை கொள்ளும் விடயமாக அதிகாரப் பகிர்வே விளங்குகிறது.

வடக்கு கிழக்குத் தமிழர்களின் கடந்த அறுபது வருடகால உரிமைப் போராட்ட அரசியலின் குவிமையம் அதிகாரப் பகிர்வே ஆகும்.

இதுவரையிலான இலங்கையின் அரசியலமைப்பு எதுவும் தமிழர்கள் எதிர்பார்த்த அதிகாரப் பகிர்வை வழங்கியிருக்கவில்லை. இறுதியாக 1978 ம் ஆண்டின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையான அரசியலமைப்புக்கு 1987 இல் கைச்சாத்திடப்பெற்ற இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்கிணங்கக் கொண்டு வரப்பட்ட பதின்மூன்றாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்விலும் குறைபாடுகள் உள்ளன என்பதும் அக்குறைபாடுகளுடனான பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்தானும் இதுவரை அதாவது ஒப்பந்தம் எழுதப்பட்டு கால்நூற்றாண்டைக் கடந்தவிட்ட நிலையிலும் முழுமையாக அமுல் செய்யப்படவில்லையென்பதும் கடந்தகால அனுபவங்கள். இத்தகையதொரு அனுபவப் பின்புலத்தில்தான் அதிகாரப்பகிர்வு என்ற விடயத்தைத் தமிழ்மக்கள் நோக்க வேண்டியுள்ளது.

அதிகாரப்பகிர்வு எனும்போது அதிகாரப்பகிர்வு அலகின் வடிவம் எப்படியிருக்க வேண்டும் என்ற விடயம் முன்னெழுவதாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு மொழிவாரி அலகுக்காகவே கடந்த அறுபதுவருடகால உரிமைப்போராட்ட அரசியலில் பல தியாகங்களைச் செய்துள்ளனர். பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். எனவே தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அதிகாரப் பகிர்வு அலகு இதுவரை காலவரையிலான இழப்புக்களை ஈடு செய்யும்வகையிலும் அவர்தம் அரசியல் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் வகையிலும் அமைவது அவசியம்.

அப்படிப் பார்க்கும்போது உத்தேச அரசியல் யாப்பின் அதிகாரப் பகிர்வின் அலகுகளிலொன்று வடக்குகிழக்கு பிரிக்கப்படாத தனிப் பிராந்தியமாக அல்லது தனி மாகாணமாக அமைய வேண்டும். 1988 இலிருந்து 2008 வரை இருபதுவருடங்கள் இணைந்த வடக்குகிழக்கு மாகாணம் தனியான நிர்வாகத்தின் கீழ் எந்த இடர்ப்பாடும் இல்லாமல் இயங்கியது என்பதை இப்போது மனங்கொள்வது அவசியம். ஜே.வி.பியினால் தொடரப்பட்;ட வழக்கொன்றின் மூலம் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் 2008 இல் நிர்வாக ரீதியாகப் பிரிக்கப்பட்டமை ஓர் அரசியல் விபத்து ஆகும்.

எனவே மேற்கூறப்பட்ட 'அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் குழு' வடக்கு கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்களில் மேற்கொள்ளும் அமர்வுகளின் போது தமிழ் மக்களிடையேயுள்ள பொதுநிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், மதத்தலைவர்கள், தொழிற்சங்கங்கள், கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள், தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் தகைமையாளர்கள், கலை இலக்கிய - ஊடக - சமூக - அரசியல் செயற்பாட்டாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் அரசியல்கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் சிந்தித்து வடக்கு கிழக்கு பிரிக்கப்படாத ஓர் அதிகாரப்பகிர்வு அலகினை வலியுறுத்த வேண்டும். தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள இச் சந்தர்ப்பத்தினை அதி உச்சமாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமங்களிலும் செயற்படும் பொது அமைப்புக்கள் யாவும் இதுவிடயமான விழிப்புணர்வை மக்களுக்கு இப்போதிருந்தே தொடர்ந்து ஊட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

அடுத்தபடியாக நாம் சிந்திக்க வேண்டியது உத்தேச அதிகாரப் பகிர்வு அலகுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் பற்றியதாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதாவது பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் குறித்துக் குறைபாடுகள் இருந்தாலும்கூட பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தினை முற்றாகப் புறந்தள்ளிவிடாமல் அதனை அடிப்படையாகக் கொண்டே மேற்செல்ல வேண்டும். ஜெனீவாத் தீர்மானம் பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் முழுமையான அமுலாக்கலை வலியுறுத்தியுள்ளது. தென்னிலங்கை - இந்துசமுத்திரப் பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளைக் கணக்கிலெடுக்கும் போது பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தினை அடிப்படையாகக் கொண்டு அதில் உள்ள குறைபாடுகளை உத்தேச புதிய அரசியல் யாப்பில் நிவர்த்தி செய்து கொள்ளுகின்ற பிரேரணைகளே நடைமுறைச் சாத்தியமானவை.

அதிகாரப் பகிர்வு விடயங்களைப் பொறுத்தவரை தற்போதுள்ள பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம், 2000 ம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்வைத்த அரசியலமைப்புச் சட்ட மூலம் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் 2006 ம் ஆண்டின் பேராசியர் திஸ்ஸவிதாரண தலைமையிலான சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கான நிபுணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவின் அறிக்கை முதலிய ஆவணங்களைப் பரிசீலனைக்கு எடுத்து அவற்றிலுள்ள சாதகமான விடயங்களைத் தொகுத்தெடுத்துப் பிரேரணைகளாக முன்வைக்கலாம்.

அரசியல் கட்சிகள் தங்கள் பிரேரணைகளையும் வரைபுகளையும் முன்வைப்பார்கள். அது ஒரு புறம் நடக்கட்டும். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது அரசியல் கட்சிகளின் வேலை என்றெண்ணி அலட்சியமாகவும் அசமந்தமாகவும் இருந்து விடாமல் மிகவும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் முன்வந்து தங்கள் ஆலோசனைகளை எழுத்து மூலமும் வாய்மூலமும் மேற்கூறப்பட்ட குழுவிடம் முன்வைக்க வேண்டும்.

அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக பின்வரும் சில விடயங்களைக் குறிப்பிடுதல் இப்பத்தியின் நோக்கத்திற்கமையப் பொருத்தம் ஆகும்.

» உத்தேச பிராந்தியம் அல்லது மாகாணத்தின் ஆளுநர் நிறைவேற்று அதிகாரம் அற்றவராக இருக்க வேண்டும். அப்போதுதான் பிராந்தியம் அல்லது மாகாணம் தனக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பரப்பில் சுயமாக இயங்க முடியும்.

» பிராந்தியங்களுக்கு அல்லது மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்ட அதிகாரப் பரப்புக்களைப் பொறுத்தவரை மாவட்டச் செயலாளர்களும் (அரசாங்க அதிபர்), பிரதேச செயலாளர்களும், கிராம சேவை உத்தியோகத்தர்களும் மாகாண முதலமைச்சருக்கே பொறுப்புக் கூறுவதாயிருக்க வேண்டும்.

» மாநாகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபைகளான உள்ளூராட்சி அலகுகளின் முழுநிர்வாகமும் முழுமையாகப் பிராந்திய அல்லது மாகாண முதலமைச்சரின் கீழேயே கொண்டுவரப்படல் வேண்டும் தற்போதுள்ள அதிகாரங்களை விடக் கூடுதலாக உள்ளூராட்சி அலகுகளுக்குக் கூடுதலான அதிகாரங்களை உத்தேச புதிய அரசியல் யாப்பில் வழங்கலாம். உதாரணமாகப் பாலர் பாட சாலைகளின் நிர்வாகம் உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் கொண்டு வரப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

» அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக தற்போதைய மாகாணசபை களுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களிலுள்ள குழப்பநிலை உத்தேச புதிய யாப்பில் களையப்பட்டு அவை தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

» மத்திய அரசாங்கத்திற்குரிய அதிகாரப்பட்டியல், பிராந்திய அல்லது மாகாணத்திற்குரிய அதிகாரப்பட்டியல் என இரு பட்டியல்களே உத்தேச புதிய யாப்பில் தெளிவாக வரையறை செய்யப்பட்டு உள்ளடக்கப்படல் வேண்டும். அதாவது 'ஒருங்கியைய நிரல்' - Concurrent list - தவிர்க்கப்படல் வேண்டும்.

» தேசிய நீர்ப்பாசனம் - National Irrigation, தேசிய நெடுஞ் சாலைகள் - National Highways போன்றவை குறித்த தெளிவான வரைவிலக்கணங்கள் உத்தேச யாப்பில் வகுக்கப்படல் வேண்டும்.

» பிராந்திய சபை அல்லது மாகாணசபைகளின் பதவிக்காலம் முடிந்தாலொழிய அல்லது அதனைக் கலைக்கும்படி அச்சபை மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் தீர்மானித்தாலொழிய பிராந்தியசபை அல்லது மாகாணசபை ஆளுநரினாலோ அல்லது ஜனாதிபதியினாலோ கலைக்கப்படல் ஆகாது.

மொத்தத்தில் தற்போதுள்ள பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தம் உத்தேச புதிய அரசியல் யாப்பில் செறிவாக்கப்படவேண்டுமே தவிர ஐதாக்கப்படக் கூடாது.

*30.01.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழர்களும் முஸ்லீம்களும்

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்கள் தமிழரசுக் கட்சியைச் ஸ்தாபித்து இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 'சமஸ்டி'க் கோரிக்கையை முன்வைத்தபோது வடக்குக் கிழக்குத் தமிழர்களுடன் முஸ்லீம்களையும் இணைத்துக் கொண்டு 'தமிழ் பேசும் மக்கள்' எனும் வார்த்தைப் பிரயோகத்தைக் கையாண்டு தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியல் முஸ்லீம்களையும் உள்ளடக்கியதாகக் காட்டினார். இனப்பிரச்சினையின் தோற்றுவாய் மொழிப்பிரச்சி னையாகவே இருந்த காரணத்தினாலும் அப்போதைய அதாவது தற்போதைய அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் - River Valleys Devepment Board - கீழான கல்லோயா அபிவிருத்தித்திட்டத்தில் Gal - Oya Development Project –நிறைவேற்றப் பட்ட காணிக்குடியேற்றத்தின் கீழ் தமிழர்களும் முஸ்லீம்களும் பாதிக்கப்பட்டார்கள் என்பதினாலும் அவற்றை எதிர்கொள்ள அன்று அரசியல் ரீதியாக முஸ்லீம்களையும் இணைத்துக் கொண்டு தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைப்போராட்ட அரசியலை முன்னெடுக்க வேண்டிய தேவை தமிழரசுக்கட்சி தோற்றம் பெற்ற ஆரம்ப காலங் களில் இருந்திருக்கலாம். அன்றியும் அன்றிருந்த முஸ்லீம் அரசியல் தலைவர்கள் அனைவரும் வெவ்வேறு தேசியக்கட்சிகளில் இணைந் திருந்தார்களே தவிர முஸ்லீம்களுக்கென்று தனித்துவமான அரசியல் கட்சியொன்று இல்லாத சூழ்நிலையும் இருந்தது. ஆனால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முஸ்லீம் அரசியல் தலைவர்களான ரி.பி.ஜயா, ராஸிக் பரீத், டாக்டர் கலீல், டாக்டர் பதியுதீன் மஃமூத், எம்.எஸ் காரியப்பர் ஆகியோரும் சரி அதன்பின் முஸ்லீம்களுக்கென்று தனியான அரசியல் கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எச்.எம்.அஸ்ரப் என்றாலும் சரி முஸ்லீம்களை 'இலங்கைச் சோனகர்' எனும் தனித்துவமான இனக்குழுமமாகக் கருதினார்களே தவிர அவர்கள் எக்காலத்திலுமே முஸ்லீம்களைத் 'தமிழ்பேசும் மக்கள்' என்ற வார்த்தைக் கட்டமைக்குள் தமிழர்களுடன் சேர்த்து அடையாளப் படுத்தப்படுவதை விரும்பியிருக்கவில்லை. அது தவறென்றும் கூறமுடியாது. அது அவர்களின் அபிலாஷைகளைப் பொறுத்த விடயம். ஆனால் தவறு எங்கே நடந்தது என்றால் தமிழர் அரசியல் தலைமை 'தமிழ்பேசும் மக்கள்' என்ற வார்த்தைக் கட்டமைப்புக்குள் முஸ்லீம் களையும் வில்லங்கமாக இணைத்துக் கொண்டு அரசியல் செய்ய முற்பட்டதேயாகும். இப்பந்தியின் ஆரம்பத்தில் கூறப்பட்டது போல மொழிப்பிரச்சினை விவகாரத்தில் அது அப்போது தேவைப்பட்டி ருக்கலாம். அதனால்தான் நீதிமன்ற மொழி விவகாரத்தை முன்வைத்து 1961 இல் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்கக் கச்சேரி களின் நிர்வாகத்தைச் சுமார் இரண்டு மாதங்கள் ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் தமிழரசுக் கட்சி நடாத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கிழக்கில் முஸ்லீம் அரசியல் தலைவர்களும் முஸ்லிம்களும் பங்கேற்றி ருந்தனர். ஆனால் வடக்குகிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தமிழர் அரசியல் தலைமை எதிர்த்த அளவுக்கு முஸ்லீம் அரசியல்தலைமைகள் எதிர்க்கவில்லை. அவ்வப்போது ஆட்சியிலுள்ள அரசாங்கக் கட்சி களுடன் இணைந்து அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்து முஸ்லீம் சமூகத்திற்குப் பல சமூக பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுக் கொடுத்த முஸ்லீம் அரசியல் தலைமைகள் சிங்களக்குடியேற்றங்களைப் பொறுத்தவரை மென்போக்கையே கடைப்பிடித்தன. கிழக்கு மாகாண த்தின் சில தொகுதிகளில் தேர்தல்களில் வெற்றிபெறும் நோக்கில் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகத் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர்களாகச் சில முஸ்லீம் அரசியல்வாதிகள் போட்டியிட்டார்களே தவிர தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை முஸ்லீம்கள் ஏற்றிருந்தார்கள் என்பதற்கில்லை. இவ்வாறு தமிழரசுக்கட்சியின் வேட்பாளர்களாகத் தேர்தல்களில் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்த முஸ்லீம் அரசியல்வாதிகள் பலர் கட்சிமாறி அர சாங்கத்தில் இணைந்து கொண்டமைதான் வரலாறு. தமிழரசுக்கட்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்பாளர் நியமனங்களை முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கு வழங்கு வதன் மூலம் ஒரு போலி 'தமிழ் - முஸ்லீம்' உறவைத்தான் தனது கட்சி அரசியல் தேவைகளுக்காகக் கட்டிவளர்த்தது.

1977 ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழீழத்தனிநாடு அமைப் பதற்குரிய ஆணையைத் தமிழ் மக்களிடம் வேண்டிநின்ற தமிழர் விடுதலைக் கூட்டணி முஸ்லீம் ஐக்கிய முன்னணி என்ற அமைப்புடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொணடு கல்முனை, சம்மாந்துறை, மூதூர், புத்தளம் ஆகிய தொகுதிகளில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் முஸ்லீம் வேட்பாளர்களைக் களமிறக்கியது. முஸ்லீம் ஐக்கிய முன்னணியின் சார்பில் எச்.எச்.எம்.அஸ்ரப் - அப்போது முஸ்லீம் காங்கிரஸ்கட்சி உருவாகி இருக்கவில்லை - தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவில் இடம் பெற்றிருந்தார். தமிழர்விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட முஸ்லீம் வேட்பாளர்கள் எவரும் வெற்றி பெறவில்லை. தேர்தல் முடிவுகளின் பின்னர் தமிழீழத் தனிநாட்டுக் கோரிக்கையைத் தமிழர்விடுதலைக் கூட்டணி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அஸ்ரப் அறிக்கை விட்டார். இதே அஸ்ரப் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரை யாற்றும்போது எதிர்காலத்தில் அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டால் அதனைத் தான் தலைமையேற்றுச் செல்வேன் என்றும் சூளுரைத்திருந்தார். தேர்தல் முடிவுகளின் பின்னர் அவரது நிலைப்பாடு தலைகீழானது. முஸ்லீம் ஐக்கிய முன்னணியும் அத்தேர்தலுடன் செயலிழந்து போயிற்று.

பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கித் தேர்தல் வெற்றிகளின் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பின்னாளில் பெற்றுக் கொண்ட அஸ்ரப் தென்கிழக்கு மாகாணக் கோரிக்கையை அரசியல் அரங்கிலே முன்வைத்தார். தென்கிழக்கு அலகினால் பாதிப்புறக் கூடிய அம்பாறை மாவட்டத் தமிழர்களுடன் எந்தவிதமான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளாது தமிழர்விடுதலைக் கூட்டணி தன்னிச்சையாகத் தென்கிழக்கு அலகை நிபந்தனையின்றி ஆதரித்தது. ஆனால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் மக்களின் அடிப்படைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையாக இருக்கின்ற வடக்கு கிழக்கு இணைப்பை ஒருபோதும் இதயசுத்தியுடன் ஆதரித்தது கிடையாது.

ஆனால் தமிழர் அரசியல் தலைமைகளோ தமிழரசுக் கட்சிக் காலத்திலிருந்து - தமிழர் விடுதலைக் கூட்டணி - இன்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காலம் வரை பாராளுமன்ற அரசியல் நலன்கள் சார்ந்த தங்கள் கட்சி அரசியல் தேவைகளுக்காகவும் மற்றும் தங்கள் யாழ்மையவாத மேட்டுக்குடி அரசியல் குணாம்சம் காரணமாக வன்னி மற்றும் கிழக்குமாகாணத் தமிழ் மக்கள் மீதான ஆத்மார்த்தமான அக்கறையின்மையாலும் காலத்துக்காலம் முஸ்லீம் அரசியல்வாதிகளின் முகம் கோணாமல் நடந்து கொள்கிறார்களே தவிர முஸ்லீம் அரசியல் வாதிகளின் தமிழ்மக்களுக்குப் பாரபட்சமான - விரோதமான அரசியல் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் எதிர்வினைகள் எழுப்பியதில்லை.

தமிழ் - முஸ்லீம் உறவு கட்டிவளர்க்கப்படுதல் அவசியமானதே. ஆனால் அந்த உறவு ஒரு வழிப்பாதையாக அமையக்கூடாது. தமிழ் - முஸ்லீம் உறவு எவ்வளவு முக்கியமானதோ அதே போன்று தமிழ் - சிங்கள உறவும் முக்கியமானது. தமிழ் - முஸ்லீம் உறவானது சிங்களவர்களுக்கு எதிரான 'குறுந்தமிழ்த் தேசியவாத' மனோநிலையில் எழவும் கூடாது.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச அவர்களின் ஆட்சிக் காலத்தில் அனைத்துக்கட்சி மாநாடு நடந்து கொண்டிருந்த போது ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் ''தமிழர்கள் சிங்கள அரசிடம்தான் உரிமைகளைக் கேட்டுப் பெற வேண்டும். அதேபோல் முஸ்லீம்களும் சிங்கள அரசிடம்தான் உரிமைகளை கேட்டுப்பெறவேண்டும். ஆகவே தமிழர்களும் முஸ்லீம்களும் இதுவிடயமாகப் பேசத் தேவையில்லை'' எனச் சாரப்படப் பத்திரிகைகளில் அறிக்கை விட்டார். இக்கூற்றில் தவறில்லை. இக்கூற்று யதார்த்தமானது, தர்க்க ரீதியானது, விஞ்ஞானபூர்வமானது.

இந்தக் கூற்றின் அடிப்படையில்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழர் அரசியல் தலைமைகளினால் இப்போதாவது அணுகப்பட வேண்டும். சரியோ பிழையோ தமிழர்களுக்கென்று அரசியல்கட்சிகள் உள்ளது போல் முஸ்லீம்களுக்கும் அரசியல் கட்சிகள் இன்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மக்களின் அரசியல் தலைவர்களைப் போல் முஸ்லீம்களுக்கும் அரசியல் தலைவர்கள் உள்ளனர். தமிழ் மக்களுக்குள்ள ஆதரவுப் பின்புலங்கள் முஸ்லீம்களுக்கும் உள்ளன. ஆனால் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் முஸ்லீம்களின் பிரச்சனைகளும் வெவ்வேறானவை. அதிகாரப் பகிர்விற்கான போராட்டத்தில் தமிழர்கள் புரிந்த தியாகங்களும், சந்தித்த பாரிய இழப்புக்களும் ஒப்பிட்டளவில் முஸ்லீம்களுக்கு இல்லை.

போர்க்குற்றவிசாரணை விவகாரம், காணமல் போனவர்கள் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலைப் பிரச்சினை, தமிழ்ப் பிரதேசங்களில் தேவைக்கு மீறிய இராணுவப் பிரசன்னம், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை, மீள்குடியேற்றப் பிரச்சினை, வடக்கு கிழக்கில் சுமார் ஒரு இலட்சம் விதவைகளின் மறுவாழ்வுப் பிரச்சினை, யுத்தகாலத்தில் அழிக்கப்பட்ட கிராமியப் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் சவால், வறுமை காரணமாக தமிழ் விதவைகள் மற்றும் யுவதிகளின் கலாசாரச் சீரழிவுப் பிரச்சினை, இலங்கை திரும்பாமல் இந்தியாவில் இன்னும் தங்கியிருக்கும் சுமார் ஒரு இலட்சம் தமிழர்கள் என்று நீண்டு செல்லும் இன்னோரன்ன பிரச்சினைகள் எதுவும் ஒப்பீட்டளவில் முஸ்லீம்களுக்கு இல்லை.

மேலும், வடக்குகிழக்குத் தமிழர்களின் அடிப்படை அரசியல் கோரிக்கையாகவுள்ள வடக்குகிழக்கு இணைந்த மொழிவாரிப் பிராந்தியத்தை அல்லது மாகாணத்தை ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த காலத்தில் 'தென்கிழக்கு' அலகைத் தூக்கிப்பிடித்த ஸ்ரீ லங்கா முஸ்லீம்காங்கிரஸ் 2008 இல் வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டபின்னர் தென்கிழக்கு அலகை அடக்கியே வாசிக்கிறது. காரணம் தமிழர்களுக்கு வடக்குமாகாணம்; கிழக்கு முஸ்லீம்களுக்குரியது என்ற உளவியலை முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம்களிடையே வளர்த்துவிட்டுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியற் செயற்பாடுகளும் அதற்கு அனுசரணையாகவே அமைந்து கொண்டுள்ளன. எனவே வடக்குகிழக்கு இணைப்பு குறித்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியுடனான எந்தப் பேச்சுவார்த்தையும் வெற்றியளிக்கப் போவதில்லை. கடந்த காலங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் எதுவும் முற்றுப் பெற்றதில்லை. அண்மைக்காலத்தில் கிழக்குமாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லீம் காங்கிரஸிடம் மூன்றுதரம் மூக்குடைபட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸிடம் 'சூடுகண்ட பூனை' யாகும்.

இந்தப் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'தமிழ் பேசும் மக்கள்' என்று கூறி முஸ்லீம்களையும் வில்லங்கமாக இணைத்துக் கொண்டு உத்தேச புதிய அரசியல் யாப்பில் தீர்வைத் தேடுவது அரசியல் முட்டாள்தனம் ஆகும். தமிழர்கள் தங்கள் கோரிக்கையை அரசியல் அரங்கில் முன்வைக்கட்டும். முஸ்லீம்கள் தங்களுக்குத் தேவையானதை தாங்களே முன்வைக்கட்டும். இதுவே யதார்த்தமானது. இணைந்த வடக்குகிழக்கில் வாழும் முஸ்லீம்கள் தங்கள் அரசியல் அபிலாஷைகளுக்குரிய தீர்வைத் தேடும் விடயத்தை அவர்களிடமே விட்டுவிடுவதே விஞ்ஞானபூர்வமானது. இணைந்த வடக்குகிழக்கில் உள்ள முஸ்லீம்கள் எதிர்பார்க்கும் தீர்வுகளுக்கான வாய்ப்பாடு மத்திய, ஊவா, மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களை உள்ளடக்கிய நிலப் பரப்பில் அல்லது பிராந்தியத்தில் வாழும் மலையகத்தமிழர்களுக்கும் பொருந்தும் என்பதையும் இங்கு மனம் கொள்ளுதல் அவசியம். மேலும் இந்தியாவில் பல மதங்கள் இருப்பினும் இந்தியாவின் அரசியலமைப்பு மதச்சார்பற்றது என்பதையும் இந்தியாவில் மொழிவாரி மாநிலங்களே உள்ளன அவை மத ரீதியானவை அல்ல என்பதையும் கவனத்திற் கொள்வது அவசியம்.

எனவே கடந்தகால அனுபங்களின் அடிப்படையிலும் இன்றுள்ள யதார்த்தச் சூழ்நிலையிலும் தமிழர்தம் அரசியல் செல்நெறி 'தமிழ் பேசும் மக்கள்' என்ற அடிப்படையில் அல்லாமல் தமிழ்மக்கள் என்ற அடிப்படையில் அமைய வேண்டியதும் முஸ்லீம்களின் விவகாரத்தை முஸ்லீம்களிடமே விட்டுவிடுவதுமே அரசியல் நேர்மையின் பாற்பட்டது. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு முஸ்லீம்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவளிக்கின்ற அதேபோல முஸ்லீம்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தமிழர்கள் ஆதரவளிக்கின்ற அதேபோல இந்நாட்டுச் சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லீம் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் சிங்களவர்கள் ஆதரவளிக்கின்றதுமான அரசியல் கலாசாரம் ஒன்றினூடாகவே - அதனைப் பிரதிபலிக்கின்ற அரசியல் யாப்பு ஒன்றினூடாகவே - இலங்கையின் தேசிய ஒருமைப்பாடும் ஒற்றுமையும் உறுதிபெறும்.

மேலும், தமிழர்களைப் பொறுத்தவரை தீர்வு தேடி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஸ்கொட்லாண்டுக்குப் போவதைவிட இலங்கையில் வடக்குகிழக்கு மாகாணம் இணைந்த அதிகாரப்பகிர்வு அலகிற்குச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறும் நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செல்வதும் உத்தேச புதிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்படும் காலம்வரை காத்திராமல் தற்போதைய பதின்மூன்றாவது அரசியலமைப்புச் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்வதற்கான வழிமுறைகளைத் தேடுவதும் பயன்மிக்க செயற்பாடுகளாகும்.

*06.02.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# தமிழர் அரசியல் யதார்த்தத்தை நோக்கிச் செல்ல வேண்டும்

ஒரு சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியொன்றின் செயற்பாடுகள் மற்றும் அக்கட்சியின் அரசியல் நிகழ்ச்சிநிரல் அச் சமூகத்தினரைச் சமூக பொருளாதார ரீதியாக மேம்பாடடையச் செய்வதாக அமைய வேண்டும். அதேபோன்று அதன் மறுதலையாக ஒரு சமூகம் தன்னைச் சமூக பொருளாதார ரீதியாக வலுப்படுத்திக் கொள்ளும் போது அச்சமூகம் அரசியல் ரீதியாகவும் வலுவடையும் என்பதே யதார்த்தம்.

ஆனால் இலங்கையின் வடக்குக்கிழக்குத் தமிழர்களைப் பொறுத்த வரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காலத்திலிருந்து பின் தமிழர் விடுதலைக்கூட்டணியின் காலத்திற்கூடாக இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காலம்வரை துரதிஸ்ட்டவசமாகத் தமிழர்தம் அரசியல் தலைமைகள் யதார்த்தத்தைப் புறந்தள்ளியே வந்துள்ளன. கனவுகளும் கற்பனைகளுமே தமிழர்களின் அரசியலைக் காவி வந்துள்ளன.

தேசிய இனங்கள் என்பதற்கான வரைவிலக்கணங்கள் ஒரு புறமிருக்க இலங்கையில் இன்று சிங்களம், தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் ஆகிய நான்கு தேசிய இனங்கள்; அல்லது நான்கு தனித்துவமான இனக்குழுமங்கள் இருக்கின்றன என்பதே யதார்த்தம். இவற்றில் சிங்களம் இந்நாட்டின் பெரும்பான்மையினம் என்ற வகையில் ஆட்சி அதிகாரம் எப்போதும் அவர்கள் கைகளில் இருந்த படியினால் 'பரிமாறுபவன் நம்மவனாக இருந்தால் அடிப்பந்தியென்ன நுனிப்பந்தி யென்ன' என்பதுபோல் சிங்களஇனம் ஒப்பீட்டளவில் அதிகமான சமூக பொருளாதார அனுகூலங்களை அடைந்திருக்கிறது. சிறுபான்மை இனங்களான வடக்குகிழக்குத் தமிழர்கள், இலங்கை முஸ்லீம்கள் மற்றும் இந்திய வம்சாவழி மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை முஸ்லீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் மலையகத் தமிழர்களும் அவர்களுடைய அரசியல் செயற்பாடு கள் மூலம் அடைந்துள்ள சமூக பொருளாதார 'அடைவு' களுடன் ஒப்பிடுகையில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் பல பின்னடைவுகளையே அடைந்திருக்கிறார்கள். இந்த யதார்த்தத்தை உணர்ந்து வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தங்கள் கடந்த அறுபதுவருட கால அரசியற் செயற்பாடுகள் குறித்த சுயமதிப்பீட்டினை - சுய விமர்சனத்தினை காலம் கடந்தவிட்ட இன்றைய நிலையிலாது - Better late than never- மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

இலங்கை முஸ்லீம்களுக்கான தனித்துவமான அரசியல் தலைமை யொன்று உணரப்பட்ட நிலையில் அத்தலைமை கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டே மேற்கிளம்ப வேண்டும் என்ற கருத்தியலிற் கிணங்க உருவான ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் 1989 இல் நடைபெற்ற முதலாவது விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் போட்டியிட்டு முதன்முறையாகப் பாராளுமன்றம் சென்றார். ஆர். பிரேமதாச அவர்கள் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலமது. அப்போது அஸ்ரப் எதிர்க்கட்சியிலேயே இருந்தார். ஆனால் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட அவர் திரைமறைவில் ஜனாதிபதி ஆர்.பிரதேமதாச அவர்களுடன் நல்லுறவைப் பேணி வந்தார்.

1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்தனா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறை அரசியலமைப்பில் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையில் தேர்தல் மாவட்டமொன்றில் போட்டியிடும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சை க்குழுவொன்று ஆசனங்களைப் பெறும் தகுதியை அடைவதற்கான வெட்டுப்புள்ளி 12% ஆக இருந்தது. அப்படியாயின் இலங்கையின் வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள தேர்தல்மாவட்டங் கள் எதிலுமிருந்து சிறுபான்மையினமொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சி ஆசனமொன்றைப் பெற்றுக் கொள்வது அரிது. பாராளுமன்றத்தில் முஸ்லீம்பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் கையாண்ட மறைமுகமான நடவடிக்கையே இது. அஸ்ரப் அவர்கள் எதிர்கட்சியிலே இருந்த போதும் ஜனாதிபதி.ஆர்.பிரேமதாச அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் ஏற்படுத்திக்கொண்ட நல்லுறவின் அடிப்படையில் அரசியல் காய்களை நகர்த்தி வெட்டுப்புள்ளியை 5% ஆக்கினார். இது இலங்கை முஸ்லீம்களுக்கு அவர் பெற்றுக் கொடுத்த மிகவும் சாதனைமிக்க அரசியல் வரப்பிரசாதம். இதனைச் சாதிப்பதற்கு அவர் 'போர்க்கோலம்' பூணவில்லை. யதார்த்த பூர்வமாக உகந்த அணுகுமுறையை அவர் கையாண்டிருந்தார். அதில் தவறில்லை.

1965 ம் ஆண்டு தமிழரசுக்கட்சியானது டட்லி சேனநாயக்க அவர்களைப் பிரதமராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து அமைச்சொன்றைப் பெற்றுக் கொண்டது. செனட்டர் அமரர் மு.திருச்செல்வம் அவர்கள் தமிழரசுக்கட்சியின் சார்பாக ஸ்தலஸ்தாபன அமைச்சராகப் (தற்போதைய உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர்) பதவியேற்றிருந்தார். தமிழரசுக்கட்சி தீர்க்கதரிசனத்துடன் செயற்பட்டிருந்தால் இந்த அமைச்சின் மூலம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏன் வடக்குக் கிழக்கு வெளியிலேயும்கூட அவசியமான இடங்களில் தமிழ்ப் பெரும்பான்மை உள்ளூராட்சி அலகுகளை ஏற்படுத்தித் தமிழர்களுடைய வாழ்விடங்களை 'அறுக்கை' செய்திருக்கலாம். அதிகுறைந்த பட்சம் அம்பாறை மாவட்டத்தில் கல்முனைத் தமிழர்களின் கோரிக்கையை ஏற்று அப்போதிருந்த கல்முனைப் பட்டினசபையை இரண்டாகப் பிரித்து வடபாதியைத் தமிழ்ப்பெரும்பான்மைப் பட்டினசபையாகவும் தென்பாதியை முஸ்லீம் பெரும்பான்மைப் பட்டினசபையாகவும் உருவாக்கியிருக்கலாம். அமைச்சர் மு.திருச்செல்வம் அவர்கள் ஓர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதனைச் செய்திருக்கமுடியும். ஆனால் தமிழரசுக் கட்சி இதில் கவனமெடுக்கவில்லை. காரணம் எதிர்காலத்தில் கல்முனைத்தொகுதியில் தமிழரசுக்கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் முஸ்லீம் வேட்பாளரின் வெற்றியை இது பாதிக்கக்கூடும் என்பதால் கல்முனைத்தொகுதியின் முஸ்லீம் அரசியல்வாதிகளின் முகம் கோணாமல் நடந்து கொள்ளும் தேவை எப்போதுமே கட்சி அரசியலுக்கே முன்னுரிமை கொடுக்கும் தமிழரசுக்கட்சிக்கு இருந்தது. மேற்கூறப்பட்டவாறு அன்று கல்முனைப் பட்டினசபை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தால் இன்று கல்முனைத் தமிழர்களின் இருப்புக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்க மாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.திருச்செல்வம் அவர்கள் சிறந்த கல்விமானாக இருக்கலாம். சட்ட நுணுக்கங்கள் தெரிந்த சட்ட மேதையாக இருக்கலாம். இவை யெல்லாம் இருந்தும் கல்முனைத் தமிழர்களின் எதிர்காலம் குறித்த புரிதல் அவரிடம் இருக்கவில்லை. ''மேட்டுக் குடி அரசியல்' பிரமுகர் ஒருவர் இப்படித்தான் நடந்து கொள்வார். உண்மையில் தமிழரசுக் கட்சி உரிமைப் போராட்ட வலியுணர்ந்த ஒருவரை அன்று அமைச்ச ராக்கிப் பார்த்திருக்க வேண்டும். இதுவே யதார்த்த பூர்வமானது. மாறாகக் கொழும்பு வாழ் பிரமுகர் ஒருவரை அமைச்சராக்கியதால் அவரால் அடிமட்டத் தமிழர்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்க முடியாமல் இறுதியில் திருகோணமலை நகரத்தைப் புனித நகராக்கும் ஒரு நுண்ணுணர்வு - Sentimental - விவகாரத்தைக் கையிலெடுத்து அதனால் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ததும் தமிழரசுக் கட்சி எதையுமே சாதிக்காமல் அப்போதைய யூ.என்.பிக் கூட்டரசாங் கத்திடமிருந்து வெளியேறியதுதான் கண்ட மிச்சம்.

1994 இல் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான அஸ்ரப் அவர்கள் திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரத்துங்க ஜனாதிபதியாகத் தலைமைவகித்த அரசுடன் பங்காளியாக இணைந்து அமைச்சர் பதவியையும் பெற்று அதன் மூலம் பல சமூக பொருளாதார நன்மைகளை முஸ்லீம் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்தார். அம்பாறை மாவட்டத்தில் உருவான தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒலுவில் துறைமுகமும் அவரின் யதார்த்தபூர்வமான அரசியல் முஸ்லீம் சமூகத் திற்குப் பெற்றுத்தந்த அறுவடைகளாகும். மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம் மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங் களில் பிரதேச செயலாளர் பிரிவுகளைப் புதிதாக ஏற்படுத்தியும் கல்முனைப் பட்டின சபையை நகரசபையாகத் தரமுயர்த்தியும் முஸ்லிம் சமூகத்தை வலுவூட்டினார். அதில் தவறில்லை. முஸ்லீம் சமூகத்திற்குச் செய்ய வேண்டியதை யதார்த்த அரசியல் மூலம் அவர் சாதித்துக் காட்டினார். ஆனால் தமிழர் அரசியல் தலைமைகளிடத்திலோ கிராமமட்டத்தில் - பிரதேசசெயலாளர் மட்டத்தில் - உள்ளூராட்சி அலகு மட்டத்தில் தமிழ்ச் சமூகத்தை வலுவூட்டுகின்ற எந்தத் திட்டமும் எந்தக்காலத்திலும் இருந்ததில்லை. அஸ்ரப் அவர்கள் 1989 இலிருந்து அவர் மரணிக்கும் 2000 வரை சுமார் பதினொரு வருடங்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலில் இருந்தார். அதிலும் 1989 இலிருந்து 1994 வரை எதிர்க் கட்சியில் இருந்தார். 1994 இலிருந்து 2000 வரைதான் ஆளும்கட்சியில் அமைச்சராக இருந்தார். ஆனால் அவர் இக்குறுகிய காலப்பகுதியில் முஸ்லீம் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்த சமூக பொருளாதார அரசியல் நன்மைகளில் நூறில் ஒரு பங்கினைத்தானும் தமிழர் அரசியல் தலைமை தமிழ்ச் சமூகத்திற்குச் செய்யவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதைத் தமிழ்ச் சமூகம் சுயமதிப்பீடுசெய்து கண்டறிய வேண்டும். சிந்தனைகள் வெறும் உணர்ச்சிகளின் பின்னே செல்லாமல் யதார்த்தங் களை நோக்கிப் பயணிக்க வேண்டும். மாற்றுச் சிந்தனைகளுக்கும் மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். மாற்றத்தை விரும்பாத ஒரு சமூகம் வரலாற்றில் முன்னேறியதே கிடையாது.

கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சியென்றாலும் சரி அல்லது தமிழர்விடுதலைக் கூட்டணியென்றாலும் சரி அண்மைக் காலத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ‘ஆளும்’ கட்சியாகத் தம்மை ஆக்கிக் கொண்டுள்ள இன்றைய தமிழரசுக் கட்சியென்றாலும் சரி தமிழர்களுடைய அரசியல் தனிநபர் நலன்கள் சார்ந்தும் அல்லது அத்தனிநபர்கள் அங்கம் வகிக்கும் கட்சியின் நலன்கள் சார்ந்தும் முன்னெடுக்கப்பட்டதே தவிர மக்கள் நலன் சார்ந்து வளர்த்தெடுக்கப்படவில்லை. ‘வாக்குப் பெட்டி’ அரசியலுக்காக மக்கள் கனவுகளையும் கற்பனைகளையும் நோக்கி உணர்ச்சி யூட்டப்பட்டார்களே தவிர அறிவுபூர்வமான அரசியலை நோக்கி மக்கள் ஆற்றுப்படுத்தப்படவில்லை. தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுகே (இடைப்பட்ட காலமொன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியனுக்கும்) புள்ளடி போடும் வண்ணம் மூளைச்சலவை செய்யப்பட்டார்கள். தமிழர்களின் பின்னடைவுகளுக்கு இதுவே அடிப்படைக்காரணம். அரசியல் முற்போக்குச் சிந்தனைகள் தமிழர்களின் அரசியல் தலைமைகளினால் காயடிக்கப்பட்டே வந்துள்ளன. கடந்த காலத்தில் தமிழர் அரசியல் தலைமைகள் விட்ட அரசியல் தவறுகளைப் பட்டியலிட்டு விபரிக்க முடியும். விரிவஞ்சி அவற்றை இப்பத்தியில் தவிர்த்துக் கொள்கின்றேன். மேற்கூறப்படவை சிறு உதாரணங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் கிழக்கு மாகாண சபை விவகாரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொண்ட விதம் அரசியலை யதார்த்த பூர்வமாக அணுகத் தெரியாத அல்லது அணுக விரும்பாத அதன் பலவீனத்தை வெளிக்காட்டுகிறது. மகிந்தராஜபக்ச அவர்கள் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்திலும் பின்னர் சென்ற ஆண்டு மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்திலுமாக இரண்டு தடவைகள் கிழக்குமாகாண முதலமைச்சர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கதவைத் தட்டியது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அவ்விரு சந்தர்ப்பங்களையும் கோட்டை விட்டது. தமிழர்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு வடக்கு மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இரு வெவ்வேறு 'வியூகம்' களை வகுத்துச் செயற்படவேண்டும் என்ற யதார்த்தம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புரியவில்லை. அரசியலை யதார்த்தபூர்வமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் கையாண்டு அதனால் விளைகின்ற சமூக பொருளாதார நன்மைகளைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் 'வித்தை' தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியவில்லை. மொத்தத்தில் செயற்பாட்டுத் திறன் இல்லாத அரசியல் தலைமைகளைத்தான் கடந்த அறுபது வருட காலமாகத் தமிழர்கள் தேர்ந்தெடுத்து வருகிறார்கள் என்ற யதார்த்தம் இப்போதாவது உணரப்படல் வேண்டும். மக்கள் நலன்சார்ந்த அரசியலுக்குத் தேவையான உண்மை - நேர்மை - கண்ணியம் - அர்ப்பணிப்பு - மக்கள் மீதான ஆத்தமார்த்தமான நேசிப்பு - அரசியல் ஒழுக்கம் - ஆற்றல் - ஆளுமை - செயற்பாட்டுத் திறன் உள்ள அரசியல் தலைவர்கள் இன்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அதாவது இன்றைய தமிழரசுக் கட்சியில் இல்லை என்ற யதார்த்தத்தைத் தமிழ்ச் சமூகம் சுயமதிப்பீடு மூலம் தெரிந்து கொண்டு இனிமேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தமிழரசுக் கட்சியையும் நம்பி ஏமாறாமல் செயற்பாட்டுத் திறன் மிக்க மாற்று அரசியல் சக்தியொன்றின் மேற்கிளம்புகைக்குத் தமிழ்ச் சமூகம் தோள் கொடுக்க வேண்டும். ஆம்! தமிழர் அரசியல் யதார்த்தத்தை நோக்கித் திசை திரும்ப வேண்டிய காலம் இதுவாகும்.

*13.02.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# தெளிவான நிகழ்ச்சி நிரல் இல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 இல் உருவாக்கம் பெற்றது. உருவாக்கம் பெற்று பதினைந்து ஆண்டுகளைக் கடந்து விட்ட இன்றைய நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கென்ற அமைப்பு விதிகளோ (யாப்பு) நிர்வாகக் கட்டமைப்போ வலைப்பின்னலோ இல்லை. பங்காளிக் கட்சிகளுக்கிடையே ஒழுங்கான ஒருங்கிணைப்பு இல்லை. பொதுவான வேலைத் திட்டமோ தெளிவான அரசியல் நிகழ்ச்சி நிரலோ இல்லை. இந்தப் பலவீனங்களால்தான் தமிழ் மக்களின் பிரச்சி னைகளைக் கையாள்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுமாறுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக் கட்ட 'முள்ளி வாய்க்கால்' யுத்தத்தின்போது அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதமான அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமக்கும் இந்த யுத்தத்திற்கும் சம்பந்தம் இல்லையென்பதுபோல் இந்தியா சென்று தங்கியிருந்தார். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபத்திரெண்டு பேர் இருந்தார்கள். போரில் அகப்பட்டுக் கொண்ட அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்றக் குறைந்தபட்சம் போர் நிறுத்தம் வேண்டி இந்த இருபத்திரெண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றப் படிக்கட்டில் அமர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்திருக்கலாமே? அதுதானே உண்மையான அகிம்சைப் போராட்டம்! அதுதானே மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கை! இப்படிச் செய்திருந்தால் இலங்கை அரசாங் கத்தின்மீது அழுத்தத்தை ஏற்படுத்திச் சர்வதேச சமூகத்தின் கவனத்தை அது ஈர்த்திருக்கும். போர் நடைபெற்றபோது 'புதினம்' பார்த்திருந்து விட்டு யுத்தம் முடிந்த பின் சர்வதேச சமூகம் தமிழ் மக்களைக் கைவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுவிட்டது என்று கதறி என்ன பிரயோசனம்? பின்னாளில் சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை வேண்டி வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்தவர்கள் - சர்வதேச போர்க்குற்ற விசாரணை வேண்டி ஜெனீவா வுக்குப் பறந்தவர்கள் - தேர்தல் செலவுக்குப் பணம் சேர்க்கப் புலம்பெயர் நாடுகளுக்குப் போனவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போர்நிறுத்தம் வேண்டி வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்தார்களா? புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று இராஜதந்திர நடவடிக்கையில் ஈடு பட்டார்களா? இல்லை. பதிலாகப் பாராளு மன்றத்தில் வீரவசனங் களைப் பேசிப் போருக்கு - அதாவது எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்துக் கொண்டிருந்தார்கள். வடக்குக்கிழக்குத் தமிழ்ச் சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மீது வைத்த நம்பிக்கையையோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கையளித்த பொறுப்பினையோ நிறைவேற்றி வைக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை உண்மையாகவோ, நேர்மையாகவோ, அர்ப்பணிப்புடனோ - வினைத்திறனுடனோ செயற் படவில்லை என்பதுதான் தமிழ்ச் சமூகத்தின் தலைவிதி.

2009 மே 19 அன்று முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் 2010 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'சர்வதேச போர்க்குற்ற விசாரணை' பற்றிய ஒரு வார்த்தை கூட இல்லை. 2012 இல் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகக் கூட்டத்தில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்த பின்னர்தான், சர்வதேச போர்க் குற்ற விசாரணை பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கதைக்கத் தொடங்கியது.

யுத்தம் முடிந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 'கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு'வை நிய மித்தார். இந்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்தபோது இவ்வறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகங்களில் அறிக்கை விட்டார். ஆனால் பின்னர் 2012 இல் ஐ.நா மனித உரிமை ஆணையகக் கூட்டத்தில் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்று ஆதரித்தது. முன்பு இந்த ஆணைக்குழுவின் அறிக்கையை முற்றாக நிராகரித்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தங்களால் நிராகரிக்கப்பட்ட அறிக்கை யிலுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றும்படி அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை வரவேற்று ஆதரித்தமை ஓர் முரணான அரசியற் செயற்பாடாகும். மக்கள் நலன்சார்ந்த ஓர் தெளிவான அரசியல் நிகழ்ச்சி நிரல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை என்பதைத்தான் இம்முரண்பாடு வெளிப்படுத்துகிறது. போதாக்குறைக்கு தங்களால்தான் அமெரிக்கா இத்தீர்மானத்தைக் கொண்டுவந்தது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னாளில் தம்பட்டம் வேறு அடித்தும் கொண்டது.

2012 அமெரிக்கா இத்தீர்மானத்தைக் கொண்டுவந்தது, சீனாவின் பக்கம் சாய்ந்து கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தனது வழிக்குக் கொண்டு வருவதற்கான ஒரு முஸ்தீபே தவிர தமிழ் மக்களின் மீதான கரிசனையால் அல்ல என்பது இலகுவாக விளங்கக்கூடியதொன்றே.2012 இல் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் 2013,2014 ஆம் ஆண்டுகளில் மேலும் படிப்படியாக இறுக்கமடைந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தலைமையிலான விசாரணைக் குழுவின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு கூட்டத்தொடரில் விவாதிக்கப் படுவதற்கான நிலையை அடைந்தமை ஏற்கனவே தெரிந்த விடயந்தான்.

ஆனால் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் குறித்த சர்வதேச விசாரணை வேண்டுமென்று ஆர்ப்பரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 2015 ஜனவரி 8 ல் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர் சர்வதேச விசாரணை பற்றிய விடயத்தில் 'சுருதி' யை மாற்றிக் கொண்டது. 'நவநீதம்பிள்ளை தலைமையிலான குழுவின் விசாரணை சர்வதேச விசாரணைதான். எனவே சர்வதேச விசாரணை முடிந்து விட்டது. இனிமேல் சர்வதேச விசாரணை தேவையில்லை' எனச் சாரப்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் அதைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராச ாவும் கூறத்தொடங்கினர். ஆனால் பின்னர் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வேண்டி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஆறு இலட்சம் கையெழுத்துகளை இலக்குவைத்து ஐ.நாவுக்கு அனுப்புவதற்காக வடக்கு, கிழக்குத் தமிழர்களிடையே கையெழுத்து வேட்டையை ஆரம்பித்தவுடனும் வடக்கு மாகாண சபை 'இனப்படு கொலை' தீர்மானத்தை நிறைவேற்றி சர்வதேச போர்க்குற்ற விசா ரணையே வேண்டுமென்று கோரும் மகஜரை ஐ.நா வுக்கு அனுப்பிய வுடனும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சுருதியை மீண்டும் மாற்றி 'உள்ளக விசாரணையை ஒருபோதும் ஏற்கமாட்டோம். சர்வதேச விசாரணையே வேண்டும்' எனப் பாடத்தொடங்கினர். அதாவது ஒரு கட்டத்தில் முன்பு சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்று கூறிய தமிழரசுக் கட்சித் தலைவர்கள், இப்போது சர்வதேச விசாரணையே வேண்டும் என மாற்றிப் பாடத்தொடங்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம், தெளிவான நிகழ்ச்சி நிரல் இல்லையென்பதற்கு இது இன்னுமொரு எடுத்துக் காட்டு. இறுதியில் 2015 செப்படம்பரில் அமெரிக்கா ஆரம்பத்தில் கொண்டுவர இருந்த உத்தேச தீர்மானம் நீர்த்துப்போய் இலங்கை இணை அனுசரணை வழங்கும் தீர்மானமாக அது வடிவெடுத்த போது - அதாவது உள்ளக விசாரணையாக வடி வெடுத்தபோது - தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை என்பதுபோல், மேற்படி உள்ளகவிசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்கவுள்ளதால் வந்திருப்பது சர்வதேச விசாரணைதான் என விளக்கம் வேறு அளித்தனர். ஆனால் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து மீண்டுள்ள ஐ.நா வின் இந்நாள் மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைன், உள்ளக விசாரணைப் பொறி முறையில் வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்வாங்குவதா? இல்லையா என்கிற விடயம் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தது என்று திட்டவட்டமாகக் கூறி, உள்ளக விசாரணைப் பொறிமுறையையும் ஐதாக்கிவிட்டுச் சென்றுள்ளார். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இப்போது வாயை மூடிக்கொண்டுள்ளனர்.

இனி தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்திற்கு வருவோம். சென்ற வருட இறுதியில் தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் விடுதலை வேண்டி சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தபோது 2015 நவம்பர் 7ம் திகதிக்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் எழுத்துமூலம் பெற்று அதனைக் கொண்டுபோய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அரசியல் கைதிகளிடம் காட்டித்தான் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கைதிகளின் உண்ணாவிரதத்தைக் கைவிடவைத்தனர். அதுமட்டுமல்ல, கைதிகள் விடுதலைசெய்யப்படாது விட்டால் அடுத்தகட்ட உண்ணா விரதத்தின்போது தாங்களும் கைதிகளுடன் இணைந்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் தமிழ்த் தலைவர்கள் சூளுரைத்தனர். தமிழ் கைதிகளின் விடுதலை திருப்திகரமாக நடைபெற வுமில்லை. தலைவர்கள் உண்ணாவிரதம் இருக்கவுமில்லை.

2014 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாடு வவுனியாவில் நடைபெற்றபோது அம்மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட மாவை சேனாதிராசா, அவ்வருட இறுதிக்குள் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சி னைக்கான நிரந்தரத் தீர்வினை முன்வைக்காவிட்டால் 2015 ஜனவரியில் 'அறப்போராட்டம்' வெடிக்கும் என்றார்கள். தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், 2015 இறுதிக்குள் தம்பி மாவை சேனாதிராசாவின் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும் என்று 'ஆரூடம்' கூறினார். இவை எதுவும் நடைபெறவில்லை. தமிழர் அரசியலில் இப்போது நடைபெறுவது என்னவென்றால் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற பெயர்ப்பலகையை மட்டும் கொழுவிக் கொண்டு இன்றுள்ள தமிழரசுக் கட்சியானது சில தனி நபர்களின் தன்னலம் சார்ந்த தன்னிச்சையான தீர்மானங்களின் மீது செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் நலன் சார்ந்து செயற்படுகின்ற ஒரு கட்டமைப்பு அல்லது பொறிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமோ அல்லது அதன் தலைமைக் கட்சியாக ஆதிக்கம் செலுத்துகின்ற தமிழரசுக் கட்சியிடமோ இல்லை. தங்களை நம்பி வாக்களித்த தமிழ்ச் சமூகத்தை ஏமாற்றுகின்ற ஓர் சந்தர்ப்பவாத அரசியலைத்தான் - தெளிவான இலக்கும் திட்டமும் இல்லாத ஓர் 'ஏட்டுச் சுரைக்காய்' அரசியலைத்தான் - கடைந்தெடுத்த கட்சி அரசியலைத்தான் தமிழரசுக் கட்சி கடைப்பிடித்துவருகிறது. 'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனைகள் செய்யும் இவ்வாய்ச் சொல் வீரர்களை' தமிழ்ச் சமூகம் இன்னும் எவ்வளவு காலத்திற்குப் பொறுத்திடப் போகிறது? இந்த வாய்ச்சொல் வீரர்களும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் உட்பட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும், உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களும் தமிழ் மக்களின் அவலங்களையும் அரசியல் அறியாமையும் மூலதனமாகக் கொண்டு பதவி - புகழ் - விளம்பரம் - பணம் - வாழ்க்கை வசதிகள் தேடும் பிழைப்பைத்தான் 'தமிழ்த் தேசியம்' எனும் போர்வையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையானது. பாரதியாரின் கவிதைவரிகளிலே கூறுவதானால் 'சீச்சீ! கெட்ட நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு!' தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அண்மையில் வெளியிட்டுள்ள 'தடம் பதித்த தமிழ்த் தேசியம்' எனும் நூலில் இன்றுள்ள தமிழரசுக் கட்சி வழிப்போக்கர்களால் நிரம்பிவிட்டது என்று குறிப்பிட்டுள்ளதை இப்பத்தியிலும் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.

தமிழ் மக்கள் நம்பி வாக்களித்த இன்றைய தமிழ்த் தலைவர்கள் இனித் திருந்தப்போவதில்லை. அவர்களைத் திருத்துவதற்காக நேரத்தையும் உழைப்பையும் தமிழர்கள் வீணாக்கவேண்டாம். கிராமங்களிலே ஒரு பழக்கம் - பண்பாடு இருக்கிறது. காலிலே போட்டு நடந்த செருப்புத் தேய்ந்து போய்விட்டால் அதனைக் குப்பையிலே தூக்கி எறிய மனம் வராவிட்டால் அதனைக் குசினி இறப்பிலே சொருகிவைத்துவிட்டுப் புதுச் செருப்பொன்றை வாங்குவது. எனவே தந்தை செல்வா உருவாக்கி வளர்த்தெடுத்த தமிழரசுக் கட்சி என்ற கோதாவில் இன்றைய தமிழரசுக் கட்சியைத் தூக்கி எறிய மனம் வராவிட்டால் அதனை இறப்பிலே சொருகி வைத்து விட்டுப் பதிலாக உண்மையும் - நேர்மையும் - வெளிப்படைத் தன்மையும் - அர்ப்பணிப்பும் - அரசியல் ஆளுமை, அனுபவம், ஆற்றல் மிக்கதும் மக்கள் நலனை மட்டுமே சிந்தித்து செயற்படக்கூடியதும் அரசியலை, விஞ்ஞான பூர்வமாகவும் யதார்த்தபூர்வமாகவும் இராஜதந்திர ரீதியாகவும் கையாண்டு தமிழ் மக்களைச் சமூக, பொருளாதார ரீதியாகக் கைதூக்கி விடக் கூடியதுமான செயற்பாட்டுத் திறன் மிக்க மாற்று அரசியல் சக்தியொன்றினை அடையாளம் கண்டு அதனைக் கட்டியெழுப்பத் தமிழ்ச் சமூகம் சங்கற்பம் கொள்ள வேண்டும்.

*20.02.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# தீர்வுப் பயணத்தில் சிங்கள மக்களின் மனங்களை வெல்வது அவசியம்

பௌத்த சிங்களப் பேரினவாதம் என்பது இலங்கையில் மகாவம்சக் காலத்திலிருந்தே கட்டமைக்கப்பட்ட ஒரு விடயம். கடந்த எழுபது வருடங்களாக அவ்வப்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் தலைவர் களின் குணவியல்புகளைப் பொறுத்துக் கூடியும் குறைந்தும் தணிந்தும் தணியாமலும் காணப்படுகிற ஒரு விடயம். இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இந்த யதார்த்தச் சூழ்நிலைகளுக்கூடாகவே பயணிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

பௌத்த சிங்களப் பேரினவாதத்தைப் போரினால் வெல்வது என்பது வேறு விடயம். அதில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தோற்றுப் போய்விட்டார்கள். ஜனநாயக வழிமுறைகளுக்கூடாகவும் அரசியமைப்பு ரீதியாகவும் தமிழர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வதாயின் அதற்கான உகந்த அணுகுமுறை அவசியம். அந்த உகந்த அணுகுமுறை யாதெனில் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் மனங்களை வெல்வதாகும். ஆனால் துரதிஸ்ட்டவசமாகக் கடந்த காலங்களில் தமிழர்தம் அரசியல் தலைமை களினால் சிங்கள மக்களின் மனங்களை வெல்வதற்கான அரசியல் நடவடிக்கைகள் காத்திரமாக முன்னெடுக்கப்படவில்லை. மாறாக பௌத்தசிங்கள பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு தமிழர்தம் அரசியல் தலைமைகள் குறுந்தமிழ்த் தேசியவாதத்தைக் கையி லெடுத்தமை நிலைமையை மேலும் சிக்கலாக்கியதே வரலாறு ஆகி விட்டது. அதுவே அழிவுகளுக்கும் காரணமாகிவிட்டது.

1944 இல் உருவான ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்து 1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை நிறுவிய எஸ்.ஜே.வி.செல்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகம் (தந்தை செல்வா) அவர்கள் தமிழ்த் தேசியம், தமிழர்தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய கருத்தியல்களை - கோட்பாடுகளை முன்வைத்தார். இவை தவறல்ல. ஆனால் புரட்சிகரமான - முற்போக்கான சிந்தனைகளின் மீது கட்டி எழுப்பப்பட வேண்டிய இக்கருத்தியல்களும் கோட்பாடுகளும் வெறுமனே பாராளுமன்றக் கதிரைகளைச் சுவீகரித்துக் கொள்ளும் நோக்கில் குறுந்தமிழ்த் தேசியவாதச் சிந்தனைகளின் மீது கட்டியெழுப்பப் பட்டமையே தவறாகும். இத்தவறின் காரணமாகவே தமிழர்கள் பாரிய இழப்புக்களைச் சந்தித்தும் கூட அவற்றை ஈடு செய்யும் வகையிலான சமூக பொருளாதார அரசியல் அனுகூலங்களை இதுவரையில் பெற்றுக் கொள்ள முடியவில்லை. கடந்த அறுபது வருடகாலத்தில் முதற்பாதிக்காலத்தில் அமைந்த அகிம்சைப் போராட்டமும் பின்பாதிக் காலத்தில் அமைந்த ஆயுதப் போராட்டமும் சர்வதேச ரீதியாக இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழர்களைத் தனியான தேசிய இனமாக அடையாளப்படுத்தியதைத் தவிர உள் நாட்டில் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்கு இருந்ததையும் இல்லாமற் செய்திருக்கிறதேயொழிய சமூக பொருளாதார அனுகூலங்கள் எதனையும் அறுவடையாகத் தரவில்லை. இந்த உண்மையை மனம் கொண்டு தமிழர்தம் கடந்தகால அரசியற் செயற்பாடுகளைக் காய்தல் உவத்தலின்றிச் சுயவிமர்சனத்திற்கு உட்படுத்தும்போதுதான் நடந்தவை நடந்தவையாகவே இருக்க நடக்கவிருப்பவையாவது நல்லவையாக இருக்கும் வகையில் உகந்த அரசியல் செல்நெறியை எதிர்காலத்தில் அடையாளம் காண உதவியாகவிருக்கும்.

'தமிழரசு' என்ற வார்த்தைப் பிரயோகம் சிங்கள மக்களுக்குத் தவறான சமிக்ஞையையே காட்டிற்று. இலங்கைத் தமிழரசுக் கட்சியானது ஆங்கிலத்தில் Federal Party என அழைக்கப் பட்டதுபோலத் தமிழில் சமஸ்டிக் கட்சி எனப் பிரபல்யப்படுத்தப்பட்டு 1950 களில் இலங்கைக் கான சமஸ்டி அரசியலமைப்புத் திட்ட வரைபொன்று அப்போதைய தமிழர்தம் அரசியல் தலைமையினால் நாடளாவிய ரீதியில் முன்வைக்கப் பட்டு சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து சிங்கள மக்கள் மத்தியிலே கொண்டு செல்லப்பட்டு விளக்கப்பட்டிருந்தால் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் அரசியல் சரியான திசையில் பயணித்திருக்கக்கூடும். துரதிஸ்ட வசமாகத் தமிழர் அரசியலில் அது நிகழவில்லை.

மேலும், 'தமிழரசு' இன் தலைநகரமாகத் திருகோணமலையைக் கற்பிதம் செய்துகொண்டு தமிழரசுக் கட்சியின் முக்கியமான தீர் மானங்கள் திருகோணமலையில் வைத்துப் பிரகடனம் செய்யப் பட்டமையும் தமிழரசுக் கட்சியின் முக்கியமான அரசியல் நிகழ்வுகள் திருகோணமலையைக் குவிமையமாகக் கொண்டு விளங்கியமையும் ( உ + ம் - தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு மற்றும் திருமலை யாத்திரை) சிங்கள மக்களிடம் தவறான சமிக்ஞைகளையே வெளிப்படுத்தி திருகோணமலையைத் தாங்கள் கையகப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையைச் சிங்கள ஆட்சித் தலைவர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் ஊட்டிற்று.

தமிழர்களுடைய அரசியல் உணர்வுபூர்வமாக மட்டுமே கட்டி யெழுப்பப் பட்டதே தவிர அறிவுபூர்வமாக வளர்த்தெடுக்கப்படவில்லை.

தமிழர்களுடைய அரசியற் செயற்பாடுகள் மாடு வாங்கமுதல் நெய்க்கு விலைபேசிய கதையாகவே நிகழ்ந்தது.

தமிழரசுக் கட்சியின் தோற்றத்தின் பின்னர் தமிழர்களின் உரிமைகளுக்கான செயற்பாடுகள் ஓர் போராட்ட வடிவத்தைப் பெற்றது என்பது உண்மைதான். ஆனால் தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியல் என்பது வடக்கிலே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் எதிர் இலங்கைத் தமிழரசுக் கட்சி அதாவது ஜி.ஜி.பொன்னம்பலம் எதிர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தேர்தல் போட்டியாகவும், கிழக்கிலே இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர் தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தேர்தல் போட்டியாகவும் பரிணாமம் பெற்றுத் தமிழர்களின் காலத்தையும் உழைப்பையும் உறிஞ்சி 'வாக்குப் பெட்டி' அரசியலாகவே வளர்ந்தது.

தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியல் என்பது கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் அது செல்ல வேண்டிய புரட்சி கரப் பாதையிலிருந்து விலகி - அதற்கு அவசியமாக இருக்க வேண்டிய முற்போக்குக் குணாம்சங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு - தேர்தலுக்கு மட்டுமே மக்களைத் தயார் செய்யும் வகையில் அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசுப்பேற்றிவிடுகின்ற 'குறுந்தமிழ்த் தேசிய வாதம்' ஆகப் பிற்போக்கு வடிவம் எடுத்தது. தமிழர்களின் பிரச்சினைகளை நாடு தழுவிய முற்போக்குச் சக்திகளிடமோ அல்லது சாதாரண சிங்கள மக்களிடமோ எடுத்துச் சென்று விளக்கி நியாயம் தேட தமிழ்க்காங்கிரஸ் கட்சியோ அல்லது அதன் பின்வந்த தமிழரசுக் கட்சியோ முயலவில்லை. சி ங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தை எதிர்ப்பது என்ற கோதாவில் தமிழர்களுக்கு எதிரான சிங்கள மக்களின் எதிர்ப்புணர்வை அதிகரிக்கச் செய்து பின்பு அதனைக் காட்டித் தமிழர்களை உணர்ச்சியூட்டித் தேர்தல்களில் தமிழர்களின் வாக்குகளை அள்ளிக் கொள்ளும் செயற்பாடுகளைத்தான் தமிழரசுக் கட்சி தொடர்ந்து மேற்கொண்டது. தேர்தல்களில் தமிழரசுக் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர் களின் வெற்றியே தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியலின் 'அடைவு' ஆகக் காண்பிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடிபோடும் இயந்திரமாகவே தமிழர்கள் வார்த்தெடுக்கப்பட்டார்கள். உரிமைப் போராட்ட அரசியலின் படிமுறை வளர்ச்சிகளாகத் தமிழ் மக்களின் சமூக பொருளாதார மேம்பாடுகள் வெற்றிகளாக எண்பிக்கப்படவில்லை. மாறாக உரிமைப் போராட்ட அரசியலின் இலக்கு பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வது மட்டுமே எனச் சித்தரிக்கப்பட்டது. தேர்தல்காலங்களில் 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' போன்ற வீரச் சுலோகங்கள் இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குக் கைகொடுத்தன.

ஒரு சமூகத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக முன்னெடுக்கப்படும் அல்லது அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் உள்ளாகிப்போயுள்ள ஒரு சமூகத்தின் மீட்சிக்காக முன்னெடுக்கப்படும் ஒரு அரசியலுக்கு இருக்க வேண்டிய முற்போக்குக் குணாம்சங்கள் - நவீன, புரட்சிகரச் சிந்தனைகள் - விஞ்ஞான பூர்வமான அணுகு முறைகள் - யதார்த்தபூர்வமான நடைமுறைத் திட்டங்கள் எதுவுமே தமிழரசுக் கட்சியிடம் இருக்கவில்லை. மக்களைத் தங்கள் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கச் செய்யும் வகையில் அவர்களைத் தயார் செய்யும் ஒரு மரபு வழி அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில்தான் வடக்குக் கிழக்குத் தமிழர்களைத் தமிழரசுக் கட்சி அழைத்துச் சென்றது. தேர்தல்களில் தமிழரசுக் கட்சியின் சார்பில் தும்புக்கட்டொன்றை நிறுத்தினாலும் சரி அல்லது கழுதையொன்றைப் பிடித்துக் கட்டி வைத்தாலும் சரி அதனைக் கேள்விக்குட்படுத்தாது அதற்கு வாக்களிக்க வேண்டுமென்றே தமிழர்கள் எதிர்பார்க்கப் பட்டனர். இதனை மறுதலித்தவர்களைத் துரோகிகள் என முத்திரை குத்தும் பிற்போக்குக் கலாசாரம் கட்டி வளர்க்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் அல்லது குறைந்தபட்சம் தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுடன் தொடர்புள்ள வடக்கு மாகாண இடதுசாரி அமைப்புகளுடனோ நட்பினைப் பேணாது அவர்களுடனும் ஒரு பகைமை அரசியலைத்தான் அதாவது எதிர்ப்பு அரசியலைத்தான் தமிழரசுக் கட்சி மேற்கொண்டது. 1960 களில் வடமாகாண கம்யூனிஸ்ட் கட்சியினர் அதாவது இலங்கைக் கம்யூனிஸ்ட கட்சியின் வடபிராந்தியக்கிளை சுன்னாகத்தில் - சங்கானையில் மேற்கொண்ட தீண்டாமைக்கு எதிரான-சாதி ஒழிப்புப் போராட்டத்திற்கு எதிராகவே தமிழரசுக் கட்சி நடந்து கொண்டதை 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' போல் உதாரணமாகக் காட்டலாம்.

வடக்கின் இடதுசாரித்தலைவர்கள் தென்னிலங்கையிலுள்ள சிங்கள இடது சாரித்தலைவர்களுடனும் சிங்கள மக்கள் மத்தியிலே செயற்பட்ட முற்போக்குச் சக்திகளுடனும் தொடர்புடையவர்கள். தமிழரசுக் கட்சி இவர்களுடன் சிநேகபூர்வமான அரசியலை முன்னெடுத்து இவர்களினூடாகத் தமிழ் மக்களின் நியாயமான உரிமைக் கோரிக்கைகளுக்கான காரணங்களையும் தமிழர்களின் உணர்வுகளையும் சிங்கள மக்கள் மத்தியிலே விளக்கியிருக்கலாம். பிரச்சினைகளின் தீர்வுக்கு இவ்வணுகுமுறை உதவியிருக்கும். ஆனால் தமிழரசுக் கட்சியின் சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம், இலங்கையின் சுதந்திர தினத்தை துக்கநாளாக - கரிநாளாக அனுஸ்டித்தமை போன்ற நட வடிக்கைகள் சாதாரண சிங்கள மக்களுக்கும் எரிச்சலையூட்டின. தமிழரசுக் கட்சி 1956 இல் கொழும்பு காலிமுகத்திடலில் மேற்கொண்ட மொழியுரிமைப் போராட்டம் மற்றும் 1961 இல் அரசாங்க நிர்வாகம் சில மாதங்கள் வடக்குக் கிழக்கில் ஸ்தம்பிதமடையும் வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற மொழிவிவகாரச் சத்தியாக்கிரப் போராட்டம் என்பன மத, கட்சி, பிரதேச, சாதி வேறுபாடுகளுக்கு அப்பால் வடக்குக் கிழக்குத் தமிழர்களைத் தமிழரசுக் கட்சியின் பின்னால் அணிதிரள வைத்தது உண்மைதான். ஆனால் அவ்வாறான அணிதிரட்டுகை ஆக்கவிளைவுகளுக்காக ஆற்றுப்படுத்தப்படவில்லை. பிற்காலத்தில் தமிழரசுக்கட்சிக்குத் தேர்தல் வெற்றிகளை மட்டுமே குவிக்கப் பயன்படுத்தப்பட்டது. மொத்தத்தில் தமிழரசுக் கட்சியின் உரிமைப்போராட்ட அரசியற் செயற்பாடுகள் சாதாரண சிங்கள மக்களின் மனதை மாற்றவோ - வெல்லவோ இல்லை. தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தின. அதாவது வாலைச்சுருட்டிக் கொண்டு படுத்துக்கிடந்த பௌத்த சிங்கள பேரினவாதச் சிங்கத்தைக் கீச்சு மூச்சுக் காட்டி எழும்பவைத்தது.

தமிழரசுக் கட்சிக் காலத்திலும் பின்வந்த தமிழர்விடுதலைக் கூட்டணிக் காலத்திலும் தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காலத்திலும் தமிழர் அரசியலில் இத்தகைய போக்கே தொடர் கதையானது.

தமிழர்தம் அரசியல் தலைமைகளின் தவறுகளை விளங்கிக் கொள்ளாத வகையில் 1950 இலிருந்து 1975 வரை தமிழரசுக் கட்சியினால் 'சமஷ்டி'க் (தமிழரசுக்) கனவிலும் 1976 இலிருந்து 2009 வரை தமிழர்விடுதலைக் கூட்டணியாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் தமிழீழத் தனிநாட்டுக் கனவிலும் 2010 இலிருந்து தற்போதுவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் சர்வதேச அழுத்தத்தின் மூலமான 'சமஸ்டி'க் கனவிலும் வடக்குகிழக்குத் தமிழர்கள் சஞ்சரிக்க வைக்கப் பட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்குத் தமிழர்கள் எத்தகைய கனவுகளில் தோய்ந்திருந்தாலும் உண்மைநிலை என்னவெனில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் இருந்ததையும் இழந்து தற்போது 'பிச்சை வேணாம் நாயைப்பிடி' எனும் நிலைக்குத் தள்ளப்பட்டு அரசியலில் பலவீனப் பட்டுப் போயுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் தமிழர்களுக்குச் சாதகமான விடயம் என்னவெனில் 2015 ஜனவரி 8 இல் நடந்த ஜனாதிபதித்தேர்தலின் பின்பும் 2015 ஆகஸ்ட் 17 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் பின்பும் தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை சற்று மாறியிருக்கின்றது. 1994 ஜனாதிபதித் தேர்தலில் திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க வெற்றியீட்டிப் பதவியிலிருந்த காலத்திலும் இவ்வாறான சாதகமான சூழ்நிலை தென்னிலங்கையில் ஏற்பட்டது. ஆனால் அதனைப் பயன்படுத்த தமிழர்களுடைய அரசியல் தலைமை தவறி விட்டது. இந்த அனுபவப் பின்புலத்தில்தான் இன்று எழுந்துள்ள தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை மாற்றத்தைப் பயன்படுத்தி உத்தேச புதிய அரசியல் யாப்பினூடாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்த மொழிவாரிப் பிராந்திய மொன்றினை அதிகுறைந்தபட்சமாகவேனும் பெற்றுக் கொள்ளும் வகையில் எதிர்காலத்திலாவது இதுவரையில் தமிழ்த் தரப்பு மேற்கொண்டிருந்த குறுந்தமிழ்த் தேசியவாத - குரோத அரசியலைக் கைவிட்டு சிங்கள மக்களின் மனங்களை வெல்லுவதன் மூலம் தமிழர்கள் தங்கள் நியாயமான இலக்குகளை அடையும் வழிவகை களைத் தேட வேண்டும். இதற்குத் தேவையான முதற்கட்ட நடவடிக்கை என்னவெனில் தேர்தல்மைய அரசியலுக்கப்பால் - தனிநபர் மற்றும் கட்சி நலன் சார்ந்த அரசியலுக்கு அப்பால் சகல தமிழ் அரசியல் கட்சி களும் இணைந்ததோர் மக்கள் நலன் நாடிய 'ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறை' ஆகும்.

சாதாரண தமிழ் மக்கள் சாதி - சமய - கட்சி - பிரதேச வேறுபாடுகள் அத்தனையையும் கடந்து ஐக்கியப்பட ஆயத்தமாகவே உள்ளனர். தலைவர்கள்தான் தயாராக இல்லை. தலைவர்கள் எனப்படுவோர் முக்கியமாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் - மாகாணசபை உறுப்பினர் கள் - உள்ளூராட்சி உறுப்பினர்கள் மனம் மாற வேண்டும். மக்களை மட்டுமே நேசிப்பவர்கள் மனம்மாறத் தடையிருக்காது. இந்த மனமாற்றம்தான் இன்று தமிழ்மக்களின் உடனடித் தேவையாகும். இன்றுள்ள தமிழ்ச்சூழலில் இந்த மாற்றத்தைக் கொண்டுவரும் தகுதியும் கடமைப்பாடும் பொருத்தப்பாடும் இரு தமிழ்த் தலைவர்களுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டாலும்கூட, ஏதோ ஒரு வகையில் அதிகாரத்திலும் செல்வாக்கிலுமுள்ள அவ்விரு தலைவர்களும் யாரெனில் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவராகவும் உள்ள இரா.சம்பந்தன் அவர்கள். மற்றவர் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ்மக்கள் பேரவையின் இணைத்தலைவருமான முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.சி.வி.விக்கினேஸ்வரன் அவர்கள். எனவே மேற்கூறப்பட்ட மக்கள் நலன் நாடிய 'ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறையை ஏற்படுத்த மேற்கூறப்பட்ட இருவரும் இணைந்து முன்வரவேண்டும். அல்லது இருவரில் ஒருவராவது முன்வரவேண்டும். இருவரும் இதனைச் செய்ய வில்லையென்றால் தமிழர்களின் எதிர்காலம் குறித்துப் பேசுவதற்கு இவர்கள் இருவருக்குமே தகுதியில்லை என்றாகிவிடும். தமிழ்மக்கள் அனைவரும் இதனையிட்டுச் சிந்தித்துச் செயற்படுவார் களாக. இந்த மாற்றம் - ஐக்கியம் ஏற்படுமாயின் அடுத்தகட்ட நகர்வாகச் சிங்கள மக்களின் மனங்களை வெல்லும் வழிவகைகளை நாடலாம்.

*27.02.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவதைவிட தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்குவதே முக்கியம்

இலங்கையின் முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர். பண்டாரநாயக்கா அவர்கள் 1926 களிலேயே சமஸ்டி அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசினார்; எழுதினார். 1927 இல் இலங்கைக்கு மூன்று அலகுகள் கொண்ட சமஸ்டி ஆட்சியைக் கண்டியர்கள் முன்வைத்தனர். சம அதிகாரங்களைக் கொண்ட இம்மூன்று அலகுகளிலொன்றுதான் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகமாகும். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 1944 இல் தமிழ் மக்களைத் தனித் தேசிய இனமாக அடையாளப்படுத்தி சமஸ்டி அமைப்பே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எனவும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்குத் தகுதியானவர்கள் எனவும் இலங்கைத் தேசிய காங்கிரஸுக்கு அனுப்பிய மகஜரில் பரிந்துரைத்தது. ஆனால் அப்போதிருந்த தமிழ் அரசியல் தலைவர்கள் யாழ்மையவாத மேட்டுக் குடி அரசியல் வயப்பட்ட சிந்தனை படைத்தவர்களாக இருந்தபடியால் 'தமிழ்த்தேசியம்' என்ற கருத்தியல் பற்றிக் கவனத்தில் கொள்ளவோ அதில் கரிசனை காட்டவோ இல்லை.

பின்பு 1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்ற பின் 1951 இல் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசியமாநாட்டில் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரான எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்கள் தமிழ்த் தேசிய இனம் - தமிழர்தாயகம் - சுயநிர்ணய உரிமை ஆகிய கருத்தியல்களையும் கோட்பாடுகளையும் முன்வைத்ததுடன் இவை மாநாட்டுத் தீர்மானங்களிலும் உள்வாங்கப்பட்டன. எனினும் தமிழரசுக் கட்சி எதிர்கொண்ட முதலாவது தேர்தலான 1952 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் வடக்கில் காங்கேசன்துறைத்தொகுதியில் வெற்றிபெறவில்லை. காரணம் தமிழ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய உணர்வு வடக்குக் கிழக்குத் தமிழர்களிடையே பெரிதாக வளர்ந்திருக்கவில்லை. இத்தேர்தலில் வடக்கில் கோப்பாய்த் தொகுதியில் அமரர் வன்னியசிங்கம் மற்றும் கிழக்கில் திருகோணமலைத் தொகுதியில் அமரர் இராஜவரோதயம் ஆகிய இருவர் மட்டுமே தமிழரசுக் கட்சியின் சார்பில் வெற்றிபெற்ற வேட்பாளர்களாவர்.

மொழி என்பது ஓர் நுண்ணுணர்வாகும். மொழியுணர்வு ஒரு இனத்தை இலகுவில் பற்றிக் கொள்ளக்கூடியது. அந்தவகையில்தான் 'தனிச் சிங்கள சட்ட மசோதா' வை எதிர்த்துக் கொழும்பு காலிமுகத்திடலில் 1956 இல் தமிழரசுக் கட்சி மேற்கொண்ட சத்தியாக்கிரகமும் அதன்பின் 1961 இல் நீதிமன்றமொழி விவகாரத்தை முன்வைத்து வடக்குகிழக்கு முழுவதும் தமிழரசுக்கட்சி நடாத்திய சத்தியாக்கிரகப் போராட்டமும் மொழியுணர்வையும் அதன் வாயிலாகத் தமிழ்த்தேசிய உணர்வையும் தமிழ்மக்களிடையே கொழுந்து விட்டு எரியச் செய்தது. இந்தியாவின் சென்னை மாகாணத்தில் (தமிழ் நாட்டில்) திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் ரீதியாக மேலெழும்ப தமிழ்மொழியுணர்வையே பயன்படுத்திற்று. அதே வழியிலேயே இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்கில் அரசியல் ரீதியாக மேற்கிளம்ப தமிழரசுக் கட்சிக்கு மொழியுரிமைப் போராட்டங்களே கைகொடுத்தன. 1956 க்குப் பின்னர் இற்றைவரை இலங்கையின் வடக்குகிழக்கில் நடைபெற்ற எல்லாவகையான தேர்தல்களிலும் பெரும்பான்மைத் தமிழர்களால் ஆதரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுத் தமிழ்மக்களின் அரசியல் பிரதிநிதியாகத் தமிழரசுக் கட்சிதான் அல்லது தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்திற்குட்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தற்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்புத்தான் விளங்குகிறது. ஆனால் தமிழரசுக் கட்சி யென்றாலும் சரி - தமிழர் விடுதலைக் கூட்டணியென்றாலும் சரி - தமிழ்த் தேசியக் கூட்டமைப் பென்றாலும் சரி தமிழ்த் தேசியம் பற்றிப் பாராளுமன்றத்தில் பேசிய அளவுக்கு - அரசியல் மேடைகளிலும் பொது வைபவங்களிலும் முழக்கமிட்ட அளவுக்கு - தேர்தல் மேடை களில் உணர்ச்சிகளைக் கொட்டி வீரவசனங்கள் பேசி 'அடைந்தால் மகாதேவி: இல்லையேல் மரணதேவி' என்று 'மகாதேவி' திரைப்படத்தில் வில்லன் நடிகர் பி.எஸ்.வீரப்பா பாணியில் சூளுரைத்த அளவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளில் பக்கம்பக்கமாக அறிக்கைகள் விட்ட அளவுக்கு வடக்குக்கிழக்குத் தமிழர்களின் எதிர்காலவியலை முன்கூட்டியே எதிர்வுகண்டு வினைத்திறனுடன் தமிழ்த்தேசியத் தளத்தில் இயங்கியதா என்பது இன்று கேள்விக் குறியாகத்தான் தெரிகின்றது.

ஒரு தேசிய இனத்தின் இருப்புக்கு மொழிமட்டுமல்ல அந்த இனத்தின் வாழ்விடங்கள் - கலை இலக்கியங்கள் - பண்பாட்டு விழுமியங்கள் - கல்வி மேம்பாடு - பொருளாதாரக் கட்டமைப்பு - அந்த இனம் செறிந்தும் பரந்தும் வாழுகின்ற சூழலின் பாதுகாப்பு போன்ற விடயங்களும் அதிமுக்கியமானவை. இந்த அதிமுக்கியமான விடயங்கள் குறித்த சிந்தனைகளோ செயற்பாடுகளோ தமிழர்தம் அரசியல் தலைமைகளிடம் இதுவரையில் இருந்ததுமில்லை; இப் போதும் இல்லை. இனிமேலும் இப்படித்தான் இருக்கப்போகிறாமா? எனக் காலம் தாழ்த்தியாவது வடக்குக் கிழக்குத் தமிழர்கள் இன்று சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர். தேர்தல் வெற்றிகளை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட தமிழ் அரசியல் தலைமைகளினால் கடந்த எழுபது வருடகாலமாகத் தமிழ் மக்கள் அடைந்த சமூக பொருளாதார இழப்புக்கள் ஏராளம்.

கடந்த காலங்களில் இலங்கையில் அவ்வப்போது நடைபெற்ற தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் மீள்நிர்ணயத்தின் போதும் - நிர்வாக அலகுகளின் உருவாக்கம் மற்றும் அவற்றின் எல்லைகள் வகுக்கப்பட்டபோதும் - உள்ளூராட்சி அலகுகளின் உருவாக்கம், தரமுயர்த்தல் மற்றும் அவற்றின் எல்லைகள் வகுக்கப்பட்ட போதும் தமிழ் மக்களின் வாழ்விடங்களை அறுக்கை செய்யும் விடயத்திலோ - கிராம மட்டத்தில், பிரதேச மட்டத்தில், உள்ளூராட்சி அலகு மட்டத் தில் தமிழ் மக்களை சமூக பொருளாதார அரசியல் ரீதியாக வலுவூட்டும் விடயத்திலோ தமிழர்களின் அரசியல் தலைமைகள் அக்கறையோடு செயற்படவில்லை. தமிழர்களுடைய அரசியல் தலைமைகளின் பேச்சுத் தான் பல்லக்காக இருந்ததே தவிர செயற்பாடுகள் கால்நடைதான். ஆம் 'பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை' என்ற பழமொழிதான் தமிழர்களுடைய அரசியலுக்குப் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பின் கீழான முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 1947ல் நடைபெற்ற போது அப்போதைய மட்டக்களப்பு மாவட்டமானது - அப்போது அம்பாறை மாவட்டம் உருவாகவில்லை - தற்போதைய அம்பாறைமாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதியாகவே இருந்தது. கல்குடா, மட்டக் களப்பு, பட்டிருப்பு, பொத்துவில், கல்முனை ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது. அப்போது மட்டக்களப்பு மாவட் டத்தின் தென்பகுதியாகிய பொத்துவில், கல்முனைத் தொகுதிகளில் செறிந்து வாழ்ந்த தமிழர்களே இன்றைய அம்பாறை மாவட்டத் தமிழர்களாவர்.

1959 ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது அப்போதைய மட்டக்களப்பு மாவட்டமானது கல்குடா, மட்டக்களப்பு (இரட்டை அங்கத்தவர் தொகுதி) அம்பாறை, பட்டிருப்பு, கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய ஏழு தொகு திகளாகப் பிரிக்கப்பட்டன.

1959 தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதியில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவாறு புதிய மட்டக்களப்புத் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டது. அதே போல் முஸ்லிம் உறுப்பினர் ஒருவரும் தமிழ் உறுப்பினர் ஒருவரும் தெரிவு செய்யப்படக் கூடியவாறு திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டது. ஆனால் இதே வாய்ப்பு மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட கல்முனை, நிந்தவூர், பொத்துவில் தேர்தல் தொகு திகளில் வாழ்ந்த தமிழர்களுக்கு அதாவது தற்போதைய அம்பாறை மாவட்டத்தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனையிட்டு அப்போது தமிழரசுக் கட்சி அக்கறை செலுத்தாதது இப்பிரதேசத் தமிழ் மக்களுக்கு அக்கட்சி இழைத்த மாபெரும் அரசியல் தவறு ஆகும். குறைந்தபட்சம் கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய முஸ்லீம் பெரும்பான்மைத் தொகுதிகளில் ஏதாவது ஒரு தொகுதி இப் பிரதேசத் திலிருந்து தமிழ் உறுப்பினர் ஒருவரும் தெரிவு செய்யப்படக்கூடியவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழரசுக் கட்சியின் அசமந்தம் காரணமாக இவ்வாறு ஏற்படுத்தப்படாததால் - இந்தத் தவறின் காரணமாக - அம்பாறை மாவட்டத் தமிழர்கள் சுதந்திர இலங்கையில் 1947 இல் இருந்து 1976ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள்நிர்ணயத்தின்போது உருவான பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டு அதனடிப்படையில் நடந்த 1977 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பொத்துவில் தொகுதி யின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகக் காலஞ் சென்ற ம. கனகரட்ணம் அவர்கள் தெரிவு செய்யப்படும் வரை சுமார் 30 ஆண்டு கள் (1947 - 1977) தங்களுக்கென்று தங்களால் தெரிவு செய்ப்பட்ட தமிழ்ப் பிரதிநிதி ஒருவரைக் கொண்டிருக்கவில்லை. இது சமூக பொருளாதார அரசியல் ரீதியாக அம்பாறை மாவட்டத் தமிழர்களைப் பல பின்னடைவுகளுக்குள்ளாக்கிற்று. இதன் தாக்கம் இன்றும் தொடர்கிறது. இதற்குக் காரணம் தமிழரசுக் கட்சியின் பேச்சோடு மட்டும் நின்றுவிடுகின்ற 'ஏட்டுச்சுரைக்காய்' அரசியலே.

1959 க்குப் பின்னர் அடுத்ததேர்தல் தொகுதிகள் மீள் நிர்ணயம் 1976 இல் நடைபெற்றது. அடுத்த பொதுத்தேர்தல் 1977 இல் நடைபெறவிருந்தது. அப்போது அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இணைந்து 'தமிழர் கூட்டணி' யாக பின்பு 'தமிழர் விடுதலைக் கூட்டணி'யாக வடிவெடுத்திருந்தது. வடக்கில் வன்னியிலே வவுனியா மற்றும் மன்னார் ஆகிய இரு தேர்தல்தொகுதிகளே இருந்தன. 1970ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் வவுனியாத் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் தா.சிவசிதம்பரம் தோல்வியுற்று தமிழரசுக்கட்சி வேட்பாளர் எக்ஸ்.எம்.செல்லத்தம்பு வெற்றியீட்டிருருந்தார். தமிழ்க் காங்கிரஸும் தமிழரசுக் கட்சியும் இணைந்து தமிழர்விடுதலைக் கூட்டணியாகி இருந்த நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வவுனியாத் தொகுதி வேட்பாளர் நியமனத்தைச் செல்லத்தம்புவுக்கு வழங்குவதா இல்லை சிவசிதம்பரத்திற்கு வழங்குவதா என்று கட்சிக்குள் எழக்கூடிய பிரச் சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தமிழரசுக்கட்சி தேர்தல் தொகுதி எல்லைகள் மீள்நிர்ணயக் குழுவிடம் வன்னியிலே மேலதிகமாக ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தொகுதியாக முல்லைத்தீவுத் தொகுதியை யாசித்தது. வடக்கிலே முல்லைத்தீவுத் தொகுதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காகக் கிழக்கிலே திருகோணமலை மாவட்டத்திலே புதிதாக சிங்களப் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதியான 'சேருவாவில' உருவாவதற்கு எதிர்ப்புக் காட்டாது மறைமுகமாகத் துணைபோனது. இதனால் கிழக்கிலே திருகோணமலை மாவட்டத்தையும் மட்டக்களப்பு மாவட் டத்தையும் இடையில் ஊடறுத்துப் பிரிக்கும் வகையில் புதிதாக உருவான 'சேருவாவில' தொகுதி சிங்களப்பெரும்பான்மையாக உருவாக்கப்பட்டது. மட்டுமல்லாமல் 1977 தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவாகும் தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து ஒன்றாகக் குறைக்கப்பட்டது. அதற்கு முன்பு திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைத் தொகுதியி லிருந்து ஒருவரும் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியிலிருந்து ஒருவரும் என இரண்டு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகி வந்தனர். முந்திய அதாவது 1970 தேர்தலில் திருகோணமலைத் தொகுதியிலிருந்து நேமிநாதன் அவர்களும் மூதூர் இரட்டை அங்கத்த வர் தொகுதியிலிருந்து அ.தங்கத்துரை அவர்களும் தமிழரசுக் கட்சியின் சார்பில் தெரிவாகியிருந்தனர். ஆனால் 1977 தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைத் தொகுதியிலிருந்து தமிழரசுக் கட்சி சார்பில் இரா.சம்பந்தன் மட்டுமே அதாவது ஒரு தமிழர் மட்டுமே தெரிவானார். தமிழ்த் தேசியத் தளத்தைப் பலப்படுத்துவதிலும் பார்க்க தேர்தலை மையப்படுத்திய கட்சி அரசியலே தமிழரசுக் கட்சிக்கு முக்கியமாகப்பட்டது. தமிழரசுக் கட்சியின் அரசியல் தனிநபர்களின் நலன்சார்ந்ததே தவிர தமிழ்த் தேசியத்தின் நலன்சார்ந்ததல்ல என்பதற்கு மேற்கூறப்பட்ட இருநிகழ்வுகளும் அனுபவச் சான்றுகளாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை நிர்வாக அலகுகள் (தற்போது பிரதேசசெயலாளர் பிரிவுகள்), உள்ளூராட்சி அலகுகள் (தற்போது பிரதேச சபைகள்/நகரசபை/மாநகர சபைகள்) மற்றும் இவற்றின் அடிப்படையில் அமைந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய மூன்று கட்டுமானங்களும் பிரதானமானவை. இந்த மூன்று கட்டுமானங் களினூடாக மக்களைச் சமூக பொருளாதார அரசியல் ரீதியாக வலுவூட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். வடக்குக்கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை வன்னிப் பிரதேசத்திலும் கிழக்கு மாகாணத்திலும் புவியியல் ரீதியாக தமிழ்ப் பெரும்பான்மை நிருவாக அலகுகளும் உள்ளூராட்சி அலகுகளும் அவற்றின் அடிப்படையிலமைந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அதி முக்கியமானவை. ஆனால் தமிழரசுக் கட்சியென்றாலும் சரி அல்லது தமிழர்விடுதலைக் கூட்டணி என்றாலும் சரி அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றாலும் சரி கடந்தகாலங்களில் இலங்கையில் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற நிருவாகச் சீர்திருத்தங்களின் போதும் உள்ளூராட்சிச் சீர்திருத்தங்களின் போதும் அவற்றின் உச்சப் பயனை வடக்குக்கிழக்குத் தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுத்துத் தமிழ் மக்களைச் சமூக பொருளாதார அரசியல் ரீதியாக வலுப்படுத்துவதினூடாகத் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவதில் கரிசனை காட்ட வில்லை.

தமிழர்களின் தமிழ்த் தேசிய அரசியலை தமிழரசுக் கட்சிக் காலத்திலிருந்து தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காலம் வரை வெறுமனே கோசங்களும் கோரிக்கைகளும் பாராளுமன்ற உரைகளும் பத்திரிகை அறிக்கைகளும் மேடைப்பேச்சுக்களும் கட்சியின் மத்திய செயற்குழு - பொதுக்குழு - மற்றும் தேசிய மாநாட்டுத் தீர்மானங்களும் தேர்தல் காலங்களில் அச்சடிக்கப்பட்ட கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் சுமந்து வந்துள்ளனவே தவிர விஞ்ஞான பூர்வமான வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் காவிவர வில்லை. தமிழர் அரசியலிலுள்ள அடிப்படைக் கோளாறு இது. இதற்கு இன்று தேவை அறுவைச் சிகிச்சையே. அந்த அறுவைச் சிகிச்சை யாதெனில் தன்னிச்சையாக இயங்கும் தற்போதைய தமிழரசுக் கட்சி யைத் தூக்கியெறிந்து விட்டு ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் அனைத் தும் ஐக்கியமான மாற்று அரசியல் சக்தியொன்றினை அடையாளம் காண்பதேயாகும். What the tamils now want is an updated Political Leadership not an outdated one.

*05.03.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

# தமிழர் அரசியலில் மாற்றம் தேவை

1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் ஸ்தாபித்த அதன் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்களுடைய வழிகாட்டலின் கீழ் தமிழர்களுடைய உரிமைப் போராட்ட அரசியல் ஆரம்பக் கட்டத்தில் சுமார் கால்நூற்றாண்டு காலம் (1949 - 1975) பயணித்தது. இந்தக் கால் நூற்றாண்டு கால அரசியலில் தமிழரசுக் கட்சி சாதித்தது என்ன? தன்னுடைய அரசியல் செயற்பாடுகளினூடாக அக்கட்சி தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுத்த சமூக பொருளாதார நன்மைகள் எவை? அரசியலை விஞ்ஞான பூர்வமாக நோக்கும் எவரும் இந்த வினாக்களை எழுப்புதல் தவிர்க்க முடியாததே.

தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த காலத்தில் தமிழ் மக்களுக்கு தந்தைசெல்வா விடுத்த செய்தி யாதெனில் 'தமிழர்களுடைய உரிமைப் போராட்ட அரசியலின் இலக்கு எம்தலை முறையில் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடாத்தி எமக்குப் பின்வரும் சந்ததியாரின் கையிற் கொடுப்பது எமது கடன். எம்பின்னே அரும்பெரும் வீரர்களை எம் மினம் பெறக்கூடும். குறைந்தபட்சம் அவர்களுக்கு அணி வகுப்பவர் களாகவாகிலும் இருப்போமாக' என்பதாகும்.

உண்மையில் தந்தை செல்வா சாதித்தது வடக்குக்கிழக்குத் தமிழர்களைத் தமிழரசுக் கட்சியின் பின்னால் அணிவகுத்தது மட்டும் தான். இந்த அணிவகுப்பிற்காகத் தமிழர்கள் எதிர்கொண்ட சமூக பொருளாதார நலிவுகள் ஏராளம். சமஸ்டி ஆட்சியின் கீழ் வடக்குக் கிழக்கு இணைந்த மொழிவாரித் தாயகம் அல்லது மாநிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தந்தை செல்வா வழிநடாத்திய தமிழரசுக் கட்சியின் பின்னால் அணிவகுத்து நின்றார்கள். ஆனால் அடைந்த சமூக பொருளாதார நன்மைகள் எதுவுமேயில்லை. 1972 இல் நிறைவேற்றப்பட்ட குடியரசு அரசியல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பைத் தொடர்ந்து தனது அரசியல் தோல்வியை நேர்மையோடு ஒப்புக் கொண்ட தந்தை செல்வா அவர்கள் 'தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறியது மட்டுமல்லாமல் எந்தத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து வந்து தமிழரசுக் கட்சியைச் ஸ்தாபித்தாரோ அந்தத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியுடன் மீண்டும் இணைந்து அதாவது தமிழ்க் காங்கிரஸ் கட்சியையும் தமிழரசுக் கட்சியையும் இணைத்து 1976 இல் தமிழ் மக்களின் ஐக்கியப் பட்ட அரசியல் நிறுவனமாகத் 'தமிழர் விடுதலைக் கூட்டணி'யையும் உருவாக்கி விட்டு நிம்மதியின்றிக் கண்ணை மூடினார்.

தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னர் வடக்குக்கிழக்குத் தமிழர்களின் அரசியல் தலைமையை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார். 1977 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழீழத் தனிநாட்டை நிறுவுதற்கான தமிழ் மக்களின் ஆணையைக் கேட்டு நின்றது. வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பின்னே அணிவகுத்தார்கள். 1977 இலிருந்து 1983 வரை சுமார் ஆறு ஆண்டுகள் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவராகவும் பதவி வகித்த அமிர்த லிங்கம் அவர்களாலும் எதனையும் சாதிக்கமுடியவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத் தனிநாட்டுக்காகப் போராடவுமில்லை. அதே வேளை வடக்குக்கிழக்குத் தமிழர்களுக்கு எவ்விதமான சமூக பொருளாதார அனுகூலங்களும் கிடைக்கவுமில்லை. 1977 இனக் கலவரமும் 1983 இனக்கலவரமும் தமிழர்களை மேலும் பின்னடைவுக் குள்ளாக்கி அரசியல் தீர்வும் இல்லாமல் அபிவிருத்தியும் இல்லாமல் - தங்களை நம்பி வாக்களித்த வடக்குக் கிழக்குத் தமிழர்களைக் கைவிட்டு விட்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் 1983 இல் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தார்கள். ஆனால் அவர்களால் ஏற்கெனவே உணர்ச்சியூட்டப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் பல போராளி இயக்கங்களை உருவாக்கித் தனிநாடு கோரி இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளுக்கெதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 இனக்கலவரம் - இந்தியத் தலையீடு - சர்வகட்சி மாநாடு - திம்புப் பேச்சு வார்த்தை - போர் நிறுத்தம் - மீண்டும் போர் என்று தொடர்ந்த தமிழர்களின் போராட்ட அரசியல் அல்லது அரசியல் போராட்டம் இறுதியில் 1987ம் ஆண்டு யூலை மாதம் 29 ந் திகதி கொழும்பில் வைத்து இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனாவுக்குமிடையில் கைச்சாத்தான இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் Indo – Sri Lanka Peace Accord- போய்முடிந்தது. 1976 இலிருந்து 1987 வரையிலான சுமார் பத்தாண்டு கால தனிநாட்டிற்கான தமிழர் அரசியலும் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமும் இவ்வொப்பந்தத்தையேனும் அறுவடையாகத் தந்தது. சுதந்திர இலங்கையில் பௌத்த சிங்களப் பேரினவாத அரச ாங்கங்களின் அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் பலவிதமான பாராபட்சங்களுக்கும் அரச பயங்கரவாதத்திற்கும் ஆளான தமிழ் மக்களின் துன்பதுயரங்களும் அவர்கள் அடைந்த இழப்புகளும் - சரி பிழைகளுக்கு அப்பால் அதாவது தமிழர்களுடைய ஆயுதப் போராட்டத்தில் இருந்த பலவீனங்களான இயக்கமோதல்கள், சகோதரப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் வசூலிப்பு, மாற்றுக் கருத்துள்ள தனிநபர்கொலைகள், தமிழ்மக்களிடையே இருந்த ஆற்றல் மிக்க அரசியல் தலைவர்கள் - கல்விமான்கள் - ஆற்றல்மிக்க இளைஞர் கள் - கலை, இலக்கிய, ஊடக, அரசியல் செயற்பாட்டாளர்கள் பலரை ஆயுதக் கலாசாரம் காவு கொண்டமை - அப்பாவித் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் போன்ற பின்னடைவுக் காரணிகளுக்கும் அப்பால் சகல போராளி இயக்கங்களாலும் சிறீலங்கா அரசபடைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் அழுத்தங்களும் - இந்தியாவின் நேரடித்தலையீடும் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மேற்கூறப்பட்ட இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தைச் சாத்தியமாக்கிற்று.

இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் (Thirteenth amendment to the constitution) மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு அலகான மாகாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை முறைமையும், மாகாண சபைகள் சட்டத்தின் (Provincial Council Act) கீழ் 1988 இல் உருவான இலங்கையின் வடக்குகிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்குகிழக்கு மாகாண அரசும் - இவ்வாறு அமைக்கப்பட்ட மாகாணசபை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூரணமாகத் திருப்திப்படுத்தாத போதிலும், மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களில் குறைபாடுகள் உடையனவாக இருந்த போதிலும், இந்து சமுத்திரப் பிராந்திய வல்லரசான இந்தியாவின் புவிசார்நலன்கள் மற்றும் இந்திய விஸ்தரிப்புவாதம் என்றெல்லாம் அரசியல் சித்தாந்தங்களின் அடிப் படையில் சில அரசியலாளர்களால் முன்வைக்கப்பட்ட விமர்சனங் களுக்கும் விளக்கங்களுக்கும் அப்பால் - அரசியல் யதார்த்தச் சூழலில் தமிழர்களின் அதுவரை காலத்திலான சுமார் நாற்பது ஆண்டுகால (1948 - 1987) இழப்புக்களுக்கும் உரிமைப் போராட்டத்திற்கும் கிடைத்த இராஜதந்திர வெற்றியும் பலனும் ஆகும். இந்த இராஜதந்திர வெற்றியையும் அதன்விளைவான இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடிய 'மாகாணசபை முறைமை' யையும் தமிழ் மக்களின் நலன்சார்ந்து சமூகப் பொறுப்புடனும் அரசியல் நேர்மையுடனும் அரசியல் தற்றுணிவுடனும் தமிழ் மக்களால் ஜனநாயக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைமை (அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி) அரசியல் விவேகத்துடன் பயன்படுத்திக் கொண்டதா என்பதை இக்கட்டத்தில் சற்று ஆராய்வது இப்பத்தியின் தலைப்புக்குப் பொருத்தமானதே.

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் 1987 யூலை 29 இல் கைச்சாத்தானதும், அதற்கு முன்னம் 1983 யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து இந்தியா சென்று தமிழ் நாட்டில் (அப்போது எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தார்) தங்கியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் வந்த வரலாறு பற்றி ஒரு கைநூலை வெளியிட்டிருந்தார். அந்நூலில் அவ்வொப்பந்தம் உரு வாவதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வகிபாகத்தை விளக்கி யிருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியால்தான் அவ்வொப்பந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவானது என்று சாரப்படவே இந்நூல் எழுதப்பட்டிருந்தது. முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி.இந்திராகாந்தி அவர்கள் தமிழ் மக்களுக்கு அளித்த ஆதரவும் இந்நூலில் விளக்கப்பட்டிருந்தது. இந்த நூலின் உள்ளடக்கத்தை ஏற்றுக் கொண்டு பின்வரும் வினாவை இங்கு எழுப்பலாம்.

**தங்களால்தான் உருவானதாக அப்போது அவர்களால் (தமிழர் விடுதலைக் கூட்டணி) கொண்டாடப் பெற்ற இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களுடைய நலன் சார்ந்து எத்தகைய பங்களிப்பை வழங்கியது?**

தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் (L.T.T.E) ஆரம்பத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாக இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்கு இரு மனதோடு சம்மதித்திருந்தாலும் கூட பின்னர் இதனை எதிர்த்தார்கள். ஈரோஸ் இயக்கமும் இதனை இந்திய விஸ்தரிப்புவாதம் என வர்ணித்து எதிர்த்தார்கள். இவ்வொந்தம் 1987 யூலையில் கைச்சாத்தானதைத் தொடர்ந்து இவ்வொந்தத்தினை அமுல் செய்வதற்கு இலங்கை அரசுக்கு அனுசரணை வழங்கவென இலங்கை வந்த இந்திய சமாதானப்படை (Indian Peace Keeping Force- I.P.K.F) மீது 1987 ஒக்டோபரில் புலிகள் யாழ்ப்பாணத்தில் வைத்துப் போர் தொடுத்தார்கள்.

தமிழ் மக்களின் பொது எதிரியான பௌத்த சிங்களப் பேரினவாத அரசாங்கங்களுடன் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு சுதந்திர இலங்கையில் 1987 வரை அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகளுக்கூடாகவும், ஒப்பந்தங்களினூடாகவும் (பண்டா - செல்வா ஒப்பந்தம் - 1957, மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தம் - 1965) ஜனநாயக வழிமுறைகளில் நிகழ்த்தப்பெற்ற அகிம்சைப் போராட்டங்களினூடாகவும் (1956 இல் கொழும்பில் காலிமுகத்திடலில் தனிச்சிங்களச் சட்டமசோதாவை எதிர்த்து நடாத்தப் பெற்ற சத்தியாக்கிரகம், மற்றும் 1961 வடக்குக்கிழக்கு முழுவதும் தமிழரசுக்கட்சி தலைமைதாங்கி நடாத்திய நீதிமன்ற மொழிவிவகார அறப்போராட்டம்) சுமார் நாற்பது வருடங்கள் பொறுமையோடு காலத்தைக் கழித்த நாம், இந்திய - இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான ஒப்பந்தத்தின் சாதக பாதகங்களையும் இந்திய சமாதானப் படையின் வருகையின் சாதக பாதகங்களையும் பரீட்சித்துப் பார்ப்பதற் காகவேனும் உரிமைப் போராட்ட காலத்தில் குறிப்பாக ஆயுதப் போராட்ட காலத்தில் எமக்கு நேச சக்தியாக நின்று ஆதரவு அளித்த இந்தியாவுக்கு அதிகுறைந்தபட்சம் நான்கு வருடங்களாவது கால அவகாசம் வழங்கினோமா? இல்லை. அவர்கள் இலங்கையில் காலடிவைத்து நான்கு மாதங்கள் கழியுமுன்னரே எல்.ரீ.ரீ.ஈ இந்திய சமாதானப்படைமீது தாக்குதலை ஆரம்பித்தது. இச்சந்தர்ப்பத்தில் உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன செய்திருக்க வேண்டுமென்றால் புலிகளின் இந்த அரசியல் விவேகமற்ற செயலை எதிர்த்துக் கண்டித்து அதற்கெதிராக வெகுஜன எதிர்ப்பைக் கட்டி யெழுப்பியிருக்க வேண்டும். புலிகளின் அரசியல் தவறைச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். சமூகப் பொறுப்புள்ள அரசியல் தலைமை இதைத்தான் செய்திருக்க வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்குப் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்கு இந்திய சமாதானப்படை இலங்கை மண்ணில் அப்போது காலூன்றியிருந்தது. தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு 1977 தேர்தலில் மக்கள் ஆணைபெற்ற அரசியல் பலமும் பின்னணியும் இருந்தன. ஆனால் தமிழர்விடுதலைக்கூட்டணி அமைப்பு ரீதியாக எந்த எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடாது புலிகளுக்குப் பயந்து நடப்பது நடக் கட்டும் எனப் பொறுப்பற்று வாளாவிருந்தது. இதனால் தமிழர்விடுதலைக் கூட்டணி மீதிருந்த நம்பகத்தன்மையை அதனூடாக இலங்கையின் வடக்குக்கிழக்குத் தமிழர்கள் மீதான நம்பிக்கையையும் அபிமானத்தை யும் இந்திய அரசாங்கம் மட்டுமல்ல இந்திய மக்களும் இழந்தனர். தாங்கள் அடைக்கலம் கொடுத்துப் பணமும் ஆயுதமும் பயிற்சியும் அளித்துத் தங்கள் மண்ணில் போஷித்து வளர்க்கப்பட்ட போராளி இயக்கமான புலிகள் தங்கள் மீது இப்படித் திடீரென்று போர்தொடுக்கும் என இந்தியா அறவே எதிர்பார்க்கவில்லை. இந்த நிலைமை இந்தியாவைச் சங்கடத்திற்குள்ளாகியது. ஆனால் உளமார விருப்ப மில்லாமல் இந்திய அரசின் இராஜதந்திர அழுத்தம் காரணமாக வேறுவழியின்றி இரு மனதோடு இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அரசியல்குள்ளநரி என வர்ணிக்கப்படும் முன்னாள் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவையும், இவ்வொப்பந்தத்தை எதிர்த்து அடுத்த ஜனாதிபதியாக வரக் காத்திருந்த அப்போதைய இலங்கைப் பிரதமர் ஆர். பிரேமதாசாவையும், இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் முழுமையாக அமுல் செய்யப்பட்டால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்துவிடுமே என அங்கலாய்த்து இந்த ஒப்பந்தம் அமுலாகாமல் எப்படிக் குழப்பலாம் எனத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்த அமெரிக்காவையும் அமெரிக்க நலன் சார்ந்த மேற்குலக நாடுகளையும், உள்நாட்டில் இந்த ஒப்பந்தத்தை விரும்பாத அன்றிருந்த ஜே.வி.பி போன்ற சிங்கள இனவாத பிற்போக்கு சக்திகளையும் புலிகளின் இந்நடவடிக்கை மகிழ்வித்தது. இவர்கள் எல்லோரும் புலிகளுக்கு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்த அமுலாக்கலைத் தடுப்பதற்காக மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரவு வழங்கினர். உண்மையில் புலிகளின் இப்போக்கு இந்திய மக்களையும் இலங்கைத் தமிழ் மக்களையும் மகிழ்விக்கவில்லை. இந்திய சமாதானப்படையின் வருகையை வடக்குகிழக்குத் தமிழர்கள் உற்சாகமாக வரவேற்றிருந்தனர். ஆனால் தலை (தமிழர் விடுதலைக் கூட்டணி) ஆடாததால் வால் (தமிழ் மக்கள்) ஆடவில்லை.

1988 இல் நடைபெற்ற வடக்குகிழக்கு இணைந்த முதலாவது மாகாணசபைத் தேர்தலில் (இதுதான் வடக்குகிழக்கு இணைந்த மாகாண சபைக்கான கடைசித் தேர்தலும் கூட) இந்திய அரசாங்கம் கேட்டுக் கொண்ட போதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட முன்வர வில்லை. இறுதியாக அப்பொறுப்பினை ஏற்பதற்கு அப்போது பத்மநாபா தலைமையிலான போராளி இயக்கமான ஈழமக்கள் புரட்சி கர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) தன்னை அரசியல் கட்சி யாகப் பதிவு செய்து கொண்டு முன்வந்தது. முதலமைச்சர் பதவியைத் தானும் ஏற்றுக் கொள்ளும்படி தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகத்தை ஈ.பி.ஆர்.எல்.எப் கேட்டுக் கொண்ட போதிலும் அதற்கும் அவர் பின்வாங்கினார். உண்மையில் அமிர்தலிங்கம் அவர்கள் தற்றுணிவான முடிவொன்றை எடுப்பதற்கு அப்போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய முன்னணித் தலைவர்கள் (இரா.சம்பந்தன், மு.சிவசிதம்பரம், மற்றும் வீ.ஆனந்தசங்கரி உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிக்குள் அவருக்கு உறுதுணையாக இருக்கவில்லை என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் உட்கட்சி விவகாரங்களை அறிந்தவர்களுக்குத் தெரியும். அவரும் அப்போதிருந்த சூழ்நிலையில் தற்றுணிவான முடிவொன்றை மேற்கொள்ளப் பின்வாங்கினார். இம்மாகாணசபைத் தேர்தலில் மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட முன்வந்திருந்தால் தமிழர் அரசியல் சரியான தடத்தில் சென்றிருக்கக் கூடும். இத்தேர்தலில் ஈ.பி.ஆர். எல்.எப் உம் அதனோடிணைந்து ஈ.என்.டி.எல்.எப் உம் போட்டியிட்டு முதலைமைச்சர் அ. வரதராஜப்பெருமான் தலைமையில் தற்காலிகமாக இணைந்த வடக்குகிழக்கு மாகாண அரசு அமைக்கப்பெற்றது.

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின்பின் 1988 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆர்.பிரேமதாச அவர்கள் வெற்றி பெற்றார். புலிகள் இயக்கம் ஒப்பந்தத்தை முன்னரே எதிர்த்த பிரேமதாச அவர்களுடன் கூட்டை ஏற்படுத்தி வடக்குகிழக்கிணைந்த மாகாண அரசின் நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் முயற்சிகளை ஆயுத பலத்தால் முன்னெடுத்தது.

1989 ல் அமிர்தலிங்கம் கொல்லப்பட்டார். இந்திய அரசியலிலும் எம்.ஜி.ஆர் மறைவின் பின் தமிழ்நாட்டு அரசியலிலும் மாற்றம் ஏற்பட்டது. வி.பி.சிங் அவர்கள் இந்தியப் பிரதமர் ஆனார். இவர் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளும் பொறுப்பைத் தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியிடம் கையளித்தார். ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் இந்திய சமாதானப்படை இலங்கையிருந்து முற்றாக வெளியேறவேண்டும் என்று காலக்கெடுவும் விதித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் அனைத்து ஈ.பி.ஆர்.எல்.எப் மாகாண சபை உறுப்பினர்களும் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்து அந்த இடங்களுக்குப் புலி உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஈ.பி ஆர்.எல்.எப் சம்மதிப்பதாகவும் (மாகாண சபைகள் சட்டத்தில் அதற்கு இடமிருந்தது) மாகாண அரசு நிர்வாகத்தைப் புலிகள் ஏற்றுக் கொள்ளும்படியும் அப்படி யொருநிலையில் எல்லோரும் இணைந்து மேலும் அதிகாரங்களுக்குப் போராடமுடியும் என்றும் கருணாநிதி மூலம் புலிகளிடம் கோரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்தார். ஆனால் இக் கோரிக்கை புலிகளால் நிராகரிக்கப்பட்டது. மாகாண சபையைக் கலைப்பதே புலிகளின் நோக்கமாயிருந்தது. இந்தக் கட்டத்தில் மாகாண அரசுக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த இந்திய சமாதானப் படையும் இலங்கையை விட்டு வெளியேறத் தீர்மானித்தது. வேறு வழியின்றி முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் மாகாணசபையில் ஓர் அரசியல் தந்திரோபாயமாக தமிழீழப் பிரகடனத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு நாட்டைவிட்டு வெளியேறினார். பின்பு ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களினால் வடக்குகிழக்கு இணைந்த மாகாண சபை கலைக்கப்பட்டது. மாகாண சபையின் நிர்வாகம் நேரடியாக ஆளுநரின் கீழ் கொண்டு வரப்பட்டது. இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பார்வையாளராகப் புதினம் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர வடக்குக்கிழக்கு இணைந்த மாகாண அரசை நிலைநிறுத்த அல்லது கலைக்கப்பட்ட பின்னர் புதிய மாகாணசபைத் தேர்தலை நடாத்த இலங்கை அரசாங்கத்துடனோ அல்லது இந்திய அரசாங்கத்துடனோ எந்தவிதமான அரசியல் இராஜ தந்திர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாகப் புலிகளின் ஆயுத நடவடிக்கைகளை மறைமுகமாக ஆதரித்துக் கொண்டிருந்தனர். புலிகள் போராடித் தமிழீழத் தனிநாட்டை நிறுவுவர். அதில் தாங்களும் அரசியல் இலாபம் பெறலாம் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தனர் என்றுதான் இன்று எண்ணத் தோன்றுகிறது. 1990 இலிருந்து ஆளுநரால் நேரடியாக நிர்வகிக்கப்பட்டு வந்த தற்காலிகமாக இணைந்திருந்த வடகிழக்கு மாகாணசபை 2007 இல் ஜே.வி.பி கட்சியினால் வடக்கையும் கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கக் கோரி உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பின் பிரகாரம் வடக்கிலிருந்து கிழக்கு சட்ட ரீதியாகப் பிரிக்கப்பட்டது.

உண்மையில் அன்று புலிகள் இந்தியாவை அனுசரித்துப்போய் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்த அமுலாக்கலுக்கு ஆதரவு அளித்திருந்தால் அல்லது புலிகள் இந்தியாவை எதிர்த்த போது புலி களை எதிர்த்து தமிழர்விடுதலைக் கூட்டணி வெகுஜனப் போராட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இந்திய அரசுக்கும் அன்றைய வடகிழக்கு மாகாணசபைக்கும் ஆதரவளிக்கும் காத்திரமான அரசியல் நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்குமேயானால் அல்லது அன்றைய வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழர்விடுதலைக் கூட்டணி போட்டியிட்டு மாகாண அரசைக் கைப்பற்றியிருந்தால் பின்னாளில் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தச் ஷரத்துக்கமைய சர்வசன வாக்கெடுப்பு மூலம் ஒருவருட காலத்திற்குள் சட்ட ரீதியாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்படும் நிலைமையும் வேறுபல சமூக பொருளா தார அரசியல் அனுகூலங்களும் தமிழர்களுக்கு இந்தியா மூலம் கிடைத்திருக்கும். தமிழர் அரசியலும் இறுதி இலக்கை நோக்கிச் சரியான தடத்தில் சென்றிருக்கும். 1987 இலிருந்து 2009.05.19 (முள்ளிவாய்க்கால் யுத்தம்) வரையிலான பேரழிவுகளும் தவிர்க்கப் பட்டிருக்கும். இந்த இரு தசாப்த காலத்தில் வடக்குகிழக்கு மாகாணங்கள் சமூக பொருளாதார ரீதியாக வளம் பெற்றிருக்கும். வடக்குகிழக்கு இணைந்த மாநிலம் உருவாகி அரசியல் வலுவையும் அடைந்திருக்கும். இவை எல்லாவற்றையும் கெடுத்தது புலிகளின் அரசியல் விவேகமற்ற ஆயுத நடவடிக்கைகளும் அதற்குத் துணைபோன தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமூகப் பொறுப்பற்ற கட்சி அரசியலுமே ஆகும். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் பின்னர் தமிழர்களின் அரசியல் தலைமை ஏற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் மக்களுக்கு எதனையும் சாதிக்கவில்லை. வடக்குக்கிழக்குத் தமிழர்களுக்குத் தனிநாட்டுக் கனவைக் காட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணி குறைந்த பட்சம் வடக்கு கிழக்கு இணைந்த தனியான மாகாணத்தைக் கூடப் பெற்றுத்தரமுடியாமல் தனது அரசியல் கையாலாகாத்தனத்தையே வரலாற்றில் எண்பித்திருக்கிறது. அதன் பின்பு 2001 இல் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்று உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அது உருவாகிப் பதினைந்து ஆண்டுகள் கழிந்தும் உருப்படியாக எதனையும் சாதிக்கவில்லை. தமிழர்களுடைய அரசியல் வரலாற்றைப் புரட்டும் போது தமிழரசுக்கட்சியும் எதனையும் சாதிக்க வில்லை; அதன்பின்வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் எதனையும் சாதிக்கவில்லை தற்போதுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எதனையும் சாதிக்கவில்லை என்றே ஆகிறது. சுதந்திர இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களுக்கு இடம் கொடுக்காத இறுகிப்போனதொரு மரபுவழி அரசியலில் வடக்குத் தமிழர்கள் சுமார் எழுபது வருடங்களைப் போக்கியிருக்கிறோம். விளைவு, இருந்ததையும் இழந்திருக்கிறோம். வடக்குக்கிழக்குத் தமிழர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களாகக் கருதப்படுகின்ற முஸ்லீம்களும் மலையகத் தமிழர்களும் அரசியலில் மாற்றங்களை ஏற்றுக் கொண்ட காரணத்தினால் சமூகபொருளாதார ரீதியாகத் தங்களைக் கட்டமைத்துப் பேணி வளர்த்தெடுத்திருக்கிறார்கள். வடக்குக் கிழக்குத் தமிழர்களோ யுத்தக் கொடுமைகளிலிருந்து இன்னும் மீள முடியாமல் முனகிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களோ 'தமிழ்த் தேசியம்' பேசிப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் காலம் கடந்த ஞானம் என்றாலும் பரவாயில்லை, இன்று தமிழர் அரசியலில் மாற்றம் தேவை ஆகிறது.

*12.03.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## தமிழ் மக்களின் கேள்விகளுக்குக் கூட்டமைப்பிடம் பதில் உண்டா?

உத்தேச புதிய அரசியலமைப்பை வரைவதற்காகப் பாராளுமன்றத்தை அரசியலைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் பிரேரணை இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு இறுதியாக 09.03.2016 அன்று தீர்மானமாகப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

09.01.2016 அன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களினால் பாராளுமன்றத்தில் முதல் தடவையாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை யில் அடங்கியிருந்த Preamble எனப்படுகின்ற முகப்பு வாசகம் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் நீக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்டுள்ள இந்த முகப்பு வாசகத்தில் புதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்கான முக்கிய நோக்கங்களாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்குதல், தற்போதுள்ள பாராளுமன்றத் தேர்தல் முறையில் மாற்றம், இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அதிகாரப் பகிர்வு என்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இந் நோக்கங்கள் அடங்கிய முகப்பு வாசகம் இப்போது நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானத்தில் நீக்கப்பட்டுள்ளதால் தேசிய இனப் பிரச் சினைக்கான அரசியல் தீர்வு உத்தேச புதிய அரசியலமைப்பில் உள்ளடங்கப் போவதில்லையா? என்ற சந்தேகம் இப்போது தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது. வடக்குக்கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை முதலிரு நோக்கங்களான ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்குதல் மற்றும் தற்போதுள்ள பாராளுமன்றத் தேர்தல் முறையில் மாற்றம் என்பன பாரிய அக்கறைக்குரியனவல்ல. மூன்றாவது நோக்கமான இனப்பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வாக அதிகாரப் பகிர்வு விடயம்தான் மிகுந்த கவனத்திற்குரியது. ஆனால் இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு உத்தேச புதிய அரசியல் அமைப்பில் உள்ளடங்கமாட்டாது என்பதற்குக் கட்டியம் கூறுவது போல் அமைந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அவர்கள் ஆரம்பத்திலேயே உத்தேச புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பொறுப்பு பாராளுமன்றத்தையே சார்ந்ததாகும் என்று கூறிப் பந்தைப் பாராளுமன்ற மைதானத்திற்குள் அடித்து விட்டார். பாராளுமன்றமே அரசியல் நிர்ணயச் சபையாக செயற்படப்போகிறது என்பதால் உத்தேச புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முழுப்பொறுப்பும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீதே சுமத்தப்பட்டுள்ளது. அதற்கான பூர்வாங்க நடவடிக்கையாகவே பிரதமரால் நியமிக்கப்பெற்ற 'அரசியல்'யாப்புச் சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள்குழு'வும் 'நிபுணர்கள்குழு'வும் இயங்கத் தொடங்கியுள்ளன. இக்குழுக்களின் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பதுபற்றி இப்போது எதிர்வுகூற முடியாதுள்ளது.

ஆனால் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் குழு எழுத்து மூலமும், வாய்மூலமும் அரசியல் கட்சிகளிடமிருந்தும் பொது அமைப்புகளிடம் இருந்தும் தனிநபர்களிடம் இருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுள்ளது. ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கால எல்லையும் முடிவடைந்து இதுவரை பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆலோசனைகள், கருத்துக்களின் அடிப்படையில் அறிக்கையினைத் தயாரித்துப் பிரதமரிடம் கையளிக்கும் செயற்பாட்டில் இக்குழு ஈடுபட்டுள்ளது.

வடக்குக்கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை பெரும்பான்மைத் தமிழர்களால் தேர்தல்களில் ஆதரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழர்களின் அரசியல் தலைமை எனும் பொறுப்பைத் தாங்கிநிற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக்கட்சி) எவ்விதமான அரசியல் தீர்வு யோசனைப் பொதியையும் மேற்படி குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) சில ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளது. வடக்குக்கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் சில ஆலோசனைகளைத் தனிப்பட்ட ரீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி (ரி.எம்.வி.பி) யும் சில கருத்துக்களை முன் வைத்துள்ளது. இவர்களுடன் சேர்த்துச் சில பொது அமைப்புகளையும் தவிர்த்துப்பார்த்தால் தமிழ் அரசியல்கட்சி கள் எனப் பார்க்கும் போது கலாநிதி கா.விக்கினேஸ்வரன் தலைமை யிலான 'அகில இலங்கைத்தமிழர் மகாசபை' மட்டுமே ஒரு முழுமை யான அரசியல் தீர்வுப் பொதியை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சுமார் அறுபது பக்கங்களில் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணமாகச் சமர்ப்பித்துள்ளது. கடந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஒரு மாற்று அரசியல் சக்தியாகத் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிய போதிலும் அக்கட்சி தேர்தலின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்த 'தமிழர் மகாசபையின் செயற்பாடுகள் தேர்தலை மட்டுமே மையப் படுத்தியதல்ல என்பதால் தமிழ்மக்களிடையே மக்கள் நலனை மட்டுமே சார்ந்து செயற்படும் மாற்று அரசியல் சக்தியொன்றினைக் கட்டி யெழுப்பும் தங்கள் பயணம் இடைநிறுத்தப்படப் போவதில்லை' என்ற இக்கூற்றிற்கமைய சமூகப் பொறுப்புடன் நடந்து கொண்டுள்ளது. இது மட்டுமல்லாமல் உள்ளூராட்சி வட்டாரங்களின் எல்லைகள் நிர்ணய விடயத்திலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அசமந்தமாக இருக்க 'அகில இலங்கைத் தமிழர் மகாசபை'யே அதற்கென நியமிக்கப்பட்ட குழுவிடம் காத்திரமான பிரேரணைகளை முன்வைத்தது. அரசியல் தீர்வு யோசனைகளைப் பொறுத்த வரை அரசியல் யாப்புச் சீர்திருத்தத் திற்கான மக்கள் பிரதி குழுவின் யாழ்ப்பாண, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அமர்வுகளின் போது பிரசன்ன மாகித் தமிழர் மகாசபை வாய்மூல விளக்கங்களையும் கொடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அதாவது தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை எவ்விதமான அரசியல் தீர்வுத் திட்ட யோசனை வரைபையும் முன்வைக்காது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் பத்திரிகைகளிலும் மேடைகளிலும் 2016க்குள் சமஸ்டித்தீர்வு எனும் நம்பிக்கையை வாய்ப்பாடுபோல ஒப்புவித்துக்கொண்டு திரிகிறார். ஆனால் அதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமான அரசியல் நகர்வுகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. வடக்குக்கிழக்குத் தமிழர்கள் ஒரு முக்கியமான சந்தியில் நிற்கும் இக்காலகட்டத்தில்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்அரசியல் கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமோ அல்லது குறைந்தபட்சம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக்கூட்டமாவது ஒழுங்காகக்கூடித் தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடி விவாதித்துத் தீர்மானங்களை மேற்கொண்டு அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைமை இல்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் (தமிழரசுக்கட்சியின்) பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்டுக்கோப்பான தலைமை இல்லாததால் 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்'எனும் பாரதியின் கவிதைவரிகளுக்கேற்ப ஆளுக்கொரு அறிக்கை விட்டுக்கொண்டும் கதையளந்து கொண்டும் தங்கள் இருப்பை மட்டும் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில் வடக்குக்கிழக்குத் தமிழர்கள் தகுந்த மேய்ப்பன் இன்றிக் கைவிடப்பட்டுள்ளனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் போகுமிடம் எல்லாம் சமஸ்டிக்கட்டமைக்குள்தான் அரசியல் தீர்வு என்று அடித்துப்பேசிக் கொண்டு திரிய பிரதமரும் அவரது அமைச்சர்கள் சிலரும் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் அதி உச்ச அதிகாரங்கள் என்று கூறி வருகிறார்கள். சமஸ்டியா? ஒற்றையாட்சியா? என்பது ஒரு புறமிருக்க உத்தேச புதிய அரசியலமைப்பு எப்போது நிறைவேற்றப்படும் என்பது பற்றியும் அப்படி நிறைவேற்றப்படும் புதிய அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வு அலகு எப்படி அமையும், அவ் அதிகாரப் பகிர்வு அலகுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்கள் என்பன குறித்தும் வடக்குக்கிழக்குத் தமிழர்கள் இருட்டில் விடப்பட்டுள்ளனர். இன்று அடிக்கடி சமஸ்டித் தீர்வு பற்றித் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் இரா.சம்பந்தன் அவர்கள் அன்று முன்னாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்கா விஜய குமாரதுங்க முன்வைத்த 'இலங்கை பிராந்தியங்களின் ஒன்றியம்' எனப்பட்ட சமஸ்டி அரசியல் தீர்வுப்பொதியை ஏன் ஆதரிக்காமல் விட்டார் என்கிற ஆதங்கமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியும் இன்றைய சூழலில் எழுகிறது. தமிழர் அரசியல் தலைமைகளின் தளம்பலும் தடுமாற்றமுமே இதற்குக் காரணங்களாகும்.

மேலும், இன்றைய தமிழ் அரசியல் தலைமையின் இயலாமையை நோக்கும் போது சமஸ்டி அரசியல் தீர்வு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞானத்துடன் மட்டும் 'ஏட்டுச்சுரைக்காய்' ஆக இருந்துவிடுமா? 2016க்குள் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்று இரா.சம்பந்தன் ஊட்டுகிற நம்பிக்கை 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் போதும் அதற்குப் பின்னரும் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் 'அடுத்த பொங்கல் தமிழீழத்தில் தான் பொங்கும்' என மேடைகளில் முழங்கியது போல் ஆகி விடுமா?

உத்தேச புதிய அரசியலமைப்பில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உள்ளடங்காமல் விட்டால் தமிழ்த்தேசிய இனத்தின் அடுத்தகட்ட நகர்வு என்ன? மாற்றுவழி யாது? இவைகள் இன்று தமிழ் மக்களின் மனதைக் குடைகின்ற கேள்விகள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இக்கேள்விகளுக்கான பதில்கள் இல்லை என்றே தெரிகிறது. அரசியல் தீர்வு முயற்சிகள் ஒருபுறமிருக்க, வடக்குக்கிழக்குத் தமிழர்களின் சமூக பொருளாதார இருப்பைக் கேள்விக்குறியாக்கும் ஏனைய பிரச்சனைகளுக்கான தீர்வுகள் குறித்த சிந்தனைகளும் செயற்பாடுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உண்டா? என்ற கேள்விக்கும் விடை இல்லை என்றே ஆகிறது.

உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்நோக்கும் வட்டமடு மேய்ச்சல் தரைப்பிரச்சினை மற்றும் கல்முனைத் தமிழர்கள் எதிர்நோக்கும் கல்முனை வடக்குத் தமிழ்ப்பிரதேச செயலகப் பிரிவு தரமுயர்த்தல் மற்றும் கல்முனைத் தமிழர்களுக்கான தனியான உள்ளூராட்சி அலகு (பிரதேச சபை) போன்ற விடயங்களையிட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமே சாதிக்கிறது. இம்முக்கியமான விடயங்கள் இப்போது கிணற்றுக்குள் போடப்பட்ட கல்லாகக் கிடக்கின்றன.

அதே வேளை முஸ்லிம்களின் கல்முனைக் கரையோர மாவட்டக் கோரிக்கை மற்றும் சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுக்கோரிக்கை சம்பந்தமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சி உள்ளிட்ட சகல முஸ்லிம் அரசியல்வாதிகளும் தொடர்ந்தேர்ச்சியாகச் செயற்பட்டுக்கொண்ட இருக்கின்றனர். எதிர்வரும் 19ம் திகதி அம்பாறை மாவட்டம் ஒலுவில் பாலமுனையில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு வருகை தரவுள்ள பிரதமரிடம் இதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கான முஸ்தீபுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதனைத் தவறென்று கொள் வதற்கில்லை. உரிய சந்தர்ப்பத்தில் உரிய அணுகுமுறைகளைக் கையாண்டு முஸ்லிம்கள் தங்கள் சமூக மேம்பாட்டுக்கான கோரிக்கை களை வென்றெடுக்கிறார்கள். ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிடம் இவ்வாறான தயார்படுத்தல்கள் கிடையாது. தமிழரசுக்கட்சிக்குள்ள வாக்கு வங்கியைப் பயன்படுத்தி பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் கந்தனையோ, கணபதியையோ அல்லது சொக்கனையோ மொக்கனையோ உறுப்பினர்களாக அனுப்பி வைக்கும் ஒரு வேலை வாய்ப்பு முகவர் போன்றே இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிவிட்டது.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இயலாமையை ஈடு செய்யும் வகையில் அடுத்த தேர்தல்வரை காத்திராமல் தமிழ் மக்கள் மத்தியில், தேர்தலை மையப்படுத்தாது மக்களை மையப்படுத்தி அரசியலை முன்னெடுக்கக்கூடியதும், தெளிவான அரசியல் கோட் பாடுடன் அரசியலில் உகந்த அணுகுமுறையைக் கையாளக்கூடியதும், மக்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தக்கூடியதும், கண்ணியம் மிக்கதும், மக்களுக்கு விசுவாசமாகவும், நேர்மையாகவும், வெளிப் படையாகவும், செயற்படக்கூடியதும், அரசியல் அனுபவம் ஆளுமை ஆற்றல் மிக்கதும், மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு முரண் பாட்டு அரசியலைச் செய்ய விரும்பாததும், தமிழ் மக்களிடையே யுள்ள கல்விமான்களையும் துறைசார், தொழில்சார் நிபுணர்களையும் சமூகப்பற்றுடைய தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்களையும் கலை இலக்கிய சமூக மற்றும் ஊடக செயற்பாட்டாளர்களையும் அரசியலாளர் களையும் விவசாயிகளையும் மீனவர்களையும் ஏனைய தொழிலாளர் களையும் உள்வாங்கியதும், சமூக பொருளாதார ரீதியாகத் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைக் கை தூக்கி விடக்கூடியதும் ஒரே குரலில் பேசக்கூடியதும் தந்தை செல்வா காட்டிய வழியில் கட்டுப்பாட்டுடனும் ஐக்கியத்துடனும் செயற்படக்கூடியதுமான வினைத்திறன் மிக்க மாற்று அரசியல் சக்தியொன்றினைக் கட்டியெழுப்பும் வகையில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் எங்கினும் வெகுஜன அமைப்புகள் மேற்கிளம்ப வேண்டும் என்பதே தமிழ் மக்களின் இன்றைய அவசரத்தேவையாகும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பையோ அல்லது தமிழரசுக்கட்சியையோ தமிழ் மக்கள் இனி நம்பிப்பயனில்லை.

*19.03.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்துச் செய்ய வேண்டியது என்ன?

19.03.2016 அன்று சனிக்கிழமை அம்பாறை மாவட்டம், பாலமுனையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் அவர்கள் மாநாட்டு மேடையில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன மற்றும் பிரதமர் ரணில்விக்கிரம சிங்க ஆகியோரின் முன்னிலையில், 13வது அரசியல் திருத்தச் சட்டத் தினை அமுல் நடத்த கடந்த அரசாங்கங்கள் முயற்சிக்காமையே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு இதுவரை எட்டப்படாமைக்குக் காரணம் எனக்கூறியுள்ளார்.

13வது அரசியல் திருத்தச்சட்டம் இன்னும் முழுமையாக அமுல் செய்யப்படவில்லையென்பது உண்மையே. அதற்கு அரசாங்கங்களை மட்டும் குற்றம் சுமத்திப் பயனில்லை. தமிழர் தரப்பிலும் தவறுகள் இருக்கின்றன.

1987 யூலை 29ம் திகதி கொழும்பில் வைத்து இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் கைச்சாத்திட்ட இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தச் ஷரத்துக்கமையவே இப் 13வது அரசியல் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இத்திருத்தச் சட்டத்தின் கீழ் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்குக்கிழக்கு இணைந்த மாகாணசபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றபோது இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் தங்கள் முயற்சியால்தான் கொண்டுவரப்பட்டது என்று அப்போது பெருமைப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி இம்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் பின்வாங்கியது. அப்போது தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக்கூட்டணித் தலைவர்களுள் ஒருவராக இரா.சம்பந்தன் அவர்களும் முன்னணியில் இருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்த அமுலாக்கலை எதிர்த்த காரணத்தால் புலிகளுக்குப் பயந்தே தமிழர் விடுதலைக்கூட்டணி அப்போது இத் தேர்தலில் போட்டியிடும் தன் சமூகப்பொறுப்பினைத் - தனது அரசியல் கடப்பாட்டினைத் தட்டிக்கழித்தது. எனினும் இத்தேர்தலில் போட்டியிட பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர். எல்.எப் முன்வந்தபோது இத் தேர்தலைத் தமிழ் மக்கள் வாக்களிக்காது பகிஷ்கரிக்கும் படி தமிழ் மக்களுக்குப் புலிகள் அச்சுறுத்தல் விடுத்தார்கள். இத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிட முன்வராததும் புலிகள் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்த அமுலாக்கலைச் சீர்குலைத்ததும் தமிழர் தரப்பிலான மாபெரும் அரசியல் தவறுகள் என்பதை அதன்பின் நடந்த நிகழ்வுகள் இன்று எண்பித்திக்கின்றன. இத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிட முன்வராவிட்டாலும் கூட தனிப்பட்ட முறையில் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் அவர்கள் புலிகளின் தேர்தல் பகிஸ்கரிப்புக் கோரிக்கைக்கு மத்தியிலும் 'துப்பாக்கியால் பூட்டப்பட்ட ஜனநாயகத்தின் கதவுகள் துப்பாக்கியாலே தான் திறக்கப்படவும் வேண்டும்' என அறிக்கையிட்டுத் தமிழ் மக்களை இத்தேர்தலில் கட்டாயம் பங்குபற்றி வாக்களிக்கும்படி ஊடகங்கள் மூலம் வேண்டினார். இதற்காக அமிர்தலிங்கம் அவர்களின் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். 1989இல் அமிர்தலிங்கம் கொல்லப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமே. இவை எல்லாவற்றையுமே இரா.சம்பந்தன் அவர்கள் அறிவார்கள். 1988இல் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்று வடகிழக்கு மாகாண அரசு நிறுவப்பெற்று முதலமைச்சராக ஈ.பி.ஆர்,எல்.எப் ஐச் சேர்ந்த அ.வரதராஜப்பெருமாள் பதவியேற்றார். ஆளுநராக முன்னாள் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான நளின் செனவிரட்ண ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனவினால் நியமிக்கப்பெற்றார். பின்பு 1989ன் இறுதிப்பகுதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்பு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை எதிர்த்த பிரதமர் ஆர்.பிரேமதாச அவர்களுடன் கூட்டுச்சேர்ந்த புலிகள் மாகாண அரச நிர்வாகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுத நடவடிக்கைகளால் குழப்பத்தொடங்கினார்கள். இதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களின் மறைமுகமான ஆதரவும் இருந்தது. அப்போதெல்லாம் இந்த மாகாணசபை அரசை நிலைநிறுத்த தமிழர் விடுதலைக்கூட்டணியினர் எந்த முயற்சியும் மேற்கொள்ளாது பேசாமல் இருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. அது என்னவென்றால், இன்று தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபைக்குக் கூடுதலான அதிகாரங்கள் கேட்பது போல் (காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள்) அன்று இணைந்த வடக்குகிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை தமிழரசுக்கட்சி தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி கேட்கவில்லை. அப்போதும் ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவ உயர் அதிகாரியான நளின்செனவிரெட்ண நியமிக்கப் பட்டிருந்தார். இப்போதைய வடமாகாணசபைக்குக் கேட்டது போல் சிவில் அதிகாரியொருவரை ஆளுநராக நியமிக்கும் படி தமிழர் விடுதலைக்கூட்டணி கேட்கவும் இல்லை. காரணம் அம்மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வசம் இல்லாததே. தமிழர் விடுதலைக்கூட்டணியைப் பொறுத்தவரை தங்கள் கட்சியைச் சேராத அதிலும் தமிழரசுக்கட்சியைச் சேராத வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக இருந்தால் அல்லது தாங்கள் அல்லாத அதாவது தமிழரசுக்கட்சி அல்லாத வேறொரு தமிழ்க் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப் ஆட்சி அதிகாரத்திலிருந்தால் அம் மாகாணசபைக்கு அதிகாரங்கள் தேவையில்லை. ஆளுநர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியாக இருப்பதிலும் பிரச்சினை இல்லை. இங்கு தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நலன்களைவிடத் தமிழரசுக்கட்சியின் தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு தங்கள் கட்சி அரசியல் நலனே முன்னுரிமை பெற்றது. அன்றிருந்த முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தலைமையிலான வடக்குகிழக்கு இணைந்த மாகாணசபைக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டாம் என ஜனாதிபதி பிரேமதாசாவைப் புலிகள் கேட்டுக்கொண்டதாகவும் ஒரு தகவல் உண்டு. இம்மாகாண சபை 1990ல் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவினால் கலைக்கப்பட்டு ஆளுநரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் கட்சியின் வசம் இல்லாத இம்மாகாணசபை கலைக்கப்பட்டமை தமிழர் விடுதலைக்கூட்டணியை உள்ளூர மகிழ்வித்தது என்றே கூறலாம்.

பின் 1994ல் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா விஜய குமாரதுங்க ஜனாதிபதியானார். இதற்கு முன்பு இவரது அரசியல் பிரவேசம் மேல்மாகாணசபை முதலமைச்சராகவே நிகழ்ந்தது. இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் செய்வதிலும் 13வது அரசியல் சட்டத்திருத்தம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக வழங்கி மாகாண அரசை வலுப்படுத்துவதிலும் திருமதி. சந்திரிக்கா ஆர்வம் கொண்டிருந்தார். சந்திரிக்கா அவர்களுடன் சம்பந்தன் நெருக்கமானவராகவும் இருந்தார். குண்டு துளைக்காத வாகனமும் பத்திற்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைக்கொண்ட பாதுகாப்பு அணியும் சம்பந்தரின் பாதுகாப்புக்கெனச் சந்திரிக்கா அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது. இக்காலத்திலாவது இணைந்த வடகிழக்கு மாகாணசபையின் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிக்காவிடம் கோரிக்கை எதுவும் தமிழர் விடுதலைக்கூட்டணியால் முன்வைக்கப்படவில்லை. 1990ல் இருந்து ஆளுநரின் நேரடி நிர்வாகத்தின் கீழிருந்த இணைந்த வடகிழக்கு மாகாணசபைக்கு ஓர் இடைக்கால நிருவாக சபையினை அரசியல் ரீதியாக ஏற்படுத்துவதற்குச் சந்திரிக்கா தாமாகவே முன்வந்த போதும் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவு வழங்கவில்லை. காரணம் அப்போது பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியை விட (05) டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி அதிக எண்ணிக்கையிலான (09) பாராளு மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த காரணத்தால் இடைக்கால நிருவாக சபையில் ஈ.பி.டி.பி பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருப்பார்கள் என்பதும் மேற்குறிப்பிட்ட இடைக்கால நிருவாக சபைக்குத் தலைவராக தமிழர்விடுதலைக்கூட்டணியில் இல்லாத கலாநிதி கா. விக்கினேஸ்வரனை நியமிக்க சந்திரிக்கா விரும்பியிருந்தார் என்பதுமாகும். தாங்கள் அதாவது தங்கள் கட்சி அதிகாரத்தில் அல்லாத எதுவும் தமிழர்களுக்குக் கிடைக்கக்கூடாது: கிடைக்கவிடக்கூடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிற மிகக்குறுகிய மனப்பாங்கே தமிழர்விடுதலைக்கூட்டணியிடம் அதாவது தமிழரசுக்கட்சியிடம் குடிகொண்டிருந்தது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் வென்று சந்திரிக்கா அவர்கள் 2004 வரை ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001ல் உருவாகி 2004 பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இருபத்திரெண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள். 2005 இல் தான் மகிந்தராஜபக்ச ஜனாதிபதியானார். 2001இல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உருவாகி 2005 வரையிலான இடைப்பட்ட காலத்திலாவது அதாவது மகிந்தராஜபக்ச ஜனாதிபதியாக வருவதற்கு முன்பிருந்த ஜனாதிபதி சந்திரிக்காவின் பதவிக் காலம் முடிவதற்கிடையிலாவது 1990இல் பிரேமதாச அவர்களினால் கலைக்கப்பட்ட இணைந்த வடகிழக்கு மாகாணசபைக்கான தேர்தலை நடாத்தும்படியோ- 13 வது அரசியல் சட்டத்திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்தும்படியோ கோரிக்கை எதனையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கவும் இல்லை. 2006 இல் அப்போதைய ஜே.வி.பி உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 2007 இல் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. இதனை எதிர்த்துக் காத்திரமான சட்ட நடவடிக்கைகளைக்கூடத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை.

**இந்தப் பின்புலத்திலும் இந்தக் கட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களிடம் ஒரு விநயமான வேண்டுகோள்.**

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பெற்ற 1989 யூலை 29 இலிருந்து இன்றுவரை தமிழர்தரப்பில் பல அரசியல் தவறு களை இழைத்துவிட்டு அவற்றைச் சுயவிமர்சனத்துக்கு உட்படுத்தாமல் 13வது அரசியல் திருத்தச் சட்டத்தினை அமுல் நடத்தக் கடந்தகால அரசாங்கள் முயற்சிக்காமையே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு இதுவரை எட்டப்படாமைக்குக் காரணம் என நீங்கள் கூறியுள்ள கூற்றில் பாதி உண்மையிருந்தாலும் கூட உங்கள் கூற்று ஒரு தலைப்பட்சமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் காலம் கடந்துவிடவில்லை. 'நல்லாட்சி' நிலவுகின்ற இன்றைய அரசியல் சூழலில் உத்தேச புதிய அரசியலமைப்பு வரை காத்திராமல் நாளைவரும் என நீங்கள் நம்பிக்கையூட்டும் வடக் குக்கிழக்கு இணைந்த சமஸ்டித் தீர்வு எனும் 'பலாக்காய்' இலும் பார்க்க இன்று கையிலுள்ள 13வது அரசியல் சட்டத் திருத்தம் எனும் 'கிளாக்காய்' நன்று என்பதால் இனியும் தாமதியாது 13 வது அரசியல்ச ட்டத் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யக் கோரியும் வடக்குக் கிழக்கை இணைக்கக் கோரியும் (வடக்கு கிழக்கு இணைப்பு என்பது 13 வது அரசியல் சட்டத்திருத்த அமுலாக்கலில் உள்ளடங்கியதோர் அம்சமாகும். இன்றைய நல்லாட்சி அரசாங்கம் நினைத்தால் வடக்கு கிழக்கை முன்பு இருந்தது போல் அதாவது 1987 இலிருந்து 2007 வரை சுமார் இருபது ஆண்டுகள் நிர்வகிக்கப்பட்டது போல் குறைந்த பட்சம் தற்காலிகமாகவேனும் இணைப்பதற்குப் பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் சாத்தியம் உண்டு.) இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் அழுத்தங்களைக் கொடுக்கும் வகையில் வெகுஜன நடவடிக்கைகளை எடுப்பதற்கு நீங்கள் தற்துணிய வேண்டும். இதற்கு முதலில் தேவையானது சகல தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்த ஐக்கியப்பட்ட அரசியல் பொறிமுறையாகும். அத்தகைய அரசியல் பொறிமுறையை உருவாக்கும் பொறுப்பும் பொருத்தப்பாடும் தகுதியும் தங்களுக்கே உண்டு. எனவே இதனையிட்டு மந்திராலோச னை செய்ய உடனடியாகச் சகல தமிழ்க் கட்சிகளையும் தங்கள் தலைமையில் ஓரிடத்தில் ஒன்று கூட்டுங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்துச் செய்ய வேண்டியது என்ன? என்ற கேள்விக்கு இதுவே விடையாகும்.

*02.04.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# தமிழ்த் தேசிய அரசியலின் தேக்க நிலை களையப்பட வேண்டும்!

கடந்த 2015ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வடக்குக்கிழக்குத் தமிழர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு (தமிழரசுக்கட்சிக்கு) வாக்குகளை அள்ளி வழங்கியமைக்கு இரண்டு பிரதான காரணங்கள் அமைந்திருந்தன.

புதிய அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே விளங்கப்போகின்றது என்று எதிர்வு கூறித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரம் பேசும் வலுவை (பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை) அதிகரிக்கும்படி தமிழ்மக்களைத் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டது.

தேர்தலின் பின் அமையப்போவதாக எதிர்பார்க்கப்படும் ரணில் விக்கிரமசிங்காவைப் பிரதமராகக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையிலான தேசிய அரசாங்கத்தில் இணைந்து சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தின் மூலம் இனப் பிரச்சனைக்கான நிரந்தர அரசியல் தீர்வாக சமஸ்டி அடிப்படையிலமைந்த அதிகாரப்பகிர்வுடனான சுயாட்சியை இணைந்த வடக்குக்கிழக்கில் 2016இல் ஏற்படுத்துவோம் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுதியளித்தது.

இந்த இரு விடயங்களுக்காகவே இவர்களை மீண்டுமொருமுறை நம்பி இத்தேர்தல் மூலம் இறுதிச் சந்தர்ப்பமொன்றினை வழங்கு முகமாகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குப் பெருவாரியான தமிழ்மக்கள் வாக்களித்தனர்.

மேற்படி இரு பிரதானமான காரணங்களைத்தவிர சர்வதேச போர்க்குற்ற விசாரணை - காணாமல் போனவர்கள் விவகாரம் - மீள் குடியேற்றப் பிரச்சனை மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்களும் தமிழ்மக்கள் வாக்களிக்கக் காரணிகளாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைபோல ஆகிவிட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே அது பற்றி இப்போது பேசுவதில்லை. காணாமல் போனவர்கள் விவகாரம் சம்மந்தமாகவும் பரணகம ஆணைக்குழு அமர்வுகளைத் தவிர அதற்குமேலால் எதுவும் உருப்படியாக நடைபெற வில்லை. மீள் குடியேற்றப் பிரச்சனையைப் பொறுத்த வரை வடக்கில் ஆமை வேகத்தில் என்றாலும் சில காணிகள் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றன. அது போல் கிழக்கில் சம்பூரில் ஒரு குறிப்பிட்டளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. தமிழ்க்கைதிகளைப் பொறுத்தவரை சிலர் பிணையில் வெளியிலே வந்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து சில காணிகள் விடுவிக்கப்பட்டமைக்கும் சில தமிழ்க்கைதிகள் பிணையில் வெளியிலே வந்தமைக்கும் உண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் காரணமல்ல. பாதிக்கப்பட்ட மக்கள் தாமாகவே முன் வந்து நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணிகளும் உண்ணாவிரதப் போராட்டங்களுமே காரணம். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புப் பாராளு மன்ற உறுப்பினர்கள் இப்பேரணிகளிலும் போராட்டங்களிலும் தலையைக் காட்டியதைத்தவிர வேறொன்றும் பெரிதாகச் செய்யவில்லை. நல்லாட்சி அரசாங்கத்திற்கும் தங்கள் நல்ல பெயரைத் தக்க வைப்பதற்குச் சில நல்ல விடயங்களையாவது செய்து காட்ட வேண்டிய தேவையும் இருந்தது. இத்தேவை ஊக்கியாக அமைந்தது. ஆனால் தமிழ்தேசியக் கூட்டமைப்போ தெருத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் வேலையாகத் தங்களால்தான் இவைகள் நடைபெற்றன போல் பம்மாத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.

உரிமைகளுக்குப் போராடும் ஒரு சமூகம் முதலில் வலுவூட்டப்பட வேண்டும். போர் முனைக்குச் செல்லுகின்ற இராணுவ வீரன் கூடத் தான் போராடி மடியப்போகிற நிலை வந்தாலும் வரும் என எண்ணி அவன் துப்பாக்கியை மட்டுமே தூக்கிச்செல்வதில்லை. தனக்குத் தேவையான உணவு - நீர் மற்றும் அவசியமான அனைத்துப் பொருட் களையுமே தனது உடலில் காவிக்கொண்டு செல்கின்றான். போராடச் செல்கின்ற அவன் தன்னை வலுப்படுத்திக்கொள்ளல் அவசியமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தமிழ்த்தேசிய அரசியலிலோ தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ்ச்சமூகத்தைச் சமூக பொருளாதார ரீதியாக வலுவூட்டும் சிந்தனை களற்றே செயற்படுகின்றனர். மக்களைப் பார்த்து நாங்கள் சலுகை அரசியல் நடாத்தவில்லை உரிமை அரசியல் நடாத்துகிறோம் என்று ஏமாற்றுப் பிரச்சாரம் செய்து கொண்டு அரசாங்கத்திடமிருந்து அத்தனை சலுகைகளையும் தாங்கள் மட்டும் பெற்றுக் கொள்கின்றனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித்தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டதாலோ தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வடக்குக்கிழக்கில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் பதவிகளைப் பெற்றுக்கொண்டதாலோ - கிழக்கு மாகாண சபையில் இரு அமைச்சுக்களைப் பெற்றுக் கொண்ட தாலோ - வடக்கு மாகாண சபையின் ஆட்சியைப் பிடித்துக் கொண்ட தாலோ இதுவரை குறிப்பிடும் படியாக எந்தச் சமூக பொருளாதார அனுகூலங்களும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை. வெறும் அறிக்கைகள் மட்டுமே வந்துகொண்டிருக்கின்றன. காரணம் தமிழ் மக்களைச் சமூக பொருளாதார ரீதியாக வலுவூட்டுகின்ற எந்தத் திட்டமோ - அவ்வாறான திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்துகின்ற வினைத்திறனோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை. வெறுமனே வாயைச் சப்பிக்கொண்டு மக்களை ஏமாற்றும் பூர்ஸூவா அரசியலைத் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்து கொண்டிருக்கிறது. தங்கள் என்ன ஏமாற்று அரசியலைச் செய்தாலும் தமிழ் மக்கள் தேர்தல்களில் தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிப்பார்கள்; எனவே சதா காலமும் மக்களைத் தாங்கள் ஏமாற்றிக்கொண்டிருக்கலாம் என்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் குறிப்பாகத் தமிழரசுக்கட்சியின் தலைமைப் பீடத்தின் எண்ணப்பாங்கே இதற்குக் காரணம். தமிழரசுக் கட்சித் தலைமைப் பீடத்திடம் இன்று எவ்விதமான அறிவார்ந்த அரசியல் செயற்பாடுகளும் இல்லை. அறிவார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய ஆளுமைகளும் அங்கு இல்லை. தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஐக்கியத்தைக் குலைக்கின்ற எதிர்மறையான மனப் போக்கினால் வினைத்திறன் மிக்க அரசியல் ஆளுமைகள் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளில் சிதறிக்கிடக்கிறார்கள். தமிழரசுக்கட்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகள் மலிந்துள்ளனர் என்பதால் சட்டம் படித்ததால் சகலதும் தெரிந்துவிடும் என்பதற்கில்லை. தமிழரசுக்கட்சியில் இன்றுள்ள முன்னனித்தலைவர்களில் அரசியல் அனுபவமும் ஆளுமையும் கொண்ட ஒரேயொருவராகத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மட்டுமே விளங்குகிறார். ஆனால் மூப்பின் காரணமாக அவர் உடல்நிலை தளர்ந்துவிட்ட காரணத்தாலும் அவரைச்சுற்றி யுள்ளவர்கள் சுயநலமிகளாக உள்ளதாலும் தமிழ்த்தேசிய அரசியலில் ஒரு தேக்க நிலை வந்து விட்டது. குறைந்த பட்சம் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக்குழு கூட கிரமமாகக்கூடித் தமிழர் விவகாரங்களையிட்டுக் கலந்துரையாடி விவாதித்துத் தீர்மானங்களை எடுத்துச் செயற்படுவ தாகவும் இல்லை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் - தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும் - தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் செயலாளர்நாயகமும் - மூத்த தமிழ் அரசியல்வாதியுமான இரா. சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவிதான் தனது இறுதி இலக்கு; அது கிடைத்துவிட்டது; இனி ஒன்றும் செய்யத்தேவையில்லை என்பது போல் அடங்கிவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது. தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தனித்தனி யாகத் தத்தம் சொந்த அரசியல் எதிர்காலம் குறித்த நிகழ்ச்சி நிரலுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். கூட்டு முயற்சி அல்லது கூட்டுச் செயற்பாடு என்பது தமிழ்த்தேசிய அரசியலில் இன்று அற்றுப்போய் விட்டது. பாராளுமன்றத்தேர்தல்களிலும் மாகாணசபைத் தேர்தல்களிலும் மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களிலும் போட்டியிடுவதற்காகத் தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்ன வேட்பாளர் நியமனங்களை மட்டுமே எதிர்பார்த்துக் கட்சியில் இணைந்தவர்களால் தமிழரசுக்கட்சி இன்று நிரம்பி வழிகிறது. தமிழ்த்தேசிய அரசியலைச் சரியான தடத்திலே கொண்டுசெல்லும் வகையிலே தமிழ் அரசியலை விஞ்ஞான பூர்வமாகக் கையாளும் வகையிலே தமிழ்மக்களை வழிநடாத்தக்கூடிய ஐக்கியப் பட்ட தமிழ் அரசியல் தலைமை இன்று தமிழ் மக்களுக்கு இல்லை. இவ்வாறான தமிழ் அரசியல் சக்தியை முன்னின்று நிறுவ வேண்டிய சமூகப்பொறுப்பினைத் தாங்கி நிற்கும் தமிழரசுக்கட்சியோ அல்லது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அரசியல் கடமையினை அலட்சியம் செய்கின்றதோர் ஆபத்தான நிலையில் தமிழ்த்தேசிய அரசியல் இன்று சாக்கடை நீர் போலத் தேக்க மடைந்துவிட்டது. 2016ற்குள் சமஸ்டி அரசியல் தீர்வு என்று இரா. சம்பந்தன் அவர்களும் அவரது சீடர்களும் வாய்ப்பாடு போல உச்சரிப் பதைத்தவிர அதற்கு அவசியமான எந்த அரசியல் நகர்வுகளும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் தமிழ் மக்களால் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைமையான தமிழ்த்தேசியக் கூட்டமைப் பினாலோ அதன் தலைமைக்கட்சியான தமிழரசுக்கட்சியினாலோ முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. தமிழ்த்தேசிய அரசியல் ஸ்தம்பித்து நிற்கிறது. அரசியல் தீர்வு முயற்சிகள் ஒரு புறமிருக்க யுத்தக் கொடுமைகளால் பாதிப்புக்குள்ளான வடக்குக் கிழக்குத் தமிழ்ச் சமூகத்தை வலுவூட்டும் செயற்பாடுகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப் படுவதாயில்லை. ஒப்பீட்டளவில் இலங்கை யின் ஏனைய சிறுபான்மை இனக்குழுமங்களான முஸ்லிம்கள் மற்றும் மலையகத்தமிழர்களின் அரசியல் தலைமைகளின் செயற்பாடுகளுடன் ஒப்பிடும் போது வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் தலைமையின் செயற்பாடுகள் பூச்சியமே.

இந்த நிலையில் மக்கள் நலன் சாராத கட்சி அரசியல் சாக்கடைக்குள் மூழ்கிப்போய் தன்னிச்சையாகச் செயற்பட்டிருக்கும் தமிழரசுக் கட்சியைத் தனியே ஒருபுறம் ஒதுக்கிவிட்டு தமிழரசுக்கட்சி உட்பட அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளிலும் சிதறிக் கிடக்கும் மாற்றுச் சிந்தனையாளர்கள் அனைவரும் கட்சி அரசியலுக்கு அப்பால் இனியும் காலம் தாழ்த்தாது ஓரிடத்தில் ஒன்றுகூடி தமிழ் மக்களுக்கோர் ஐக்கியப் பட்ட அரசியல் பொறிமுறையை ஏற்படுத்த முன்வரவேண்டும். தமிழ்த் தேசிய அரசியலில் இன்று ஏற்பட்டுள்ள தேக்க நிலையைக் களைவதற்கு இதை விட வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை. காரணம் தமிழரசுக் கட்சி தன் தன்னிச்சையான போக்கினையும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளையும் மாற்றிக் கொள்ளப்போவதில்லை. இன்றுள்ள தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடத்திடம் அதற்கான மனப்பக்குவமோ விசாலித்த சிந்தனைகளோ விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளோ இல்லை. இவர்களை நம்பித் தமிழினம் ஏமாந்தது போதும்.

*09.04.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைத்தமிழ் மக்கள் தங்களது அரசியல் உரிமைப் போராட்டத்தின் வரலாற்றில் இன்று தெளிவானதொரு திசையறியாத இடரார்ந்த கட்டத்தில் நிற்கின்றார்கள். உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னர் ஏழரை வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்து விட்ட நிலையில் அவர்கள் தங்களது உரிமைப் போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்து நிதானத்துடனும் விவேகத்துடனும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களிலிருந்து முறையான படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்குப் பொருத்தமான முறையில் - அதேவேளை அடிப்படை அரசியல் அபிலாசைகளுக்கும் இலட்சியங்களுக்கும் சேதம் இல்லாத வகையில் தங்களது உரிமைப்போராட்டத்தை தொடருவதற்கான பாதையை வகுக்க வேண்டியவர்களாக தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

இத்தகையதொரு பின்புலத்தில் தமிழர்களின் எதிர்காலம் குறித்து தீவிரமான வாதப்பிரதிவாதங்கள் மூண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவற்றில் ஊடகங்களின் குறிப்பாக செய்திப் பத்திரிகைகளின் பங்களிப்பு அண்மைக் காலமாக மிகவும் உற்சாகம் தருவதாக இருக்கின்றது. தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஆரோக்கியமானதும் அறிவுபூர்வமானதுமான அரசியல் கருத்தாடல்களையும் விமர்சனங்களையும் ஊக்குவிப்பதற்காக 'தினக்குரல்' சனிக்கிழமை தோறும் 'புதிய பண்பாடு' என்ற மகுடத்தில் வாரஇறுதி அரசியல் இணைப்பிதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. அதற்குத் தமிழ்ச்சமூகத்தின் மத்தியிலிருந்து கிடைத்துவரும் பேராதரவு அரசியல் விவாதங்களில் வாசகர்கள் காட்டுகின்ற அக்கறைக்கு ஒரு சான்றாகும்.

மட்டு நகரிலிருந்து வெளிவரும் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையான 'செங்கதிர்' இன் ஆசிரியரும் கலை இலக்கிய அரசியல் - சமூக செயற்பாட்டாளருமான நண்பர் தம்பிப்பப்பா கோபாலகிருஷ்ணன் (செங்கதிரோன்) 'புதிய பண்பாடு' இணைப்பிதழுக்கு இடையறாது பங்களிப்பைச் செய்து வருபவராவார். அதில் வெளியான அவரின் அரசியல் ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பே 'தமிழர் அரசியலில் மாற்று சிந்தனைகள்' என்ற தலைப்பில் உங்கள் கைகளில் தவழ்கின்ற இந்த நூலாகும்.

கடந்த கால அனுபவங்களின் மூலமாக படிப்பினைகளைப்பெற்று தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு இன்றியமையாததான கருத்தாடல்களுக்கு கோபாலகிருஷ்ணன் தனது சிந்தனைகள் மூலமாக கணிசமான பங்களிப்பைச் செய்துவருகின்றார். தமிழர் அரசியல் பொதுவெளியில் ஆரோக்கியமான விவாதங்களுக்கு ஊக்குந்தரக் கூடியதாக இந்த நூலிலுள்ள அவரின் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. இது விடயத்தில் மேலும் பயனுறுதியுடைய பங்களிப்பை கோபாலகிருஷ்ணன் வழங்குவதற்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

- வீரகத்தி தனபாலசிங்கம்
(தினக்குரல்)

ISBN 978-955-659-xxx-x
9 789557 264004

விலை ரூ: 450.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org